மங்கை

அணா எட்டு
நவம்பர் 1947

பெண்களின் மாதப் பத்திரிகை





காஷ்மீர் பெண்மணியும் அவள் குழந்தையும்





அரிய புத்தகங்கள்

நாவல்கள்

வானவில்	வாண்டா வாசிலெவ்ஸ்கா	ரூ. 5-0
காதல்	,,	3-12
சுந்தரி	வ. ரா.	5- 0
பவானி	'லக்ஷ்மி'	2- 8
வனிதாலயம்	சகுந்தலா ராஜன்	2- 0
சிறு கதைகள்		
மஞ்சி விரட்டு	கொத்தமங்கலம் சுப்பு	3- 8
சஞ்சீவி	குகப்ரியை	3- 4
ஜெயகாதல் கீதம்	துர்கனேவ்	0- 8
கட்டுரைகள்		
வாழ்க்கைச் சித்திரம்	வ. ரா.	2- 8

(தபால் செலவு தனி)

பவானி பிரசுரம்

ராயவரம் : (புதுக்கோட்டை) ஸ்டேட்

பொருள் அடக்கம்

தொகுதி 2 : பகுதி 4

1947 நவம்பர்

மங்கை

பெண்களின் புத்தகம்

தொகுதி 2	சென்னை, நவம்பர் 1947	பகுதி 4

தீபாவளி

இந்தத் தீபாவளிக்கு ஒரு தனி சோபை யுண்டு. சுதந்தர சகாப்தத்தில் முதல் தீபாவளி. நம்மைத் திவாலாக்கிய அன்னிய அரக்கன் ஒழிந்து நிம்மதியாக சுதந்தரத்துடன் கொண்டாடும் தீபாவளி. ஸ்ரீ கிருஷ்ண பகவான் நரகாசுர வதம் செய்து ஜனங்களைக் காப்பாற்றினர். நமது மகாத்மா ஆங்கில அசுரனை விரட்டி யடித்து நம் கையில் சுதந்தரத்தைப் பிடித்துக் கொடுத்து விட்டார்.

இந்தப் பண்டிகை இந்தியா பூராவும் எல்லா ஜாதியாராலும் கொண்டாடப்படுகிறது. குஜராத்திக்காரர்கள் அன்று லக்ஷ்மி பூஜை செய்வார்கள். தெலுங்கர்கள் கௌரிவிரதம் செய்வார்கள். வடக்கத்திக் காரர்களுக்கு அன்றுதான் வருஷப் பிறப்பு. பட்டாடைகள் உடுத்தி, பட்டாசுகள் கொளுத்தி குதூகலமாயிருப்பார்கள். வீடுகளைத் தீபாலங்காரம் செய்வார்கள். வியாபாரிகள் அன்றுதான் புதுக் கணக்குப் புஸ்தகம் ஆரம்பிப்பார்கள்.

"மங்கள ஸ்நானம் ஆச்சோ" என்று ஒருவரை ஒருவர் விசாரித்துக் கொள்வார்கள். என்ன கிடைக்குமோ கிடைக்காதோ அன்று வருஷத்தில் ஒரு நாள் என்று மிகக் கேளிக்கையாகக் கொண்டாடுவார்கள்.

கிருஷ்ண பக்ஷத் திரயோதசி கடந்து சதுர்தசி வந்து கூடும் நேரத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் உலகத்தைத் துன்பமயமாக வாட்டிக் கொண்டிருந்த நரகாசுரனைக் கொன்று ஜனங்களை துன்பத்திலிருந்து மீட்டார். அந்த நேரத்தில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து பட்டாடைகள் உடுத்தி நானாவித நைவேத்தியங்கள் செய்து பகவானுக்கு அர்ப்பணம் செய்வார்கள்.

எங்கும் ஆனந்தமும் அழகும் தாண்டவமாடும். அந்தச் சமயத்தில் நாம் நினைவுக்குக் கொண்டு வர வேண்டிய விஷயங்கள் இரண்டுண்டு. முதலாவதாக வகுப்புப் பூசல்களால் அமைதியற்ற வட நாட்டில் தமது உடைமைகளை இழந்து சகிக்கொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் நமது சகோதரிகளுக்கு ஆதரவளிக்கும்படி அன்று நரகாசுரனை வதைத்து உலகத்துக்குச் சுபிட்சத்தை உண்டாக்கிய

கண்ணனை வேண்டுவோம். இரண்டாவதாக கத்தியின்றி துப்பாக்கியின்றி அஹிம்சையாகிய அணுக்குண்டைப் பிரயோகித்து அன்னிய ஆட்சியைக் குழிதோண்டிப் புதைத்த அண்ணல் காந்தி மகாத்மாவுக்கு ஆரோக்கிய திடகாத்திரமளித்து அவரது வகுப்பு ஒற்றுமை முயற்சியில் வெற்றியளித்து உய்விக்குமாறு பாஞ்சாலியைக் காத்த பரமனை வேண்டுவோம்.

"பிரார்த்தனையால் ஆகாத தொன்றில்லை" என்று அறிஞர் அனைவரும் பறை சாற்றுகின்றனர். அபலைகளான நாம் அனைவரும், "ஸ்ரீ ஹரே கிருஷ்ணா! துவாரகையில் வசிப்போனே! இப்பொழுது எங்குற்றனை, யாதவ குலவிளக்கே! இத்தகைய பொறுக்க முடியாத அவஸ்தை எங்களுக்குச் சம்பவித்து விட்டதே. அதை நீ எப்படிச் சகிப்பாய் அப்பா! சங்கு, சக்ர கதா பத்மஹஸ்தனான உனக்கு அனாதைகளான எங்களை ஆதரிப்பது எளிதல்லவா! ஹே கோவிந்தா, ஹே புண்டரீகாட்சா! உனையே சரணடைந்தோம். அன்று பாஞ்சாலியின் மானத்தைக் காக்க பல பட்டாடைகளை நெய்து வீசினாய். இன்று கொடிய வகுப்புவாதப் பேயால் பிடிக்கப் பட்டவர்களால் விவரிக்க முடியாத துயரங்களுக்கு ஆளாகியிருக்கும் எம் சகோதரிகளின் மானத்தை இரட்சிப்பா, கமலக்கண்ணா! கார்வண்ணா! கருணை வள்ளலே" "என்று வினய பூர்வமாக வேண்டுவோமாக!



நம்பிக்கைதான் நாளையப் பொழுதைப் இன்பகரமாகக் கற்பனை செய்யத் தூண்டுகிறது. இன்றைய துன்பங்களை மறந்து நாளைய இன்ப நிலையைச் சித்தரிக்க, நமக்குப் பெரிதும் துணையாயிருக்கும் நம்பிக்கையைப் பெறுவோமாக.

—'டாக்டர் வால்ஷ்'

குங்குமப் பூ

மு. அருணாசலம்

மிகவும் அதிக விலை மதிப்புள்ள வாசனைச் சரக்குகளில், குங்குமப் பூ முக்கியமானது. இது சுமார் ஒரு சாண் உயரமுள்ள ஒருவகைச் சிறு செடி அல்லது பூண்டின் பூவிலிருந்து கிடைக்கிறது. பூவின் கருவை மூடியிருக்கும் மெல்லிய கம்பிகள் அல்லது மகரந்தத் தூள்களே நாம் குங்குமப் பூ என்று வழங்கும் சரக்கு. இது குங்கும நிறம் பெற்றிருத்தலால் குங்குமப் பூ என்று பெயர் பெற்றது. பாரசீகம், சீனம் முதலான அன்னிய நாடுகளிலும், இந்தியாவில் காஷ்மீரத்திலும் இதைப் பயிரிடுகிறார்கள்.

ஆடம்பரமான சமையலுக்கும், பலகார வகைகளுக்கும் குங்குமப் பூ இன்றியமையாத சரக்கு. நெற்றியில் திலகமிடுவதற்குக்கூட இதை ஆதியில் உபயோகித்தார்களென்று தெரிகிறது. சிறந்த மணமும் பொன்னிறமும் தரும் பொருட்டு இதைப் பாயசம் முதலான உயர்ந்த பலகார வகைகளில் சேர்த்து வருகிறோம். மணத்தோடு, ஒருவித மினுமினுப்பும் இதற்குண்டு. மிகவும் புராதனமானது.

வெப்ப நாட்டில் சிறிதே வெப்பம் குறைந்து குளிர்ச்சியுள்ள பகுதியில் இச் செடி பயிராக வல்லது. வேரினடியில் சிறு கிழங்குகளைக் காணலாம். இவற்றைப் பெயர்த்து நட்டால் செடிகள் உற்பத்தியாகும். இவை பயிரிட்ட இடத்தில் அப்படியே பத்துப் பதினைந்து வருஷம் வரையில் இருந்து வரலாம். காஷ்மீரத்தில் இது ஐப்பசி-கார்த்திகையில் பூக்குமாம்.

காலையில் பூ விரியத் தொடங்கினவுடனே, அன்றன்றும் பூக்களைக் கொய்து, மகரந்தத்தூள்களைக் கையால் எடுத்துச் சேர்த்து உடனே உலர்த்திவிடுகிறார்கள். அதிக வெப்பமில்லாத ஒரு கணப்பின் மேல் நெருக்கமாய்ப் பின்னிய கம்பி வலை அல்லது சல்லடையின்மேல் இதைப் பரப்பி உலர்த்துகிறார்கள். நன்றாய் உலர்ந்தவுடனே சற்றும் தாமதமில்லாமல் எடுத்து டப்பிகளிலோ வேறு பாத்திரங்களிலோ போட்டுச் சிப்பம் செய்கிறார்கள்.

ஓர் ஏகரா நிலத்தில் பயிராகிற செடிகள் சுமார் முப்பது ராத்தல் குங்குமப் பூ தரக்கூடும். ஒரு ராத்தல் குங்குமப் பூ வேண்டுமென்றால், சுமார் 40 ஆயிரம் செடிகளிலிருந்து மகரந்தத்தூள் சேகரிக்க வேண்டுமாம். ஆகவே, இது விலை அதிகமாயிருப்பதில் வியப்பில்லை.

ஆதிகாலம் முதல் குங்குமப் பூ நம்மிடையே வைத்தியத் தொழி

துக்கு அதிகமாய் உபயோகப் பட்டு வருகிறது. ஜன்னியைப் போக்கி வெப்பந் தருதல்; பசி, காமவுணர்ச்சி முதலியவற்றைத் தூண்டிவிடுதல்; இசிவு போக்குதல் முதலியன இதன் குணங்களிற் சில. கருத் தரித்திருக்கும் தாய்மார் குங்குமப் பூவை வெற்றிலையில் சேர்த்துத் தின்பதும், பாலிலிட்டுக் குடிப்பதும் நன்மை தரும். நெற்றியில் பற்றுப் போட்டால் தலை வலி, ஜலதோஷம் ஆகியன நீங்கும். பிரசவ சம்பந்தமான கோளாறுகள், கைக் குழந்தைகளுக்கு வரும் பலவித நோய்கள் ஆகியவற்றுக்கு, வெவ்வேறு பக்குவத்தில் குங்குமப் பூவை நாட்டு வைத்தியர்கள் உபயோகிக்கிறார்கள். சில கண் நோய்களுக்கும் இது மிகவும் நல்லது.

சாதாரணமாய்க் கடையில் விற்கிற சரக்கு, குங்குமப் பூ அன்று; இது குசும்பா என்று சொல்லுகிற செந்துருக்கத்தின் பூ; இந்தியாவில் இது அதிகமுண்டு. இப் பூ சாயத் தொழிலுக்கே முற்காலத்தில் பெரிதும் பயன்பட்டு வந்தது. இப்போது இதன் விதையிலிருந்து வரும் எண்ணெய்க்காகவே வட இந்தியாவெங்கும் இதைச் சாகுபடி செய்கிறார்கள். இதன் பூவில் உண்மையான குங்குமப் பூவின் மணத்தைச் சிறிது ஊட்டி, குங்குமப் பூ என்றே விற்பனை செய்கிறார்கள்.

குசும்பா எண்ணெய் வட இந்தியாவெங்கும் சமையலுக்கே பயன்படுகிறது; சம அளவு வர்ணம் பூசும் தொழிலிலும் செலவாகிறது.



வைரம், புஷ்பராகம்போன்ற உயர்ந்த கற்களைப் பதித்த நகைகளை சோப்பினால் கழுவக்கூடாது. அதி சீக்கிரமாக தன் இயற்கைப் பிரகாசத்தையும் கவர்ச்சியையும் இழந்துவிட இது காரணமாகிறது.

ராஜகுமாரி அம்ருதகௌரி

'பெண்மணி'

"இவருடைய பேச்சிலும் எழுத்திலும் எப்போதும் ஒரு தனி விசேஷம் காணப்படுகிறது. சீக்கிரத்தில் மனம் உருகி விடுகிறவர் என்பதை அவற்றிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். வாழ்க்கையின் பல்வேறு பிரச்னைகளை வெற்றிகரமாகக் கடந்தவர் இவர். தாம் காணும் வறுமையையும் இழிவையும் கண்டு ஆத்திரப்படுகிறார். அதே சமயத்தில் அடக்கமும் பெருமையும் கொண்ட மனோநிலையை அடையும்பாக்கியத்தையும் இவர் பெற்றிருக்கிறார். இதனால் தமது ஆத்திரத்தையெல்லாம் நிர்மாண முயற்சியின் உருப்படியான வழிகளில் திருப்பி, பொதுமக்களுக்கு நன்மை செய்வதில் தமது சக்தியைச் செலவிட முடிகிறது" என்று மனித குலத்தின் மாணிக்கம் என்று மகாத்மா காந்தியால் புகழப்படும் பண்டித ஜவாஹர்லால் நேரு—இந்தியாவின் பிரதம மந்திரி—இப்பொழுது இந்திய சர்க்காரில் சுகாதார மந்திரியாகவுள்ள ராஜகுமாரி அம்ருத கௌரியைப் பற்றி முன்னர் எழுதி இருக்கிறார்.



இப்போதைய கபூர்த்தலா மன்னருடைய காலஞ் சென்ற மாமா, ராஜா ஸர். ஹரிநாம சிங்கின் ஒரே புதல்வி அம்ருதகௌரி. இவருக்குச் சகோதரர்கள் ஆறு பேர்கள். அவர்களில் ஒருவர் தான் ஸர். மகாராஜ் சிங்—ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் இந்தியாவின் கட்சியைத் திறமையாக எடுத்துக் கூறியவர்களில் ஒருவர்.

ராஜா ஹரிநாம சிங் பல வருஷங்களுக்கு வைசிராயின் நிர்வாக சபை மெம்பராக இருந்திருக்கிறார். ராஜா என்பது பரம்பரைப் பட்டமாகும். இவர் தமது குடும்பத்துடன் கிறிஸ்தவரானதும் கபூர்தலா தர்பாரால் ராஜ குடும்ப உரிமைகள் பறிக்கப்பட்டது. ராஜகுமாரி அம்ருதகௌரி 1887-ல் பிறந்தார். பிரிட்டனில் டோர்ஸெட்ஷயரிலும், லண்டனிலும் பெண்கள்

பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்றார். இப்பொழுது பார்ப்பதற்கு அவர் பூஞ்சையாக தோன்றுகிற போதிலும இளமைப் பருவத்தில் பலசாலியாக இருந்தவர்; டென்னிஸ் பந்தயங்களில் பல பரிசுகள் பெற்றிருக்கிறார்.

தலைவர்களுடன் பரிச்சயம்

அம்ருத கௌரியின் தாயார் ஆரோக்கியம் குன்றியிருந்ததால் வீடு வாசல்களைச் சரிவர கவனித்துக்கொள்ளும் பொறுப்பு பெண்ணுக்கு வந்து சேர்ந்தது. ராஜா ஹரிநாம சிங் முற்போக்கான கருத்துக்கள் உடையவர். அநேக ராஜீய வாதிகளும் ராஜ தந்திரிகளும் அறிவாளிகளும் அவரது ஜாகைக்கு வருவதுண்டு. கோகலே, சுரேந்திரநாத் பானர்ஜி, பண்டித மாளவ்யா போன்றவர்கள் வருவார்கள். அப்போது அவர்களுடன் அம்ருத கௌரிக்கு பரிசயம் ஏற்பட்டது. அவர்களுடன் பொது விவகாரங்கள் பற்றி பேசி, பல விஷயங்களை கிரஹித்துக் கொண்டார்.

பெண்கள் உரிமைக்காகப் பாடுபட்டவர்

இந்தியாவில் மாதர் இயக்கத்திற்குப் பெரிய தூணாக விளங்குகிறார் ஸ்ரீமதி அம்ருத கௌரி. அகில இந்திய மாதர் ஸ்தாபனத்தை ஆரம்பித்தவர்களில் இவரும் ஒருவர். வட்டமேஜை மகாநாடு நடக்கையில், பெண்களின் பிரதிநிதித்துவத்திற்காக இவர் கிளர்ச்சி செய்திருக்கிறார். கூட்டுத் தொகுதி முறையும் மற்றும் பல சீர்திருத்தங்களையும் வற்புறுத்தி யிருக்கிறார். அன்னி பெஸண்ட், சரோஜனி ஆகியவர்களுடைய ரகத்தைச் சேர்ந்தவர் ஸ்ரீமதி அம்ருத கௌரி.

இவருக்கு காந்தீயத்தில் அபார நம்பிக்கை யுண்டு. காந்திஜிக்கு காரியதரிசி வேலை பார்க்க பங்கி காலனியிலும் எவ்வளவோ நாட்களுக்கு இந்த ராஜகுமாரி வசித்திருக்கிறார். தூய்மையான உள்ளம் படைத்த இந்த தேச சேவகியிடம் மகாத்மாவுக்கு அபார நம்பிக்கை யுண்டு. பிரதானமாக அவருடைய சிபார்சின் பேரிலேயே மத்ய சர்க்காரில் அம்ருத கௌரி மந்திரியாக இருப்பதாகச் சொல்லலாம். வேறு யாரேனும் வற்புறுத்தி யிருந்தால்கூட அம்ருத கௌரி இந்தப்பதவியை ஏற்க சம்மதித்திருப்பாரா என்பது சந்தேகமே. காந்திஜி கட்டளையிட்டார். அதனால் பொறுப்பை ஏற்க சிஷ்யை மறுக்க முடியவில்லை.

அம்ருத கௌரிக்கு லேடி மௌண்ட்பேட்டன் பின் வரும் புகழ் மாலை சூட்டி யிருக்கிறார்; "சமூக சர்வீஸ்களை நிர்மாணிக்கும் மாபெரும் வேலை இந்தியாவை எதிர்நோக்கி யிருக்கிறது. என்னுடைய ஆத்ம நண்பர் ராஜகுமாரி அம்ருத கௌரி இந்தச் சவாலை ஏற்பார் என்பதில் எனக்குச் சந்தேகமே யில்லை. ஏனெனில் அவருக்கு அபார சக்தியும், தீர்க்க திருஷ்டியும், விஷய ஞானமும் இருக்கின்றன. அவருக்குத் தகுதியுள்ள சகாக்களின் சகாயமும் கிடைக்கும்."

இப்பொழுது உண்மையிலேயே இந்திய சர்க்காரில் அதிக ஜோலிகள் உள்ள மந்திரிகளில் ஒருவராக சுகாதார மந்திரி விளங்குகிறார். மேற்கு பஞ்சாபிலிருந்து வரும் லக்ஷக் கணக்கான அகதிகளுக்கு நிவாரண வேலையிலும், அவர்கள் முகாம்களில் சுகாதாரம் நிலவுமாறு பார்த்துக் கொள்வதிலும் அம்ருத கௌரி

யின் முழு கவனமும் சென்றிருக்கிறது. கணவர்களை இழந்த பெண்மணிகளின் கவலைகளை அவர் துடைக்கிறார்; ஆறுதல் சொல்லுகிறார்; ஜீவனோபாயத்திற்கு வழி தேடுகிறார். தாய் தகப்பன்களை இழந்து வந்துள்ள அனாதைகளை அணைத்து, ஆறுதல் சொல்லுகிறார். அவர்களுடைய படிப்புக்கும் சாப்பாட்டுக்கும் வழி தேடுகிறார். இவர்களுடைய மனமெல்லாம் நொந்து, கொடித் திக்கையில், பெண் உள்ளங்களில் மிகவும் மிருதுவான உள்ளம் படைத்த அம்ருத கௌரியின் மனம் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்? கலகங்கள் நின்று, பெண்களின் கண்ணீர் இனியாவது நிற்கட்டும் என்று அவர் வேண்டிக் கொள்கிறார். பிரார்த்தனைக்குப் பலன் கிடைக்காமற் போகாது. கலவரங்கள் ஓய்ந்து வருகின்றன. பரிபூர்ணமாக நின்றால், இந்தியாவின் சுகாதார மந்திரியான நம் ராஜகுமாரிக்குச் சற்று ஓய்வு கிடைக்கும். சாந்தி நிலவ வேண்டுமென்று நாமும் ஆண்டவனை வேண்டுவோமாக!



டில்லியில் குவிந்துள்ள அகதிகளுக்காக வசூலிக்கப்பெற்ற கம்பளிப் போர்வைகளை சமூக சேவிகள் எடுத்துச் செல்லுகிறார்கள்.

சுதந்தரத் தீபாவளி

சுரபி

மங்கை : இட்டிலி தோசைக் கரிசியில்லை—கூட
இட்டு அரைக்க உளுந்துமில்லை
சட்டினிக்கோர் முடி தேங்காயில்லை—இந்தச்
சங்கடத் தீவாளி ஏதுக்கடி

நங்கை : இட்டிலி தோசைக்குத் தீவளியோ—நத்தம்
இதயம் மலர்ந்திடத் தீவளியோ
இட்டிலிக் கேசர் துளி சட்டினியோ—இல்லை
சட்டினிக் காகத்தான் இட்டிலியோ

மங்கை : தேய்த்து முழுகிட எண்ணெயில்லை—எண்ணெய்ச்
சிக்கை யெடுக்கப் பொடியுமில்லை
ஏய்த்துப் பறிப்பவர் எக்காளம் போடட்டும்
ஏழைக்குப் பண்டிகை ஏதுக்கடி


நங்கை : எண்ணெய்க் கிணற்றில் முழுகிவிட்டால்—மன
எண்ணக் கறைகள் வெளுத்திடுமோ
மண்டை யுலர்ந்தவர் மாமலர் தூவிடில்
மாயன் வதனம் களித்திடுமோ

மங்கை : பஞ்சுப் புடவைக்குச் சீட்டுமில்லை—நல்ல
பட்டுப் புடவைக்குத் துட்டுமில்லை
நஞ்சதைக் கட்டியே காலங் கழிக்கிறோம்
நாளுங் கிழமையு மேதுக்கடி

நங்கை : ஞானம் மறந்து வருந்துகிறாய்—அந்த
நம்பன் திகம்பரன் அல்லனோடி
மானம் மறைத்திடச் சேலைகளோ—மன
வஞ்சம் மறைத்திடச் சேலைகளோ

மங்கை : அச்சமும் பொய்ம்மையும் சுற்றுதடி—எங்கும்
அக்கிரமங்களே முற்றுதடி
நச்சுப் படலம்போல் பாழிருள் சூழ்கையில்
நாணிடுங் கைவிளக் கேதுக்கடி

நங்கை : நச்சிருள் வாழ்வு தொலைந்ததேடி—என்றும்
நந்தாச் சுதந்தரம் வந்ததேடி
இச்சக மெங்கணும் இன்பச் சுதந்தரம்
ஏறிடத் தீபத்தை ஏற்றிடடி



நன்றிக் குழந்தைகள்

ஸ்ரீமதி ரங்கதேவி சதாசிவம்

“துளி நன்றி விசுவாசமில்லை. வெறும் கழுதைகள்! இதுகளைப் பெற்று வளர்த்ததைவிட ஏதாவது கோயில் குளங்களுக்குச் செய்திருந்தாலாவது போகிற வழிக்குப் புண்ணியமுண்டு” என்று பார்வதியம்மாள் தலையிலடித்துக் கொண்டு உச்சஸ்தாயியில் சொல்வது கேட்டு எனக்கு உடம்பு முழுதும் ஏதோ வேதனை உண்டாயிற்று. அது அடங்குவதற்குள் வீட்டு வேலை செய்யும் அங்கம்மா தன் பெண்ணைக் குறை கூறுவது காதில் விழுந்தது. “அடி முனியம்மா, உன்னைப் பெத்ததைவிட ஒரு கூடை சாணி தட்டியிருக்கலாம்டி,” என்கிறாள்.

இவ்வாறு பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் தங்களுக்கு நன்றி விசுவாசத்துடன் ஒத்தாசை செய்வதில்லை என்று கூறுவதை எல்லோரும் கேட்டிருப்பார்கள். அத்தகைய பெற்றோர்களைக் கண்டால் எனக்கு அருவருப்பும் அசூயையும் உண்டாகிறது.

“நானா ‘என்னைப் பெற்றுக் கொள்’ என்றுன்னை வேண்டினேன்” என்று குழந்தைகள் கேட்டால் அவர்களை அதிகப் பிரசங்கி என்று தலையில் குட்ட வருவார்கள். அவர்கள் கேட்பது வாஸ்தவமென்றும் அவர்கள் தங்களுக்குக் குழந்தைகளாக வரவேண்டுமென்றும் வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டி புத்திரகாமேஷ்டி யாகம் செய்தவர்கள் தாங்களே தான் என்னும் ஞானோதயம் குழந்தைகள் பிறந்தவுடன் பல பெற்றோர்களுக்கு அஸ்தமித்து விடுகிறது.

எங்கேயாவது ஒருவர் தமது கடமையைச் செய்ததற்காக அவருக்கு நன்றி செலுத்துவதுண்டா? அப்படியென்றால் தெருக்களைச் சுத்தமாக வைத்திருப்பதற்காகத் தோட்டிகளுக்கும் நமது உடமைகளைத் திருடர்கள் கொண்டு போகாததற்கும் சதா நாம் நன்றி செலுத்திக் கொண்டே இருக்க வேண்டுமல்லவா?

குழந்தைகளின் மழலை இன்பத்தை அனுபவிக்கவும் இயற்கையன்னை உள்ளத்தில் ஆழப் புதைத்திருக்கும் வர்க்க வளர்ச்சி உணர்ச்சி வேகத்தை தணிப்பதற்காகவும் மக்கட்பேறு விரும்புகிறவர்கள், அம்மக்களைச் செவ்வனே வளர்க்கக் கடமைப் பட்டவர்கள். அந்தக்கடமையை செலுத்துவதற்காக. அவர்கள் மக்களிடமிருந்து எதையும் எதிர்பார்ப்பது தவறான மனப்பான்மையையே காட்டுகிறது. ஆனால் அவர்கள் தங்கள் குழந்தைகளிடம் கலப்பற்ற அன்பைச் செலுத்தினால் பிரதியாக அவர்களின் அன்பை அடையலாம்.

பாகீரதி பாட்டிக்கு வயது எழுபதாகியும் தன் குழந்தை

நாச்சாமி இன்னும் பால்மணம் மறவாத பச்சிளங் குழந்தை என்றுதான் நினைவு. நாகசாமி அவர்கள் கொள் பேரன் எடுத்திருந்தும் அவர் தம் தாயாரைக் கேட்காமல் தன் மனைவிக்கு ஒரு புடவை வாங்கச் சுதந்தர மில்லை. உடனே காண்டு செலவில்லாமல் ரேடியோவும் சாவி கொடுக்காமல் கிராம போனும் சேர்ந்து பாட ஆரம்பித்து விடும்.

"ஏண்டா நாச்சாமி, நானொருத்தி யிருக்கேன்னு கூட உனக்கு மறந்து போயிடுத்தா? உன்னைச் சொல்வானேன். என் புத்தியைச் செருப்பாலடிக்க வேண்டும். கையில் நாலுகாசு வைத்துக் கொள்ளாமல் உன் படிப்புக் கென்றும் கல்யாணத்திற்கென்றும் கார்த்திக்கென்றும் மங்கிலியத்தைக்கூட விற்று செலவழித்தாய் விட்டது" என்று பதநாவது கோடி முறையாகத் தாயார் கீறல் விழுந்த கிராம போன் பிளேட்டைப் போலச் சொல்லும்போது ஸ்ரீ நாகசாமி அவர்களின் மனோபாவத்தை நீங்களேதான் ஊகித்துக் கொள்ள வேண்டும். வயதாக வயதாகத் தன் குழந்தைகளுக்குத் தன்னைத் தவிர வேறு பந்துக்களும் ஏற்படுகிறார்கள் என்பதை எந்தத் தாயாரும் மறந்து விடக் கூடாது. எத்தனை பெண்கள் சந்தோஷமான இல்லற வாழ்க்கையை இழந்திருக்கிறார்கள். இத்தகைய பெற்றோர்களின் தவறான அன்பு காரணமாக என்னுடைய சிநேகிதை சகுந்தலாவுக்கு ஏழாவது வயதில் அவள் பெற்றோர்கள் கல்யாணம் செய்தார்கள். கல்யாணமான ஒரு மாதத்திற்குள் அவள் கணவன் மாண்டான். அவள் கலாசாலையில் படிக்கும்போது ஒரு மாணவனை மணம் செய்து கொள்ள விரும்பினாள். அவனும் அவன் பெற்றோர்களும் இசைந்தனர். ஆனால் சகுந்தலாவின் வயதுமுதிர்ந்த தாய் சம்மதிக்காததால் அவள் தனிமையில் தன் எஞ்சியுள்ள காலத்தைக் கழிக்க வேண்டி யிருக்கிறது.

பெண் கண்ணிலறந்த கணவனை விரும்புகிறாள். ஆனால் பெற்றோர் அவனைப் பணத்திற் காசைப்பட்டு அவனை அவள் வெறுப்பவருக்கு விவாகம் செய்விக்கின்றனர். இத்தகைய கொடுங்கோன்மைகள் நம் நாட்டில் எண்ணில்லாதவை. இவ்வாறு பெற்றோர்கள் கொடுங்கோலாட்சி புரிவதைத் தடுக்கச் சட்டம் செய்ய வேண்டுமென்று கெல்லாம், "நன்றி கெட்டது, கூடச் சொல்லுவேன். குழந்தைகளுக்கு அன்பிலும் சுதந்தரம் இருக்கவேண்டும். நமக்கு அரைப் பலம் சர்க்கரை கொடுக்கவில்லை என்று அடுத்த வீட்டாரிடம் பூசல் இருக்கலாம். ஆனால் நமது குழந்தைகள் அவர்களுடன் அன்புடன் பழகுவதைக் கண்டு நாம் அசூயை கொண்டு அவர்களைக் கண்டிக்கக்கூடாது. சியாம சுந்தரி என்னைப் பார்க்க வந்தாள். அதிக நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டாள். "அம்மா கோபித்துக் கொள்ள மாட்டாளா?" என்று கேட்டேன்.

"எங்கம்மா, என்னைக் கோபித்துக் கொள்ளவே மாட்டாளே. நாங்களும் அம்மாவுக்குக் கோபம் வரும்படி நடக்கவே மாட்டோமே. எங்களுக்கு வருத்தம் உண்டாகிற வார்த்தைகளை அம்மா சொல்லவே மாட்டாள்.

எல்லாப் பெற்றோர்களும் சியாமசுந்தரியின் தாயாரைப் போல இருந்தால் குழந்தைகள் பாடு கொண்டாட்டம் தான்.

வீடும் வெளியும்

"லக்ஷ்மி"

மைசூர் போண்டா, கல்கத்தா ரசகுல்லா, பாம்பே ஹல்வா என்று ஓட்டல் பையன் விதவிதமான பெயரை அடுக்கிக் கொண்டு போகும்போது பசியும் களைப்புமாக பஸ்ஸிலிருந்து இறங்கி எதிரே இருக்கும் ஓட்டலுக்குள் நுழைந்த மனிதனுக்கு எப்படி இருக்கிறது? அவனிருக்கும் பசியில் பாம்பேயையும் கல்கத்தாவையுமே போண்டாவாக சாப்பிட்டுவிடத் தயாராக இருக்கிறான்.

பையன் மேஜை மீது கொண்டு வந்து வைத்த பலகாரத்தை ஒரே விழுங்காக விழுங்கித் தனது பசியைச் சற்றுத் தணித்துக் கொண்ட பின்புதான் கண்கள் பக்கத்து மேஜைகளின் பக்கம் திரும்புகிறது. எத்தனை கூட்டம்? புருஷனும் மனைவியும், குழந்தைகளும் அல்லவா ஹோட்டலுக்கு வந்திருக்கிறார்கள் என்று தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களைப் பார்த்து வியப்பில் மூழ்கி விடுகிறான். மின்சார விசிறி சுழலும் ஓசையும், பிளேட்டுகளுடன் கரண்டிகள் உராய்கையில் ஏற்படும் நாதமும் சுற்றிலுமுள்ளவர்கள் பேசுவதனால் ஏற்படும் சத்தமும், வாசலில் அலறிக் கொண்டிருக்கும் ரேடியோவின் ஒலியும் சேர்ந்து ஸ்பூனல் நாசூக்காக டில்லி தர்பாரை எடுத்துத் தொண்டைவரைத் திணித்துக் கொள்ளும் அந்த நாகரீக புருஷனுக்கு இந்திர லோகத்திலிருப்பதாக ஒரு பிரமையை உண்டு பண்ணுகிறது.

ரேஷன் காலத்திலும் விடாது கருப்பு, பச்சை, மார்க்கெட்டுகளில் வாங்கிய சர்க்கரையினால் செய்த பதார்த்தங்கள் உண்மையிலேயே மணமும் சுவையுமுள்ளதாக இருக்கக்கூடும். ஆனால் அவைகளைக் கொண்டு வந்து நாகரீகமாக நம்முன்னால் வைக்கும் பிளேட்டுகள், எடுத்து சாப்பிட வைக்கின்ற கரண்டிகள் மேஜையைத் துடைக்க உபயோகிக்கும் துணிகள், இவைகளின் பரிசுத்த நிலைமை தெரிந்தால் அப்பப்பா வீட்டை விட்டு கிளம்புவோமா? வெளியே போனால் பல்லைக் கடித்துக் கொண்டு தண்ணீர் கூட குடிக்காது வீட்டிற்கு ஓடி வந்து விடமாட்டோமா?

பாத்திரங்களை எச்சில் செய்து தண்ணீர் சாப்பிடக் கூடாது, ஒருவன் எச்சில் செய்த பாத்திரத்தை இன்னொருவன் சரியாக சுத்தம் செய்யாதவரைத் தொடக் கூடாது என்ற விதிகளை நம்முன்னோர்கள் கையாண்டதிற்கு அர்த்தமில்லாமல் போகவில்லை.

நாகரீகத்தின் முற்போக்கில் முதன்மையாக நிற்கும் லண்டன் நகரத்தின் சுகாதார அதிகாரிகள் ஹோட்டல்களின் பரிசுத்த நிலைமையைத் திடீரென பரிசோதிக்க எண்ணினார்கள், பிரபல ஹோட்டல்கள், சிறு டீக் கடைகள், சிற்றுண்டி சாலைகள், குழந்தைகளின் போஷணைசாலைகள், பள்ளிக்கூடத்து ஹோட்டல்கள் முதலிய இடங்களின் சமையற்கட்டுகளுக்கு திடீர் விஜயம் செய்து பார்வையிட்டனர்.

கைகழுவ உபயோகிக்கும் தண்ணீர், சிற்றுண்டிகள் பரிமாறும் பீங்கான் பிளேட்டுகள், காப்பியருந்தும் கோப்பைகள்,

மேஜை துடைக்கும் துணிகள் இவைகளை நுட்பமாகப் பரிசோதனை செய்ததில் கண்டு பிடித்த உண்மைகள் அதிகாரிகளையே திடுக்கிட வைத்தது!

ஆகாரத்தை எடுத்துண்ண உதவும் சிறு கரண்டிகளில் அநேகம் கரண்டிகளில் தொண்டையை ரணப்படுத்தும் 'ஸ்ரெப்டோகாக்கை' என்னும் விஷக் கிருமிகளும் வயிற்றுப் போக்கை உண்டுபண்ணும் 'டிஸன்றி' கிருமிகளும் ஏராளமாக இருந்தனவாம்.

கோப்பை, தட்டுகள் இவைகளில் அநேகமாக ஸ்ரெப்டோகாக்கை, டிஸன்ரிபாஸலஸ் முதலிய கிருமிகள் அபரிமிதமாக நிறைந்து கொண்டிருந்தனவாம்.

மேற்கண்ட பாத்திரங்களைக் கழுவவும், சாப்பிட வருகிறவர்கள் வாய் கொப்பளிக்கவும் உபயோகப்படுத்தும் தண்ணீரைக் கொஞ்சம் எடுத்துச் சென்று பரிசோதனை செய்ததில், ஒரு சொட்டுத் தண்ணீரில் லக்ஷக்கணக்கான விஷக் கிருமிகள் இருப்பதைக் கண்டார்களாம். கிருமிகளின் எண்ணிக்கையை ஆராய்ந்து பார்த்ததில் ஒரு சொட்டு நீரில் உள்ள கிருமிகள் லண்டன்மாநகரத்துச் சாக்கடையின் ஒரு சொட்டு நீரில் உள்ள கிருமிகளின் எண்ணிக்கைக்குச் சரியாக இருந்ததாம்!

கிருமிகளைப் பொறுத்தவரை ஹோட்டலில் வைத்திருக்கும் வாய் கொப்பளிக்கும் தண்ணீர் சாக்கடை நீருக்குச் சமம் என்று சுகாதார அதிகாரிகள் கண்டு மலைத்து விட்டனர்.

இதைத் தவிர மேஜை துடைக்கும் துணிகள், கை துடைக்க வைத்திருக்கும் சலவை செய்த துண்டுகள் யாவும் கிருமிகள் மயமாக இருந்தனவாம்.

நாகரிகத்தின் உச்சியிலிருக்கும் லண்டன் நகரத்து ஹோட்டல்களின் சுகாதார நிலைமை இப்படி இருக்குமானால் நம் நாட்டு ஹோட்டல்களைப் பற்றி சொல்ல வேண்டுமா? சமையற் கட்டிற்குள் சென்று பார்த்தால் சாத்தியப்படுமா? 'கண்களை மூடிக் கொண்டு ராமா, ராமா என்று ஜெபித்துக் கொண்டு சாப்பிட வேண்டியதுதான்' என்று சிலர் முரட்டு விவாதம் செய்கிறார்கள். அப்படியாவது ஹோட்டல்களில் சாப்பிடவேண்டுமென்று எங்கே சொல்லியிருக்கிறது? கூடியவரை வீட்டிலேயே சாப்பாட்டை முடித்துக் கொள்ளும் வழக்கத்தை நாம் கையாள முயல வேண்டும். பகல் போஜனத்திற்கோ, டிபனுக்கோ வீட்டுக்கு வர முடியாத தூரத்தில் தொழில் இருக்குமானால் கையில் நமது பிற்பகல் ஆகாரத்தைப் பொட்டலமாக எடுத்துப் போவதில் சிரமம் ஒன்றும் இல்லை.

டைபாய்டு வயிற்றுப்போக்கு, தொண்டைப் புண் முதலிய தொத்து வியாதிகள் ஆகாரத்தின் மூலமாகஹோட்டல்களின் வழியாக வெகு விரைவில் பரவுகின்றன. இதைத்தவிர ரேஷன் காலம் என்ற சாக்கில் கடலைமாவு முதல் மண்வரையில் தாராளமாக கலந்து செய்த ஹோட்டல் தோசையைச் சாப்பிட்டு விட்டால்தான் என்ன? பணத்திற்குப் பணம் நஷ்டம். வயிற்று நோவிற்கு வேறு டாக்டர் பில்! வீட்டை விட்டு வெளியே போய் வம்பை விலைக்கு வாங்குவானேன்!

குஜராத்திக் கதை



திக்குவாயன்

எழுதியவர்: ராமகேது மொழிபெயர்ப்பு: எச். விஜயகுமார்

இன்று எவ்வளவோ வருடங்கள் கழிந்துவிட்டன. அப்போதும் கூட அந்த இரக்கமும் அன்பும் வழியும் முகம் இன்று என் கண் முன் வந்து நிற்கிறது. எனக்கு ஒரு சகோதரனும் இரண்டு சகோதரிகளும் இருந்தனர். என் சகோதரன் என்னை விடப் பெரியவன். பார்ப்பதற்கு நல்ல அழகுடனும் வசீகரமாகவும் இருந்தான். என் சகோதரிகள் என்னைவிட இளையவர்கள் என் அன்னையின் அழகு அவர்களுக்கு அப்படியே வாரிசாகக் கிடைத்திருந்தது. இவ்வித அழகும் பொலிவும் நிறைந்த குடும்பத்தில் நான் மட்டும் தனிப்பட்டவனாக விளங்கினேன். எனக்கு அழகு இருக்கவில்லை. அப்படித்தான் கோரமாக விளங்கினேன் என்றால் வாய்கூடவா திக்குவாயாக இருக்கவேண்டும்? என் அன்னை, தந்தை, உடன் பிறந்தோர் முதலியவர்கள் உட்கார்ந்து சுவாரசியமாகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது நான் அங்கு தெரியாமல் நுழைந்துவிட்டால் போதும்! அவர்களனைவருடைய மகிழ்ச்சியின் மீது திரை விழுந்து விடும். வீட்டில் யாராவது விருந்தாளிகளாக வந்தால் நான் எங்காவது போய் ஒளிந்து கொள்ள வேண்டும். தவறினால் பலவந்தமாக ஒளிக்கப்பட்டு விடுவேன். அப்பாவைப் பார்ப்பதற்கு யாராவது வந்தாலும் கூட நான் போய் ஒளிந்துகொள்வேன். என் கூடப் பிறந்தவர்கள் ஆனந்தமாக உல்லாசமாக விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது என்னைப் பார்த்து விட்டால் அவர்களுடைய மகிழ்ச்சியும் உற்சாகமும் ஏனோ- எங்கோ மாயமாக மறைந்து விடும். வீட்டில் ஏதாவது நல்லது கெட்டது வந்தால் என்னை என்ன செய்வது என்பது பற்றி எல்லாரும் கவலை கொள்ள ஆரம்பித்து விடுவார்கள்.

இவ்விதம் அப்பா கவலைப் பட்டுக்கொண்டிருக்கும் போதும் சகோதர சகோதரியர் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போதும் கூட எனது அன்னையின் அன்பு கனிந்த அருள் பார்வை என்னை நோக்கிக் கொண்டே இருக்கும்; எனக்கு எவ்வித குறைவோ - அங்கஹீனமோ- இல்லாதது போலவும் என்னையே அழகன் என்றும் நினைத்துக் கொண்டிருக்கும் என் அன்னையின் அன்புக் கரங்கள் என் முதுகைத் தடவி, துடித்துக் கொண்டிருக்கும் என் மனதைச் சாந்தியுறச் செய்யும். எங்காவது வெளியே போக வேண்டி வந்தால் கன்னங் கரேலென்ற முகத்தைக் கொஞ்சமாவது அழகுள்ளதாகச் செய்ய வேண்டுமென்று எண்ணி முகத்துக்குப்

பவுடர் போட்டுத் தலைக்கு எண்ணை போட்டு அழகாக வாரி அழகு பார்த்து முத்தம் கொடுத்து அனுப்புவாள்.

நான் விகாரமானவன் - அழகற்றவன், என்ற எண்ணம் நாளுக்கு நாள் என் மனதில் உரமேறிக் கொண்டே வந்தது. ஆகவே நாளடைவில் நான் வெளியே விளையாடச் செல்வதைக் கூட நிறுத்தி விட்டேன். என் சகோதர சகோதரியர்கள் என்னைப் பார்த்தால் "அந்தப் பக்கம் போ!" என்று வெறுப்புடன் சொல்லி விடுவார்கள். நீர் ததும்பும் கண்களுடன் நான் அங்கிருந்து அகன்று விடுவேன். என் தந்தை என்னைப் பார்த்து "போய் விளையாடு" என்று அன்பு ததும்பச் சொல்லுவார். ஆனால் அது வெளிப்படையான அன்பு என்று எனக்குத் தெரிந்திருந்தது. வேண்டா வெறுப்பாகக் கூறப்பட்ட அவ் வன்பு மொழிகள் என் இதயத்தை ஊடுருவிப் பாய்ந்து என் மனதை வேதனை செய்யும். குழந்தைகள் வெளிப்படையான அன்பு எது என்பதை அறிந்து கொள்ளுவதற்கு அதிக நேரம் பிடிப்பதில்லை. எனக்கு நண்பனாகவும், விளையாட்டுக் கருவியாகவும், சகோதர சகோதரிகளாகவும், தந்தையாகவும் விளங்கி வந்ததெல்லாம் என் தாய் ஒருத்திதான்.

மற்றவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருக்கும் போதும் பேசிக் கொண்டிருக்கும் போதும் கூட அவள் என் அருகில் உட்காருவாள். உட்கார்ந்து கதைகளைச் சொல்லுவாள். ராமாயணம் சொல்லும் பொழுது சீதை பூமிக்குள் மறைந்த கட்டம் வந்தபோது என் தாய் கண்ணீர் விட்டு அழுதது இன்னும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது; என் கண்களில் கூட அப்போது நீர் துளித்தது. என்னுடைய விகாரமான தோற்றத்தின் காரணமாகத்தான் என் மீது அவளுக்கு அளவற்ற அன்பு இருந்ததோ என்னவோ? அன்று அவள் என்னைத் தன் மடியில் உட்கார வைத்து, "கண்ணே! நான் பூமிக்குள் மறைந்துவிட்டால்..." என்று ஏதோ சொல்ல வந்தாள் ஆனால் அதற்குள் அவள் கண்களில் நீர் ஆறாக வழிந்தோட ஆரம்பித்தது. தொண்டை அடைத்துக் கொண்டதால் அவளால் அதற்கு மேல் பேச முடியவில்லை.

இன்னொரு நாளும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. யாரோ ஒரு பெரிய மனிதர் வீட்டுக்கு ஏதோ விசேஷத்திற்காக என் சகோதரரும் சகோதரிகளும் புறப்பட விருந்தனர். நான் எனது அறையில் விளையாடிக் கொண்டுதான் இருப்பேன் என்று என் தந்தை நினைத்திருந்தார். ஆனால் நான் படுக்கைகளுக்குப் பின்னால் மறைந்து கொண்டு நடந்த பேச்சு வார்த்தைகள் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தேன். என் தந்தை என் அம்மாவைப் பார்த்து, "எல்லாரும் அங்கே போகப் போகிறார்கள்! நீ கொஞ்ச நேரம் கேசவனை அழைத்துக்கொண்டு எங்காவது போய்விட்டு வாயேன்!" என்றார்.

"பாவம்! அவன் என்ன செய்தான்! அவனுக்கும் மனசு என்று ஒன்று இல்லையா?" என்றாள் என் தாய் எனக்காகப் பரிந்துகொண்டு,

"அதற்குச் சொல்லவில்லை! நாம் போவதோ பெரிய இடம்! திக்குவாயனை.......கூட்டிக் கொண்டு போனால்...நம் மானம் மல்லவா போகும்!"

இவ்வளவு தான் காதில் விழுந்தது. அதற்கு மேல் நடந்த பேச்சு வார்த்தைகள் என் செவிகளில் சரியாக விழவில்லை. சற்று நேரத்துக்குப் பின் என் அம்மா அப்பாவின் அறையை விட்டு வெளியே வந்தபோது அவள் முகம் கண்ணீரால் கழுவப் பட்டுத் தூய்மையாக விளங்கியது. அவள் என்னிடம் வந்து "கேசவ்! வருகிறாயா நந்து மாமி வீட்டுக்குப் போய்விட்டு வரலாம், என்று கேட்டாள்.

நான் படுக்கைக் 'கோட்டை'யை விட்டு வெளியே வந்தேன். நான் வெளியே போகிறேனா இல்லையா என்பதை அறிய வேண்டி அடுத்த அறையிலிருந்து தங்களை ஒத்தப்படுத்திக்கொண்டு நின்று இருந்த என் கூடப் பிறந்தவர்கள் மெதுவாக எட்டி எட்டிப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். என் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. என்றாலும் நான் பேசாமல் அம்மாவுடன் புறப்பட்டு விட்டேன்.

வெளியே போய்விட்டுச் சற்று நேரத்தில் வீட்டுக்குத் திரும்பி வந்ததும் அம்மா என்னை அன்புடன் அணைத்து, "கேசவ் வா! உனக்குப் பலகாரம் செய்து தருகிறேன்" என்று கூறிச் சமையலறைக்கு அழைத்துச் சென்று பலகாரம் செய்து ஊட்டினாள்! இன்று, இவ்வளவு ஆண்டுகள் கடந்துவிட்ட பின்பும் கூட அம்மாவின் அந்த அன்பு கனிந்த முகம், அந்தச் சொல்லின் இனிமை, அந்தக் காதல், எல்லாம் இன்றும் என் கண் முன்பு நடமாடுகின்றன!

அதற்குப் பின் என் தலை மேல்—என் வீட்டின் மேலேயே என்று கூடச் சொல்லலாம்!— பெருத்த இடி ஒன்று விழுந்தது. எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. பாட்டியின் வீட்டிலிருந்து அம்மாவை அழைத்துப் போக வேண்டி மாட்டு வண்டி வந்திருந்தது! வண்டியில் ஏறுவதற்கு முன் அம்மா என்னை அணைத்துத் தன் கைகளால் என் தலையையும் முதுகையும் தடவிக் கொடுத்தாள். அந்த அணைப்பில் என்றும் கண்டிராத ஒருவித பரபரப்பு இருந்தது! அதை மற்றவர்கள் யாராலும் அறிய முடியவில்லை. ஆனால் அம்மாவும் நானும் அதை அறிந்து கொண்டோம். அம்மா வண்டிக்குள் மூட்டையை வைத்தாள். பிறகு என்னை அருகில் வரும்படி அழைத்தாள். நான் சென்றேன். இனிய முத்தம் ஒன்றைக் கொடுத்தாள் என் அம்மா! யுகங்கள் கடந்துவிட்டால் கூட என்னால் மறக்க முடியாது அந்த முத்தத்தின் இனிமையை. பின்பு அம்மா கண்ணீர் நிறைந்த கண்களுடன் என்னை—எங்கள் எல்லாரையும்—விட்டுத் தாய் வீட்டுக்குச் சென்றாள். அதுதான் அவளுடைய கடைசிச் சந்திப்பு! பிரசவத்திற்காகத் தாய் வீட்டுக்குச் சென்றவள் திரும்பி வரவேயில்லை. அம்மாவின் முகமும், மாட்டு வண்டியும் கண்ணைவிட்டு மறையும்வரை நான் அந்தத் திக்கையே வெறித்தவாறு பார்த்துக் கொண்டிருந்தேன்! கடைசியில் வண்டி கண்ணைவிட்டு மறைந்து போய்விட்டது! புழுதிப் படலமும் அடங்கிவிட்டது! வீட்டிற்குள் நான் நுழைந்தபோது வீடு எங்கும் 'வெறிச்'சென்று சூன்ய

மாகக் காணப்பட்டது. அதற்குப் பின் அந்த வீட்டில் என் அம்மாவின் படத்திற்கு முன் உட்கார்ந்துகொண்டு என் கஷ்டங்களையும் துன்பங்களையும் எவ்வளவோ முறைகள் சொல்லி அழுதும் இருக்கிறேன்! தேறுதலும் பெற்றிருக்கிறேன்.

கொஞ்ச காலம் கழிந்தபிறகு எனக்கு ஒரு "புது" அம்மா வந்து சேர்ந்தாள். அப்போது ஏனோ தெரியவில்லை. இவ்வளவு நாட்கள் என்னைப் பார்த்து வெறுத்துக் கொண்டிருந்த என் சகோதர சகோதரியர்கள் என்னுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்து விட்டார்கள். அன்று முதல் எங்களுக்கிடையிலிருந்த வேற்றுமை ஒழிந்துவிட்டது. அன்று முதல் முதலாக என் அண்ணன் விநாயக் என்னைப் பார்த்து "தம்பி! புது அம்மா செய்த ரொட்டி கொஞ்சம் வேகாமல் இருந்தது! இல்லையா?" என்று கேட்டான்.

தலையை அசைத்து "ஆம்!" என்று பதிலளித்தேன் நான்.

அதுமுதல் நாங்கள் எல்லோரும் ஒருவருடைய முகத்திலிருந்து மற்றவர் துயரை அறிந்து கொண்டு ஒருவர்க்கொருவர் உதவியாக - சகாயமாக-வாழ்ந்து வந்தோம்! நாங்கள் நாலுபேரும் இரவில் படுக்கையில் படுத்தவாறு எங்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்போம். அப்பாவோ எப்பொழுதும் தம் வேலையிலேயே கண்ணாக இருந்தார். காலை பதினொன்றிலிருந்து மாலை ஐந்து வரை ஆபீஸ். ஐந்து முதல் ஆறு வரை உலாவுதல் எட்டு முதல் பத்துவரை நண்பர்கள் வீட்டுக்குச் செல்லுதல், காலையில் ஒன்பது முதல் பத்துவரை ஆபீஸ்! அதுதான் அவரது தினசரி வாழ்க்கையின் கால நிர்ணய பாகுபாடுகள்!

அதற்குப்பின் வெகு நாட்களும் சில வருஷங்களும் கழிந்து விட்டன. கழிந்துவிட்ட நாட்களில் நடந்துவிட்ட சம்பவங்கள் பல! என் புது அம்மாவிற்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இப்போது அவனுக்கும் நாலைந்து வருஷமிருக்கும்! நாங்கள் எல்லோரும் அவனுடனேயே விளையாடுவோம்! ஆனால் பெரிய குழந்தைகள் மூன்று நான்கு வயது நிரம்பிய குழந்தைகளுடனேயே விளையாடிக் கொண்டிருப்ப தென்றால் அது முடியாத காரியம்; மேலும் அக் குழந்தையில்லாமல் விளையாடக் கூடாது என்ற நிர்ப்பந்தம் எங்களுக்குக் கொஞ்சம் நஞ்சம் இருந்த விளையாட்டுச் சுதந்திரத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தது! எனினும் என்னுடைய அண்ணாவும் சகோதரிகளும் எப்படியோ என்னை விட்டு நழுவி விடுவார்கள். ஆனால் நான் மட்டும் பாலுவுடன்—அக் குழந்தையின் பெயர்தான் பாலு—விளையாடிக் கொண்டிருப்பேன். பாலுவும் ஏனோ என்னையே தேடிக்கொண்டு விளையாட வருவான். உங்களுக்கு அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை இருக்கிறதோ என்னவோ தெரியாது! ஆனாலும் எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. சில மனிதர்கள் உலகில் வேலை செய்வதற்கும் கஷ்டப்படுவதற்கும் மட்டுமே பிறந்திருக்கிறார்கள்.

நான் உங்களிடம் புகார் சொல்லவில்லை! ஏனெனில் வேலை செய்துவிட்டுச் சோம்பேறி என்று பெயர் வாங்குவதில் எனக்கு ஏனோ ஒரு தனி ஆனந்தம். பாலுவுடன் எப்

பொழுது பார்த்தாலும் விளையாடிக் கொண்டிருப்பது நான் தான். ஆனால் பாலு எங்காவது எப்படியாவது தவறிக் கீழே விழுந்துவிட்டால் அக் குற்றமும் என்னுடையதுதான். எல்லாரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது பாலுவை வைத்து நான் தான் விளையாட்டுக் காண்பித்துக் கொண்டிருப்பேன்: நாயோ பூனையோ தெரியாமல் புழக்கடை வழியாய் வந்து ஏதாவது ரொட்டி கிட்டி எடுத்துக் கொண்டு போய்விட்டால் தண்டனை அனுபவிக்க வேண்டியதும் நான்தான்!

வேலைக்காரர்களும் என்னைப் பற்றிப் பொய் பொய்யாக ஏதாவது சொல்லிக்கொண்டிருப்பார்கள். தந்தைக்கோ எனது திறமையின்மையில் அபார நம்பிக்கை! விகாரமாக இருப்பவன் அதிர்ஷ்ட ஹீனனானவன் என்பது சாஸ்திரமில்லை! என்றும் என் புது அம்மாவிற்கு ஏனோ பாலு என்னுடன் விளையாடக் கூடாது என்பதுதான் விருப்பம்.

"இந்தப் பாழாய்ப்போன கேசவன் இல்லாவிட்டால் எவ்வளவோ நன்றாக இருக்கும்... பாலுவைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்குகிறான்" என்று அவள் அடிக்கடி சொல்லிக் கொள்ளுவாள்.

பாலுவுக்கு இரண்டு மூன்று நாட்களாகக் காய்ச்சல் கண்டிருந்தது. பாலு சாப்பிடாமல் 'இடக்கு' செய்யும் பொழுதெல்லாம் என் புது அம்மா "சாப்பிடுகிறாயா? பூச்சாண்டியைக் கூப்பிடட்டுமா?" என்று பயமுறுத்துவாள். அப் பூச்சாண்டியையே நினைத்துக் கொண்டிருந்த பாலுவின் மனதில் பூச்சாண்டியின் பயங்கர உருவம் வளர்ந்து வரலாயிற்று! ஆகவே காய்ச்சலில் விழுந்து தன்னிலையழிந்து கிடக்கும் பொழுதெல்லாம் அவன் "அம்மா! பூச்சாண்டி!" என்று ஏதேதோ உளறுவான். என் இறந்துபோய்விட்ட அம்மாவின் ஆவிதான் பாலுவைப் பயமுறுத்துகிறது என்று யாரோ புது அம்மாவிடம் சொல்லிவிட்டார்கள்! அதிலிருந்து எங்களுக்குப் பிடித்தது சனியன்! நாங்கள் எல்லாருமே புது அம்மாவுக்கு என்னமோ போலத் தோன்றலானோம்! மேலும் என்னால் அவர்களுடைய கௌரவம் பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்ததால் எல்லாரையும்விட நான்தான் இடைஞ்சலாகத் தோன்றினேன். அண்ணாவும் சகோதரிகளும்கூடப் புது அம்மாவின் கோபத்தைத் தாங்க முடியாத போதெல்லாம் பழியையும் குற்றத்தையும் என்மீதே சுமத்திவிட ஆரம்பித்தார்கள்! எனக்கும் கூட எல்லாருடைய பழிகளையும் குற்றங்களையும் என் தலைமீது போட்டுக்கொள்வது வழக்கமாகப் போய்விட்டது. அவர்களைப் பார்த்துப் பாலுகூட என் மீது பழி சுமத்தப் பழகிக் கொண்டுவிட்டான். ஒரு நாள் அவன் பாலைக் கீழே கொட்டி விட்டான். தூரத்தில் அம்மா வருவதைக் கண்டதும் அவன் உடனே "அம்மா!... அண்ணா...!" என்று கூச்சல் போட்டான். அம்மாவுக்கு அவ்வளவுதான் வேண்டியிருந்தது. உடனே வசைமாரி பொழிய ஆரம்பித்து விட்டாள். கடைசியாக, "சின்ன வயதிலேயே அம்மாவைத் தின்று விட்டான்! இப்போது என் குழந்தையையும் கொன்றுவிடப்

போகிறான்" என்றும் சொல்லி வைத்தாள்.

ஒருநாள் "அம்மா, வங்கோ ஜோசியம் பார்த்துவிட்டுத் திரும்புறாள். அந்தப் பாழாய்ப்போன ஜோசியனுக்கு எப்படித்தான் என் வீட்டுச் சங்கதிகளெல்லாம் தெரியுமோ? என் அம்மாவிடம் இருந்ததையும் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி வைத்ததோடல்லாமல் என் அம்மாவின் ஆவி பாலுவைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருப்பதாக வேறு சொல்லி விட்டான். அதுவும் என் காரணமாகத் தானாம்! அதற்குமேல் என்ன வேண்டும்? புது அம்மா தன் குழந்தையைப் பத்திரமாகப் பாதுகாத்து வரலானாள். அதுமுதல் பாலு என்னைப் பார்ப்பதுமில்லை! என்னுடன் பழகுவதுமில்லை! மற்றவர்கள் என்னுடன் பழகினால்கூட அவர்களுக்கு அடி கிடைக்கும்.

மெதுவாக நான் என் வீட்டில் தனி வாழ்வு நடத்தலானேன்— நடத்தவேண்டி வந்தது! எனக்குத் துணையாக இருந்ததெல்லாம் என் அம்மாவின் படம்தான்! வேறு யாருமே இல்லை. என்னை அப்பா என்றுமே கூப்பிடக் கூடமாட்டார்! எவ்விதம் அவரால் கூப்பிட முடியும்? எவ்வளவு பேர்கள் அவரிடம் அடிக்கடி வந்து கொண்டிருப்பார்கள்? பெரிய மனிதர்களின் வீட்டுக்கு வருபவர்களின் மனம் எவ்வளவு குறுகியிருக்கும் என்பதை நான் அறிந்தே இருந்தேன்! வீட்டுக்கு வருகிறவர் போகிறவர்கள்கூட என்னை எறிட்டுப் பார்க்கவோ அன்புடன் அழைக்கவோ இல்லை. சில சமயம் அண்ணா என்னிடம் வந்து புது அம்மாவின் கொடுமைகளைப்பற்றிச் சொல்லி மனதை ஆற்றிக்கொள்வான். சகோதரிகள் யாருக்கும் தெரியாமல் மெதுவாக வந்து தமக்குற்ற துன்பங்களைக் கூறிக் கண்ணீர் சிந்திவிட்டுப் போவார்கள். பாலுவும் தப்பித்தவறி எதோ ஓரிரு முறைகள் என்னிடம் வந்து கொஞ்ச நேரம் விளையாடி விட்டுப் போவான்! ஆனால் இவைகளெல்லாம் அவரவர்களுடைய நலனுக்காகத்தான். எனக்கு உயிர் என்று ஒன்று இருப்பதாகவே யாருக்கும் நினைவிருக்கவில்லை. நான் ஒண்டிக்கட்டைடாகவே வாழ்ந்து வந்தேன்.

ஒருநாள் அண்ணாவுக்கும் தங்கைக்கும் அடி விழுந்தது! அப்பா வீட்டுக்கு வந்ததும் புகார்கள் அப்பாவின் காதிற்கு எட்டின. இன்னும் அதிக அடி கிடைத்தது. காரணம் வேறு ஒன்றுமில்லை! பாலு தவறிக் கீழே விழுந்து விட்டான். அவ்வளவுதான். நல்ல வேளையாக நான் அந்த விளையாட்டில் கலந்து கொண்டிருக்கவில்லை! இல்லாவிட்டால் அவ்வளவு உதைகளும் அடிகளும் எனக்கே கிடைத்திருக்கும்.

அன்று இரவு நான் படுக்கைக்குப் போகும்முன் அண்ணா என்னிடம் வந்து, "கேசவ்! பார்த்தாயா! உன்னால் தங்கைக்கு எத்தனை உதை விழுந்தது? நீ தனியாக விளையாடினால் என்ன? இவ்வளவு பெரிய மைதானம் தான் இருக்கிறதே!" என்றான்.

நான் ஒன்றும் பேசவில்லை! நீர் மல்கிய கண்களுடன் அவனையே பார்த்தேன் கொஞ்ச நேரம்! என் மனதில் பெருத்த போராட்டம் ஒன்று எற்பட்டது.

அன்றிரவு எனக்குத் தூக்கம் வரவில்லை. வெளியே நிலா பால் போலக் காய்ந்து கொண்டு

இருந்தது. குளிரும் அசாத்திய மாகஇருந்தது. செடிகொடிகளும் மரங்களும் அசைவற்று விறைத்த பிணத்தைப்போலக் காணப்பட்டன. எங்கும் ஒரே நிசப்தம் நிலவியது. நான் மெதுவாகக் கட்டிலிலிருந்து எழுந்தேன். ஒரு முறை என் அம்மாவின் படத்தின் மீது பார்வையைச் செலுத்தினேன். வளைக்கிலிருந்து வந்து கொண்டிருந்த இலேசான மங்கலான வெளிச்சத்தில் என் அன்னையின் முகம் கம்பீரமாகத் தென்பட்டது! அன்னை என்னைப்பார்த்துச் சிரிப்பது போன்ற மனப்பிரமை எனக்கு ஏற்பட்டது! என்னை அவள் அழைப்பதுபோல தோன்றியது. காதுகளைக் கூர்மை செய்துகொண்டு கேட்டேன்! "கண்ணே கேசவ்! அண்ணாவையும் தங்கைகளையும் நீயல்லாமல் வேறு யார் மகிழ்விப்பார்கள்? எதற்காக நீ அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறாய்? என்னிடம் வந்துவிடு!" என்ற சொற்கள் என் செவிகளில் விழுவது போலத் தோன்றியது. திக்பிரமை பிடித்தவன் போல நான் நாலாபுறங்களிலும் பார்த்தேன். வெளியே அதே" குளிர்தான்! அதே பால் நிலவுதான்!

மறுபடியும் அதே சொற்கள் என் காதுகளில் ஒலித்தன. அதே கைகள் என்னை ஸ்பரிசிப்பது போன்ற உணர்ச்சி! அதே குரல்! "வந்துவிடு" என்று அழைத்தது.

மெதுவாக, அண்ணா படுத்திருக்குமிடம் சென்றேன். தன்னை மறந்தவாறு அண்ணா ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்திருந்தான்! சகோதரிகள் படுத்திருந்த இடத்திற்குச் சென்றேன். ஒரே தாமரையில் இரண்டு அன்னப் பறவைகள் மெய்ம்மறந்து படுத்திருப்பதைப் போலக் கால்களை முடக்கிக்கொண்டு அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் நெற்றியில் படிந்திருந்த மயிர்ச் சுருள்களை விலக்கினேன். அம்மாவின் பிரதி பிம்பத்தைப் பார்ப்பதுபோலத் தோன்றியது! சாந்த முகங்களில் மனோஹரமான புன்னகை பூத்திருந்தது!

அம்மா என்னை நோக்கிப் பேசுவதுபோன்ற பிரமை தட்டியது. சகோதரிகள் இருவருக்கும் அன்புடன் ஒவ்வொரு முத்தம் கொடுத்துவிட்டு அண்ணாவை மற்றொரு முறை பார்த்துவிட்டு, அகன்றேன். மறுபடியும் என் அம்மாவின் படத்தைப் பார்த்தேன். பின்பு வெளியே நிலா வொளியின் மீது பார்வையைச் செலுத்தினேன். உலகத்திலுள்ள சாந்தத்தையெல்லாம் தம்முள் அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் ஒருவர் சிரித்தால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது என் அம்மாவின் புன் சிரிப்பு' "வந்துவிடு! என்னிடம் வந்துவிடு! என்று அழைப்பதைப் போல இருந்தது அப்புன்னகை.

மெதுவாகக் கதவைத் திறந்து வெளியே வந்தேன். சத்தமில்லாமல் மெதுவாக வெளியே காலடி எடுத்துவைத்து நடக்கலானேன். வெளியே அம்மா நின்று என்னை அழைப்பது போலத் தோன்றியது. அதேசொற்கள்: "வந்துவிடு கண்ணே! வந்துவிடு! என்னிடம் வந்துவிடு! நான்தான் உன் அழகு, சொத்து, எல்லாம்! வா"

மெதுதாக நான் முன்னேறினேன். முன்னேறிக்கொண்டே இருந்தேன் தங்கு தடையில்லாமல். பால் நிலாவில் எங்கிருந்தோ இனிய குரல் ஒன்று என்னை அழைத்துக்கொண்டே இருந்தது 'வா! வா!' அம்மா! என்ற அழைப்பு.

ஒருமை

சாது ஸ்ரீ முருகதாஸ்

"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்" என்றார் வள்ளலார். "இருமையில் ஒருமையின் பெருமையை மொழிவாயே" என்றார் அருணகிரியார். "மனமே இருமையும் ஒருமையுமே" என்றார் சித்தர். 'ஒருமை' யென்றால் யாது?

உலகமெல்லாம் ஒன்றாய் இருக்க மனிதன் உலகத்தை 'நீ' யென்று சொல்லித்தன்னை 'நான்' என்று பிரித்துக் கொள்கிறான்' 'நான்' என்ற 'அகம்பாவத்தை. வளர்க்கின்றான். வேற்றுமையுலகைத் தன் பொருள் என்றும் அல்லவென்றும், தனக்கு வேண்டியவை என்றும் வேண்டாதன வென்றும் பிரித்துத் துன்பம் அடைகின்றான். இது ஆசை-பேராசையின் கொடுமை. தன் நலத்தைக் கருதி பிறர் நலத்தைத் தள்ளியே இச்சிப்பது ஆசை. பிறர் நலத்தைத் தன் நலமாகக் கொள்வது அன்பு. வேற்றுமையின் காரணம் அகம்பாவம், ஆணவமென்பார். 'ஒன்று உலகம் என்ற பாவனை வந்தால், உலகம் அன்பில் நிற்கும் ஸோகம்-ஸூம் ஸோகம் என்ற முக்திக்கு ஏதுவாகும். அன்பானது, குணம் போல் பொருள் வேற்றுமை தெரியாத மனப்பாங்கு. நல்ல மனத்தில் அன்பு சுரந்து கொண்டே இருக்கும். அன்பை வளர்த்து வளர்த்துத் தான் மனம் ஒருமையை அடையவேண்டும்.

"நான் வேறு, நீ வேறு, ஜெகத்யாவும் வேறு என நிகழ்ச்சியா மனோ நீத ஸ்வஸ்வரூபமாய் யோகியாய் எனை ஆள்வாய்" என்றார் ஓர் பெரியார். தன்னை மறந்து உலக வேற்றுமையை மறந்து ஆண்டவனை நினைந்து நிற்கும் மனத்தின் நிலை, 'ஒருமை'யாகும், பாரதியார் பாஞ்சாலி சபதத்தில் ஒருமையை விளக்குகின்றார். என்ன சொல்லியும் கேட்காது பாஞ்சாலியை, சபையிடை இழுத்து வந்து, துகிலுரிய எத்தனித்தபோது, துணையேதுமின்றி கண்ணனை நினைந்து, பெண்ணாய் எடுத்த சரீரம் இனி தனக்கு உபயோகமில்லையென்று நம்பி, அதைப் பிரேதமாய் விடுத்து, உலகினை மறந்து, உட்ஜோதி கலந்து, ஒருமை மனத்தளாகி, 'ஹரி ஹரி' யென்று ஐந்து தரம் கூவி, மரம்போல் நின்று விட்டாள் என்று பாடுகிறார். அச்சமயம் கண்ணன் அருள் பொங்கிற்றாம் எப்படி வளர்ந்தது எனின்—பாரதியார் சொல்லுகிறார்.

பொய்யினர் துயரினைப்போல்—அந்த
புண்ணிய வாளர் புகழினைப் போல்
தையலர் கருணையைப் போல்
சஞ்லத் தெரிந்திடும் அலைகளைப் போல்
பெண்ணொளி வாழ்ந்திடுவார்—அந்த
பெருமக்கள் செல்வத்தில் பெருகுதல் போல்.
கண்ணபிரான் அருளால்
வளர்ந்தன வளர்ந்தனவள்ர்ந்தனவே.

ஒருமையுடன் பக்தி ஏற்பட்டால் ஆண்டவன் கருணை வெள்ளம் போல் வரும். அன்பினால் இதை மக்கள் அடைந்து முருகன் அருளுக்குப் பாத்திரமாவார்களாக!

பெண்களும் யோக ஆசனமும்

சி. நாலக்ஷ்மி குமாரஸ்வாமி

4

சலபாசனம்

அநேக நோய்களின் பிறப்பிடம் வயிறே. வயிற்றிலுள்ள உறுப்புகள் தத்தம் வேலைகளை ஒழுங்காய்ச் செய்யாத போது நோய்கள் உண்டாகின்றன. நம் அஜாக்கிரதையினாலும், ஆகாரத் தவறுகளினாலும் நாம் நோயை வருவித்துக்கொள்கிறோம். அநேகமாய், அதன் காரணம் அறிந்து நாமே நோயைப் போக்கிக் கொள்ள முடியும். ஆனால் நாம் செய்வதென்ன? உடனே டாக்டரை நாடுகிறோம். அவர் ஏதோ சில காரணங்களை சொல்லி மருந்து கொடுக்கிறார். நாம் ஆமாம் தலையாட்டிகளாக அவர் கொடுத்ததை விழுங்குகிறோம். காரணத்தை அறிந்து மருந்து கொடுக்க அவகாசமேது!

அதுவும் நாம் சாதாரணமாக, டாக்டரைத்தான் நாடுவோம். புது டாக்டர்கள், பெயரெடுக்காதவர்களிடம் நம்பிக்கை கிடையாது. ஆனால் எவ்வளவு பெரிய டாக்டர்' என்று நினைத்துப் போகிறோமோ, அவ்வளவுக்கும் நோயாளிகள் நிறைந்து இருப்பார்கள். ஒவ்வொருவரிடமும் ஓரிரண்டு நிமிஷம்கூடப் பேசி விஷயம் அறிந்து கொள்வதற்கு நேரமிருக்காது. ஸ்டெதஸ்கோப்பை வைத்துச் சில இடங்களைப் பரீட்சிப்பார். நாம் அந்நேரம் சும்மா இருப்பதில்லை, அதுதான் நாம் சொல்ல வேண்டியவை, சொல்லும் சமயமென்று ஏதேதோ சொல்லுகிறோம். வேறு நேரம் தான் இல்லையே என்ன செய்வது? அவர் நாம் சொன்னதைக் கேட்டாரா அல்லது உடலை பரிசோதித்தாரா? எல்லாம் விளங்கிவிட்டதாக பாவனை. நமக்கும் அரைகுறை திருப்தி. அத்துடன் அவர் எழுதிக் கொடுக்கும் மருந்தைக் கொண்டு



சலபாசனம்

வந்து விடுகிறோம். அவ்வியாதி எதனால் உண்டானது, அவ்வியாதியின் லட்சணமென்ன என்று கேள்வி கேட்க முடியாது. அவருக்கு அதற்கெல்லாம் பதில் சொல்ல நேரமிருந்தால் தானே?

இன்னும் சில டாக்டர்கள் இருக்கிறார்கள். நாம் தூரத்திலிருந்தே எல்லாம் சொல்ல வேண்டும். அவர் எழுதிக் கொடுத்ததை பேசாமல் வாங்கிக் கொண்டு வர வேண்டும். ஏதாவது கேள்வி கேட்டு விட்டாலோ, வந்தது மோசம். உடனே வாட்ச்மானை (காவல்காரனை) கூப்பிட்டு, கேட்டு வரை துணைக்கு அனுப்புவார்கள். இவர்களை நாடிச் செல்லும் ஜனங்களை நினைத்தாலே பரிதாபமாயிருக்கிறது. சுயமரியாதை அற்று, சுய அறிவு மற்று, சுய முயற்சியு மற்றவர்களைப் பற்றி நினைக்காமலிருக்க முடியவில்லை. அம்மாதிரி இடங்களில் தான் என்ன கூட்டம்! சில சமயம் 2, 3 மணி நேரம் கூட காத்துக் கொண்டு இருக்க வேண்டும். அப்படிக் காப்பவர்களைக் கண்டால் ஐயோ! எத்தனை அருமையான நேரத்தை இம்மாதிரி வியர்த்தப் படுத்துகிறார்களே. கொஞ்சம் முன் ஜாக்கிரதையாக ஆரோக்கியமாக இருக்க, இயற்கையை அனுசரித்து தேகப் பயிற்சிகள் செய்து, சுகமாய் இருக்கலாகாதா! என்று பரிவாய்த் தோன்றும். அவர்களின் அஜாக்கிரதைக்குத் தண்டனை போலும் என்று சமாதானமடைவது தவிர வேறு இல்லை.

எனக்கு தேகப்பயிற்சி செய்ய நேரம் எங்கிருக்கிறது என்று சொல்லுபவர்களை, டாக்டரிடம் மாத்திரம் போய் காக்க நேரமிருக்கிறதா என்று கேட்கத் தோன்றுகிறது.

இந்த நிலைமையில் ஏழை பணக்காரர்கள் என்ற வித்தியாசம். பணக்காரருக்கு உடனே கவனிப்பு. ஏழை ஏதோ வாய் திறந்து கேட்டு விட்டாலோ, 'சனியன்கள், இவர்களுக்காகத் தான் ஆயிரமாயிரமாகக் கொட்டி மேல் நாட்டில் போய் படித்து வந்ததா? அஷ்ட தரித்திரங்கள்' என்ற வசைச்சொல். அவர்களுக்கு ஏழைகள் மனிதராகவும் தோன்றுகிறதில்லை. ஏதோ பிராணிகளைப் பரீட்சிப்பது போல் பார்த்து அனுப்பிவிடுவார்கள்.

இவைகளெல்லாம் தனிப்பட்ட பெரிய டாக்டர்களிடம் தான் என்று நினைத்து விடாதீர்கள். ஏழைகளுக்கென்று பொதுவாக ஏற்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிகளிலும் இம்முறைகளைப் பார்க்கச சகிக்காது. அங்கும் பணக்காரர்களுக்குத் தனி சலுகை. பணம் இறைத்தால் எல்லாம் நடக்கிறது. பியூன் முதற்கொண்டு, நர்ஸ், டாக்டர் முதல் எல்லாம் பணத்தை அனுசரித்துத்தான். ஏழைக்குப் பெட்டான் எடுத்துக் கொடுக்கவும் மனம் சலிப்பார்கள். இம்முறைகள் பொது ஜனங்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் ஆஸ்பத்திரியில் ஒழிய வேண்டும். ஏழைகளுக்குப் பொது வார்டு, பணக்காரர்களுக்குத் தனி வார்டு கூடாது. பணம் படைத்தவர்கள் தனிப்பட்ட முறையில் சிகிச்சை செய்து கொள்ளட்டும். ஏழைகளின் பங்கில் கை வைக்கவேண்டாம்.

ஏது? டாக்டர்களை ஒரேயடியாய் வெறுக்கிறாரே என்று தோன்றும். நம் நோக்கம் அதுவல்ல. இது வரை எழுதி வந்தது நடை முறையில் இருக்கும்

உண்மை. இதில் யாருக்கும் கோபம் வருவதற்கு காரணமில்லை. டாக்டர்களின் சேவை ஜன சமூகத்திற்கு கட்டாயம் தேவை. ஆனால் பணமே நோக்கமாகக் கொண்ட சுய நலக்காரர்களைத் தான் வெறுக்கிறோம். எடுத்ததற்கெல்லாம் மேல்நாட்டு மருந்துகளை எழுதிக் கொடுக்கும் ஏஜண்டுகளை வெறுக்கிறோம். அருமையான நம் நாட்டு முறைகளிருக்க, தேகப்பயிற்சிகளிருக்க, யோக சிகிச்சைகளிருக்க இவைகளையெல்லாம் சிபாரிசு செய்யாமல், எங்கே இவைகளைச் சொன்னால் வருமானம் குறைந்து விடுமோ என்று வருமானத்தையே நாட்டமாகக் கொண்ட பேராசைக்காரர்களை வெறுக்கிறோம்.

ஒரு சிறு சம்பவம் சொல்லாமலிருக்க முடியவில்லை. 5, 6 வருஷங்களாக நரம்பு பலஹீனக் கோளாறு. பார்க்காத பெரிய டாக்டர்களில்லை. போடாத ஊசியில்லை. கடைசியில் யோக ஆசனங்களால் குணமாகும் என்று கேள்விப்பட்டு புத்தகத்தை வாங்கி படித்துக்கொண்டிருந்தாராம். அச்சமயம் வந்த டாக்டர் அப் புத்தகத்தையே படிக்கக்கூடாது என்று ஒரு ஊசி ஏற்றிவிட்டு, புத்தகத்தையே கையுடன் எடுத்துச் சென்று விட்டாராம். அந்த டாக்டரிடமும் முடியாமல் கடைசியில் இப்பொழுது யோக ஆசனங்கள் சில நாள் முதல் செய்து வருகிறார். இப்பொழுது பாதி குணம் ஏற்பட்டிருக்கிறது. இன்னம் 6 மாதத்தில் கட்டாயம் குணம் ஏற்படும் என்று உறுதி கூறுகிறோம்.

அந்த டாக்டர் செய்தது உண்மையில் வருமானம் குறைந்துவிடும் என்றா? அல்லது நோயாளி செய்து உடல் கெட்டு விடும் என்றா? இம்மாதிரி டாக்டர்கள் இருக்கும் வரை நம் நாட்டிற்கு விமோசனமே கிடையாது.

இம்மாதிரி சம்பவங்கள். எத்தனையோ கணக்கில்லாமல் எழுதிக் கொண்டே போகலாம். பெரிய டாக்டர்களாலும், ஆஸ்பத்திரியிலும் கைவிடப் பட்ட எத்தனையோ நோயாளிகள் யோக ஆஸனங்களினால் குணமடைந்திருக்கிறார்கள்.

ஆனால் இயற்கை முறையினாலும் பயிற்சியினாலும் சொஸ்தமாகாமல் சில நோய்கள் இருக்கின்றன. அவைகளுக்கு சஸ்திர சிகிச்சை கட்டாயம் செய்தே தீரவேண்டியிருக்கிறது. அவைகளுக்கெல்லாம கட்டாயம் டாக்டர்கள் தேவை. தேசத்தில் வறுமை நீங்கி, எல்லோரும் சமமாக உயர்ந்த வாழ்வு அடைந்து, தேக தத்துவ சாஸ்திர முறைப்படி அப்பியாசங்கள் செய்யும் வரை இன்னம் டாக்டர்கள் தேவை. டாக்டர் தொழில் போல் சேவை செய்யக்கூடிய தொழில் வேறு இல்லை. சில டாக்டர்கள், நர்ஸ்கள் பொறுமையாய் நோயாளிகளிடம் சேவை செய்வதை பார்க்கும் போது, கர்மை அறியாமலேயே பெருமிதம் கொள்ளுகிறோம். அப்பேர்ப்பட்டவர்கள் நீடுழி வாழ்ந்து மேலும் சேவை செய்யும் சக்தி கொடுக்கக் கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

நோய்க்காக எழுதவந்து டாக்டர்களைப்பற்றி மிகவும் நீண்டுவிட்டது. திரும்பத் தொடர்வோம்.

வயிற்றில் இரைப்பை, பித்தப்பை, சிறு குடல், பெருங்குடல், கல்லீரல், மண்ணீரல், குண்டிக்காய், சிறுநீர்ப்பை, கர்ப்பப்பை முதலியன இருக்கின்றன. இவைகள் அந்தந்த

ஸ்தானத்திலிருந்து அதனதன் வேலைகளைச் செய்கின்றன. இவைகள் இடம் விட்டு இடம் பெயராமற்படி சவ்வுகளினால் கட்டப்பட்டு ஒன்றுக்கொன்று பக்கத்தில் உராய்ந்துக் கொண்டு, வயிற்றுத் தசைகளுடனும், முதுகுச் சதைகளுடனும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு நம் முயற்சி இல்லாமலேயே பயிற்சி இயற்கையாய் அமைந்திருக்கிறது.

அதாவது நாம் மூச்சு விடும்போது, டயாப்ரம் என்னும் வளைந்த தசை சுவர்மேல் எழும்பி டயாப்ரத்தின் கீழுள்ள வயிற்றின் உறுப்புகள் விரியும்படி இடம் செய்து கொடுக்கிறது. மூச்சு வாங்கும்போது நுரையீரல் விரிந்து அமுங்குவதால் டயாப்ரம் கீழே அமுக்கப்படுகிறது. அப்பொழுது வயிற்றிலுள்ள உறுப்புகளும் அமுக்கப்படுகின்றன. இவ்வாறு இவைகளுக்கு இயற்கையாய் வேலை அமைக்கப்பட்டிருக்கிறது.

சிலருக்குக் குடல் சரிந்து வயறுதொங்கி தள்ளிவிடும். இவர்களுக்கு டயாப்ரத்தின் அமுக்கம் கிடைக்காது. அவயவங்களுக்கு வேலை கிடைக்காது. புளிமூட்டைபோல் தொங்கி இருக்க இருக்கப் பெருக்க வேண்டியது தான். சில சகோதரிகள் அதிக பிரசவத்தினாலும், பிரசவ சமயத்தில் வயிற்றைச் சரிவரக் கட்டிப் பாது காக்காததினாலும் வயிறு தொங்கிவிடும். இவர்களுக்கும் அமுக்கம் கிடைக்காது. பழையபடி இறுக்கம் உண்டாகவேண்டுமானால், எந்த மருந்தினாலும், ஊசியினாலும் முடியாது, சலபாசனம்தான் அதற்கு விமோசனம்.

பெருந் தொந்தி விழுந்தவர்களுக்கும் இதில்தான் விடுதலையுண்டு. பாவம், இவர்களின் நிலைமை ரொம்பப் பரிதாபகரமானது. கர்ப்பிணிகள் ஏதோ பத்து மாதம் கஷ்டப்பட்டு குழந்தையைப் பெற்றுவிடுகிறார்கள். வேண்டாத கொழுப்பை செல்லக் குழந்தையாக வளர்த்துவரும் இவர்கள் ஆயுள்வரை சுமக்க வேண்டியதுதானோ! இல்லை. சுமக்க வேண்டியதில்லை. விடுதலை கட்டாயம் உண்டு. சலபாசன சஞ்சீவியினால் கடைத்தேறலாம்.

செய்யும்முறை: விரிப்பில் குப்புற படுத்து, இரண்டு கைகளை பக்கவாட்டில் உடம்போடு ஒட்டினதுபோல், உள்ளங்கை ஆகாயம் பார்க்க நீட்டவேண்டும். இரண்டு கால்களை, குதிக்கால் ஒட்டினாற்போல் வைத்துக் கொள்ளவேண்டும். உள்ளங்கை முஷ்டியாக மடித்து, மூச்சைப் பிடித்து, இரண்டு கால்களை விரைத்து, சேர்ந்தாற்போல் பின்னுக்குத் தூக்கிப் படத்திலுள்ள நிலைக்கு வரவும். அப்படி 2, 3, வினாடி நிறுத்தி, காலை கீழே முன் போல் இறக்கி, மூச்சை விடவும். உடம்பை இளக்கமாய் வைத்து சில வினாடி இளைப்பாறவும். இவ்வாறு மூன்றிலிருந்து ஆறு தடவை செய்யலாம்.

இது பார்க்கச் சுலபமாய்த் தோன்றும். செய்யும்போது நம் கால் சொன்னபடி கேட்காது. கால்கள் சேர்ந்தாற்போல் எழும்பாது. விரிந்துவிடும். சிலருக்கு கை முஷ்டி துடைகளுக்கு அடியில் வைத்துத் தூக்கினால்தான் தூக்க முடியும். பெருந் தொந்தி படைத்தவர்கள், காலை தொந்தி மட்டத்திற்கு சுலபமாய்த் தூக்கி விடுவார்கள். மேற்கொண்டு தூக்கமுடியாது. அவர்கள்

முயற்சியுடன் தினமும் அதிகம் தூக்கவேண்டும். சரியான நிலைக்கு வந்தபின்தான் பலன் என்பது இல்லை; ஆரம்பித்து கொஞ்சம் தூக்க முயற்சித்தவர்களுக்கும் பலன் உண்டு. இருதய பலஹீனமுடையவர்கள் இதைச் செய்யக்கூடாது. மூச்சைப் பிடித்துத் தூக்க வேண்டுமாகையால், வேறு ஆசனங்கள் செய்து இருதயம் பலம் பெற்றபின் இதைச் செய்யலாம்.

பலன்: பெருந் தொந்தி கரையும். சரிந்த வயிறு சரிப்படும். வயிற்றில் இறுக்கம் ஏற்படுவதால் வயிற்றிலுள்ள எல்லா உறுப்புகளும் சரிவர வேலை செய்யும். முதுகுத் தண்டின் அடிப் பாகம் வளைந்தால் இளமை உண்டாகும். மலச்சிக்கல் போகும். கர்ப்பப்பை பலம் பெறும்.


குறிப்பு: கர்ப்பிணிகள் இதை மூன்று மாதம்வரை செய்யலாம். கர்ப்பிணிகள் புதிதாய் ஆரம்பித்து எந்த ஆசனமும் செய்யக்கூடாது. வழக்கமாய்ச் செய்து வருபவர்கள் கர்ப்பம் கொண்டால், அவர்கள் மூன்று மாதம் வரை செய்யலாம்.



'வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம் என்று வேதாந்தம் பேசுவதால் மட்டும் ஒருவர் வேதாந்தியாய் விட முடியாது. உண்மை, ஒழுக்கம், கடமையில் கருத்து உள்ளவர்தான் வேதாந்தி'

—விவேகானந்தர்

ஊசியும் நூலும்



உஷா

இப்பொழுது குளிர் காலம் ஆரம்பமாகி விட்டதல்லவா? பிறகு மார்கழிமாதப் பனிக்காலம்வந்து விடும். இந்நாட்களுக்கு கம்பளித் துணிகள், ஸ்வெட்டர்கள் அவசியமல்லவா? ஊட்டி, கொடைக்கானல் போன்ற குளிர்ப் பிரதேசங்களுக்குமிக்க அவசியம்தான். சிறிய குழந்தைகளுக்கு குளிர், பனி தாக்காமல் இருக்க கம்பளி நூலில் ஸ்வெட்டர்கள், குல்லாய், கோட்டு, சால்வைகள் பின்னலாம். பெண் குழந்தைகளுக்கு அழகிய கவுன்கள், ஜம்பர்கள் கூட மிக அழகாகப் பின்னலாம். ஒழிந்த வேளைகளில் அதிகச் சிரமமில்லாமல் செய்யக் கூடிய வேலை. வீண்பொழுது போக்காமல், காலத்தை உபயோகமாய்ச் செலவிடலாம் அல்லவா? முதலில் ஸ்வெட்டர் பின்னும் முறைகளையும், எவ்வாறு பின்னுவது என்ற குறிப்பும் சொல்லுகிறேன்.

நூல் சுற்றுவது


உல்லன் நூலை எப்பொழுதுமே இறுக்கிச் சுற்றாமல் லேசாகப் பந்து போல் சுற்ற வேண்டும். இறுக்கமாகச் சுற்றுவதால் நூலின்மிருதுத் தன்மையும், அழகும் கெட்டுவிடும்.




1. ஊசியைப் பிடித்துக் கொள்ளும் முறை.




2. நிட்டையல் தைக்கும் முறை Knit—சாதாரண நிட்டையல்.




3. pearl தையல் தைக்கும் முறை P—:—முத்துத் தையல்.



4. slip—தையலைத் தைக்காமல் ஊசியில் உருவிக் கொள்வது.



5. கிட்தையல்களைச் சேர்த்துத் தைப்பது K.



6. தையலை முடிப்பது

குறிப்புகள்

Knit—சாதாரண நிட் தையல்.

pearl—முத்துப் போன்ற தையல்.

sts—தையல்கள்.

slip—ஊசியில் பின்னுமல் தையல் உருவிக் கொள்வது.

garder sts—இரு புறமும் நிட் டாகவே பின்னுதல்.

stocking sts—நிட்புறம் நிட் டாகவும் pearl புறம் முத்தாக வும் தைப்பது.

W. R. N. ஊசியை சுற்றி நூல் போடுவது.

W. F. D—நூலை ஊசிக்கு முன் னல் போடுவது.

P. S. S. O—உருவிட்ட தையலை முடிப்பது.


* * * இந்த நஷத்திர குறிக்குள் இருக்கும் குறிப்புகள் தான் ஸ்வெட்டரின் மாதிரியாகும்.

சுமார் 6 மாதக் குழந்தை களுக்கு அளவுள்ள குல்லாய்க்கு வேண்டிய சாமான்கள்.

1 அவுன்ஸ் 2 ply வெள்ளை உல் No. 9 நம்பர் ஊசிகள் இரண்டு அழகிய ரிப்பன் 1½ கஜம் ஓர் சிறிய கண்டு ஆரஞ்ச் அல் லது ஆழ்ந்த கலர் உலநூல்.

முதலில் ஊசியில் 84 தையல்கள் எடுத்துக்கொள்ளவும், (இவை ஆரஞ்ச் அல்லது வேறு நூலில்) எட்டு(8)வரிகள் இருபுறமும் நிட் டாகவே போடவும். இப்பொ ழுது வெள்ளை நூலை முடிந்து கொண்டு(stocking stos) நிட்புறத் தையல்களை நிட்டாகவும் pearl புறத் தையல்களை pearl ஆகவும் 4½ inch போடவும். முதல் வரி யில் ஒவ்வொரு 4-வது தையலி லும் ஒரு தையல் அதிகமாக்கிக் கொள்ளவும் (அதாவது ஒரே தையலில் முன்னும், பின்னு

யாக இரும்முறை பின்னி தையலை அதிகப்படுத்துவது) இதே மாதிரி வரி முழுமையும் போடவும். இப்பொழுது ஊசியில் 100 தையல்கள் இருக்கும். அடுத்த இரண்டு வரிகளில் முதல் நான்கு தையல்களை ஊசியைவிட்டு முடிக்கவும் (ஊசியில் 92 தையல் இருக்கும்).




பிறகு குல்லாயின் பின்புறத்தை பின்வருமாறு போடவும் * கிட் 18, 2 தையலைஒன்ருகத் தைப்பது * இதே மாதிரி வரி முழுமையும் கடைசி 2. தையல்களை ஒன்ருகப் பின்னவும்.

அடுத்த வரி pearl வரி முழுமையும்.


இவ்வாறே, கிட் 17, 61, 15 14, 13, 12, என்று வரிசையாக குறைத்தவாறே போடவும். அதாவது * கிட் 17, 2 தையல்களைச் சேர்த்து தைப்பது * பிறகு இதே மாதிரி வரி முழுமையும் போடவும் அடுத்த வரி அதாவது ஒவ்வொரு பின் வரியும் pearl இவ்வாறே கடைசியில் 4 தையல்கள் மிஞ்சும் வரை போடவும். பிறகு அந்நாலு தையல்களையும் ஒன்ருக இணைத்துத் தைத்து விடவும்.

இப்பொழுது குல்லாயை நன்ருக நீவி மடித்துவிட்டு வேறு கலர் உல்லால் கழுத்தைச் சுற்றி தையல்கள் எடுத்து 4 வரி கிட்டாக போடவும். பிறகு அழகிய ரிப்பனை குல்லாயின் கழுத்துப் பட்டியை சுற்றிக் கோர்த்து இணைத்துவிடவும். அழகிய குஞ்சங்களால் குல்லாயின் தலையைச் சுற்றிலும் அலங்கரிக்கலாம்.



காற்று நல்ல வாசனையையும் கெட்ட வாசனையையும் கொண்டு வீசுமாயினும், அவைகளால் விகாரப்படுவதில்லை. பரம்பொருளும் அந்தக் காற்றைப் போன்றதே.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்



டில்லியிலே குவிந்துள்ள பஞ்சாப் அகதிகளுக்குத் துணிகளை அனுப்பி வைக்கிறார்கள்



அகதிகளின் குழந்தைகள் குளிரால் தவிக்காமல் இருக்கக்
கம்பளித் துணிகளைச் சேர்த்துச் சுத்தம் செய்கிறார்கள் சமூக சேவகிகள்.

கெட்டுப்போன குடை

'தேவி'

அவர் குடையை எப்படிக் கெட்டுப் போக்கிவிட்டார் என்பது வீட்டில் எல்லோருக்கும் அதிசயமாக இருந்தது. அதை யார் எடுத்துக்கொண்டு போயிருக்கக் கூடும் என்று ஊகிக்க ஒருவராலும் முடியவில்லை.

"நன்றாக யோசனை செய்து பாருங்கள். நீங்கள் ஆபீஸிலிருந்து எங்கெல்லாம் போனீர்களென்று நினைத்துப் பாருங்கள்" என்றேன் நான்.

"அப்பா, நீங்கள் அதை ஆபீசுக்கு எடுத்துக்கொண்டு போனது ஞாபகம் இருக்கிறதோ" என்று என் பெண் நளினி கேட்டாள்.

"அதான் அப்பவே. சொன்னேனே. அதை எடுத்துக் கொண்டுபோய் எப்பொழுதும் வைக்கிற இடத்திலேயே வைத்தேன். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. காலையில் போகும் போது சிறிது மழை பெய்த போது குடையைப் பிரித்துப் பிடித்துக்கொண்டேனே. இன்னொருவர் கூட என்னோடு அதில் ஒண்டிக்கொண்டாரே" என்று தலையைச் சொறிந்து கொண்டே அவர் சொன்னார்.

"குடையைத்தான் தொலைத்து விட்டீர்கள். இப்பொழுது வருகிறது மழைகாலமாயிற்றே, இன்னொரு குடை எப்படி வாங்கப் போகிறீர்கள்" என்றேன் நான்.

ஏற்கனவே வரவையும் செலவையும் சரிக்கட்ட முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் எனக்குப் புதிய செலவு ஏதாவது நேரப் போகிறது என்றால் உடனே இருதயம் "திக், திக்" என்று அடித்துக்கொள்ள ஆரம்பிக்கிறது.

"வாங்குகிறதென்றால் அவ்வளவு சுலுவாய்ப் போய்விட்டதா? அதற்காகப் பத்து நாள் அலைய வேண்டாமா?" என்று என் நாத்தனார் அண்ணாவுக்குப் பரிந்து பேசினாள்.

"இந்தத் தீபாவளிக்கு எனக்கென்னவோ வேஷ்டி கிடைக்காது. ரேஷன் கார்டில் கிடைக்கக்கூடியதை யெல்லாம் வாங்கி நளினிக்குப் பாவாடையும் ஜாக்கெட்டும் தைத்துவிட்டாய். அந்தப் பணத்துக்குக் குடை வாங்கினால் போகிறது" என்று சமாளித்துக் கொண்டார் அவர்.

"அப்படி யென்றால் குடை தொலைந்துபோய் விட்டதென்றே திட்டம் செய்து விட்டீர்களா அப்பா? அது எப்படிக் கெட்டுப் போய்விட்டது என்று திடப்படுத்திக்கொண்ட பிறகு புதிசு வாங்குவதற்குத் திட்டம் போடுவீர்களாமே" என்றாள் நளினி.

"அதுதான் சொன்னேனே, எனக்கு அது எப்படிப் போய்

இருக்கக் கூடுமென்று தெரியவே யில்லையென்று. அன்று எனக்கு ரொம்ப ஓய்ச்சலா யிருந்தது. தவிரவும் தலை வலி. என்னவோ போகட்டும். நான்தான் அதைத் தொலைத்துவிட்டேன்" என்று விரக்தியாகச் சொன்னார்.

சற்று நேரம் கழித்து "உண்மையில் அந்தக் குடை தொலைந்து விட்டதென்றே என்னால் நம்ப முடியவில்லை. அப்படி அது கெட்டுப் போய்விட்ட போதிலும் அதை நான்தான் தொலைத்துவிட்டேன் என்று எப்படி நிச்சயமாய்ச் சொல்ல முடியும்?" என்று கேட்டார்.

எனக்குக் கோபமும் அழுகையும் கலந்து வந்தது. இன்னும் பால்காரனுக்கு இரண்டு மாதக் கணக்கு பாக்கி இருக்கிறது. பண்டிகையும் பருவமும் ஒன்றின் பின் ஒன்றாக வருகிறது. இவரென்னவென்றால் புத்தப் புதுக் குடையைத் தொலைக்கவும் தொலைத்துவிட்டு நானில்லை என்று சாதிக்க வேறு ஆரம்பிக்கிறாரே என்று வெதும்பினேன்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டே படிப்பதுபோல பாசாங்கு செய்துகொண்டிருந்த என் ஜேஷ்ட புத்திரன் ராமு என் மனதில் அதி வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்த அலைகளின் வேகத்தை ஒருவாறாக ஊகித்துக் கொண்டு எனக்கு வக்காலத்து எடுத்துக்கொண்டு ஆரம்பித்தான்.

"அப்பா, நீங்கள் குடையை எடுத்துக்கொண்டு போனீர்கள். அது இல்லாமல் திரும்பி வந்தீர்கள். உங்களால் அதற்கு என்ன நேர்ந்தது என்று சொல்ல முடியவில்லை. அதிலிருந்து அதை நீங்கள் தொலைத்துவிட்டதாக ஏற்படவில்லையா?" என்று கேட்டான்.

"அப்பா, நீங்கள் அந்த தசமூலாரிஷ்டத்தையும் பிராம்மி கிருதத்தையும் சாப்பிடவே யில்லையே. அதுதான் உங்களுக்கு எல்லாம் இப்படி மறந்து போகிறது" என்றாள் கனி.

"போய் உன் வேலையைப் பாருடி. எனக்கு மருந்தும் வேண்டாம் மண்ணாங் கட்டியும் வேண்டாம்" என்றார் அவர்.

எனக்கு "ஐயோ, பாவமே" என்றிருந்தது.

"மத்தியானம் டிபனுக்கு காரப் போளி அனுப்பினேனே நன்றாக இருந்ததா?" என்று கேட்டேன்.

"என்னவோ, இருந்தது. நாம் எதையோ பற்றிப் பேசிக்கொண்டிருந்தோமே என்ன அது?" என்று தலையைச் சொறிந்து கொண்டே அவர் கேட்டார்.

"மருந்து சாப்பிட்டீர்களா" என்று கனி கேட்டாள்" என்றேன்.

"அது இல்லை. அதற்கு முன்னால்?"—என்றார்.


இரண்டு பேரும் சேர்ந்து யோசனை செய்து பார்த்தோம்.

"என்னவோ ஒன்று. அது அவ்வளவு முக்கிய விஷயமா யிருந்திராது" என்றேன் நான்.

குழந்தைகள் ஒன்றை ஒன்று பார்த்துக்கொண்டு ஏதோ காணாததைக் கண்டதுபோல சிரித்துக் கொண்டதுகள்.

அவர் நெற்றியில் அரும்பிய வியர்வையை நான் என் முந்தானையால் துடைத்துக்கொண்டிருந்தேன். 'அடேடே, இப்பத்தானே நாம்ம எதையோ பேசிண்டிருந்தோம். அதுக்குள்ளே மறந்துட்டேனே,'

என்று தலையைச் சொறிந்து கொண்டார் 'கெட்டுப்போன குடையைப் பற்றி எப்படியப்பா நினைவிருக்கும்! மறதி தானே அதைக் கேட்டுப் போக்கி விட்டது!' என்று கேலி செய்தாள் கனினி. உடனே அவர் துள்ளி யெழுந்து "யாருடி சொன்னா குடை கெட்டுப் போச்சுன்னு? ஆபீஸ் ரூமிலே நாற்காலியிலே வச்சுட்டுன்னா, வந்திருக்கேன். நாளைக்குப் போனா மறக்காம எடுத்துண்டு வந்துடறேன்" என்றதும் எங்களால் எப்படிச் சிரிக்காமல் இருக்க முடியும்!



இரத்த தானம்

அநேகர், இரத்த தானம் யுத்த காலத்தில் மாத்திரம் யுத்தத்தில் அடிபட்ட வீரர்களுக்காக மாத்திரம்தான் உதவும் என்று நினைக்கிறார்கள். இங்கிலாந்தில் இரத்த தானத்தின் மூலம் பல இளம் தாய்மார்களின் உயிரும் அதன் மூலம் குழந்தைகளின் உயிரும் காக்கப்பட்டிருக்கிறது. உணவு புஷ்டியுள்ளதாக இல்லாமையாலோ வியாதிகள் காரணமாகவோ கர்ப்பஸ்திரிகளில் பலர் மிக மிகக் குறைவான சிவப்பு ஜீவாணுக்களை இரத்தத்தில் தாங்கியிருக்கிறார்கள். பிள்ளைப் பேறின் போது இரத்தம் அதிகமாக நஷ்டமாவதால் அவர்கள் உயிருக்கு ஆபத்து நேருகிறது. அந்தச்சமயத்தில் அவர்களுக்குப் பிறருடைய இரத்தத்தைச் சேர்ப்பதால் அவர்களை யமன் வாயிலிருந்து தப்புவிக்கக் கூடும். ஒவ்வொரு பிரசவ வைத்திய சாலைக்கும் உதவி இரத்தம் பாய்ச்சும் வசதி யிருக்கவேண்டும். சுதந்திர இந்தியாவில் இந்த முக்கிய உதவி பெண்களுக்குக் கிட்டலாம் என்று எதிர்பார்க்கலாம்.

அர்ச்சனம் விருதவி

'ஜயஸ்ரீ'

பெயருக்கேற்ற குணம், குணத்திற்கேற்ற பெயராக அமையும் பாக்யம் பெற்றிருந்தார் "டாக்டர் கருணாகரர்." அவரை எல்லோரும் "டாக்டர் கருணா" வென்றே குறிப்பிட்டு வந்ததால் சிற்சில சமயங்களில் புதியவர்களுக்கு அவர் இடுகுறிப் பெயரிலிருந்து ஆணா பெண்ணா வென்று நிச்சயம் செய்ய முடியாது. அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் கௌரவக் குறைவாக எண்ணித் திணறுவதுமுண்டு. ஆனால் பொதுப்படையாக, அவர் ஒரு கௌரவம் வாய்ந்த, சமூக சீர்திருத்தத்தில் ஆர்வமுள்ளவ ரென்பது உலகறிந்த விஷயம்.

தொழில் முறையில் தவிர பல்வேறு துறைகளிலும் ஏழை எளியவர்களுக்குத் தன் சக்திக்கு மீறியே உதவிசெய்ய முன் வருவார். பிறர் படும் துன்பங்களைக் கண்டு மனம் வெதும்பும் இளகிய, பரோபகார சிந்தை நிறைந்த குணம் படைத்தவராகையால் ஏழைகள் அவரைப் பெரிதும் போற்றி அவரை நாடினர்.

ஐம்பது வயதிற்கு மேற்பட்டிருந்தும் அவரது தேக வலிமை திடமாகவே யிருந்தது. இருந்த போதிலும் அவரது மனைவி வடிவம்பாளுக்கு அவரைப்பற்றி சதா விசாரத்துடன் தானிருந்தான். இராப் பகலாய் சாப்பிடக் கூட போதில்லாமல் ஓய்ச்சல் ஒழிவின்றி உழைக்கும் அவரது உடல் வலிமை தளர்ந்து நோயுறாமல் இருக்க வேண்டுமே யென்கிற கவலை தான் அவளைச் சதா சூழ்ந்திருந்தது. அதைப் பற்றியும் சிற்சில சமயங்களில் தன் கணவனிடம் பிரஸ்தாபித்தும் அவர் அதைக் காதில் வாங்கிக் கொள்வதே யில்லை.

"வடிவு, நீ என் வீணாகக் கவலைப்படுகிறாய். உலகில் பொது மக்களான ஏழைகள் படும் கஷ்டத்தை நீ சரியாகத் தெரிந்திருந்தால் இப்படி பேசவேமாட்டாய். என் லட்சியம் அவர்கள் துன்பத்தைப் போக்குவது. எனது சகோதர சகோதரிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது அவர்களைக் கவனியாமல் சுகமாக வீட்டில் சாப்பிட்டுவிட்டுச் சுக போகமாக சோம்பேறி வாழ்க்கை நடத்தச் சொல்லுகிறாயா? அப்படிப்பட்ட சுயநலமுள்ளவனாக நான் பிறக்கவில்லை. என் லட்சியம் தூய்மை வாய்ந்தது. அதன் சித்திக்காக என் உடல், பொருள், ஆவி, யாவற்றையும் தந்தால்தான் இந்தியத் தாயின் எல்லா மக்களும், ஏற்றத் தாழ்வின்றி கண்ணீர் விடாமல் ஒற்றுமையுடன் இனிது வாழ்வு நடத்த முடியும்" என்பதாகப் பல உதாரணங்களுடன் தன்னைப்போன்ற சுயநலப்பற்றற்ற தியாகிகளினாலேயேதான் உலகம் சுபிக்ஷமாக வாழ முடியும் என்பதாக விளக்கி நீண்டதோர் பிரசங்கத்துடன் அவளை மேலே பேசவிடாமல் அடக்கி விடுவது "டாக்டரி"ன் வழக்கமாய்விட்ட

னால் அவள் எதைப்பற்றியும் அவர் விஷயத்தில் இப்பொழு தெல்லாம் அதிகமாகத் தலையிடு வதேயில்லை.

"டாக்டர் கருணா" உள்ளூர் சர்க்கார் ஆஸ்பத்திரியில் வேலை பார்த்து வந்தார். நோயாளிகள் தவிர மற்ற ஜனங்களும் தங்கள் வெவ்வேறு குறைகளைத் தீர்க்க அவரது ஆலோசனையை நாடி வந்தனர். எவரையும் அவர் நிரா கரித்தது கிடையாது. ஆகையால் அவரால் சாத்தியமாகாதது எது மில்லை யென்பது எல்லோர் வாயிலிருந்தும் வெளிப்பட்டன. அவரது திறமையைக் கண்டு ஆச்சரியப்படாதவர் யாருமில்லை.

ஒரு சமயம் ஆஸ்பத்திரியின் ஸர்ஜன் அவரைப் பார்த்து, 'எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ள உங்களுக்குப் பொழுது கிடைக்கிறதா. உங்களுக்கு அனு வசிய சிரத்தை ஏன்? ஒவ்வொன் றையும் கவனித்துக் கொள்ள அதற்கான ஸ்தாபனங்க ளிருக்கின்றன. அவைகளின் வேலையைக்கூட நீங்கள் தலையில் போட்டுக்கொள்ள வேண்டுமா? வீடுகட்டும் முறைகளைப் பற்றிய திட்டத்தைப் பற்றியும், மற்ற விஷயமும் நமக்கேன்? உங்கள் உடம்பையும் கவனித்துக் கொள்ளவேண்டாமா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

"எந்த ஸ்தாபனமும் ஒழுங்கு முறையைக் கவனித்து நடந்தால் என்னைப் போன்றவர்களுக்கு வேலையே யிருக்காதே. நானும் சந்தோஷமாக நமது இந்த சமூ கத்தைப்பற்றிப் பெருமையாக இருந்திருப்பேன். ஆனால் விதி வசமாகவோ, இதுகாறும் அடி மைத் தளைகளில் ஊறி யிருந்த மனப்பான்மை காரணமா கவோ மக்களிடை பேராசையும், சுயநலமாகிற தொற்று நோயும் வெகுவாகப் பரவிவிட்டது. அதை வேருடன் அறுத்தெறிந் தால்தான் சமூகம் ஷேமமாக விருக்கும். இதுவரை நம் நாடு சுதந்தரமடையாமல் அடிமைத் தளையில் பிணைத்திருந்த சங்கிலி அறுந்து விட்டது. இனிதான் நாம் கருத்துடன் ஜாக்கிரதை யாக சமூகத்தின் ஆக்க வேலையை சரியாகச் செய்ய வேண்டும். எல்லாம் அறிந்த நீங்களே இவ்விதம் சொல்லிவிட் டால் நிற்க இடமின்றி, உண்ண உணவின்றி, கட்டத் துணியின்றி ஏங்கித் தவிக்கும் கோடிக்கணக் கான ஏழை மக்களின் கதிதான் என்ன? அவர்களும் நம்போன்ற மனித உள்ளம் படைத்தவர்கள் தானே. பின் ஏன் அவர்களுக்கு இந்த நிலை—பேராசையினால் "நான்" என்கிற அகம்பாவக் குணத்தினால் மனிதனை மனிதன் வேறாக்கும் எண்ணத்தினால் வந்த நிலைதானே இந்த உயர் வும் தாழ்வும். இதை யுணர்ந்து விழித்தெழுந்த பின்னும் மனி தன் அவ்வித நிலைக்கு இடமளிக் கக் கூடாதென்பதே என் லக்ஷி யம்—உதாரணமாக நேற்றுவந்த ஸ்திரிக்கு காசநோய். அவளது சூழ்நிலையை நான் அறியாமல் அவளைக் குணப்படுத்த முயன்று மருந்து கொடுத்திருந்தால் அது சாத்தியமாகாது. என் கடமை நோய்க்கு மருந்து கொடுப்பது என்று மட்டுமிருந்தி ருந்தால் அவள் குணத்தை அடைந்திருக்கவும் முடியாது. அதற்குக் காரணம் அவளது சூழ்நிலையின் தன்மையே. இப் பொழுது அவளுடன் க்ஷயரோக சகோதரி யொருவள் இருக் கிறாள். தவிர அவர்களிருக்கு மிடமோ சற்றும் நல்ல காற்று வசதியும், வெளிச்சமு மில்லாத

கொத்தவால் சாவடி போன்ற ஜனம் நிறைந்த இருட்டுக் கட்டடம். இப்படி. வசித்தால் என் வியாதி வராது? சர்க்கார் தகுந்தபடி. நடந்துகொண்டால் இவ்விதமான கட்டடங்களும், ஜனங்களின் நெருக்கடியும் தீரும். இடமில்லாமல் எவ்வளவு பேர் திண்டாடுகின்றனர். ஏழைகளின் கதி தான் சகிக்க முடியவில்லை. பகல் பூராவும் உழைத்தபிறகு சற்று நிழலில் படுக்க ஒரு சாண் இடத்திற்கு அவர்களுக்குரிமையுண்டா? தெருவு ஓரங்களில் சாக்கடைப் பக்கத்திலும், வெயிலிலும், மழையிலும் படுப்பது தான் எவ்வளவு கோரக் காட்சி. அவர்களது உழைப் பெற்றுக் கொண்டு மற்றவர்கள் உல்லாச வாழ்க்கை நடத்துவது. இதுவா மனிதத்தன்மை. அந்த ஸ்திரீயின் விஷயத்தில் அவளுடைய சூழ்நிலையை விசாரித்ததால் தான் எனக்கு அவள் நோய்க்கு அடிப்படையான காரணத்தை யுணர நேர்ந்தது. அவளோ ஏழை. என்ன செய்வது. அவளது சகோதரியை "சானடோரியத்திற்கு" அனுப்பி விட்டேன். இனி இவளைக் கவனிக்க வேண்டும். சர்க்காருக்கு மனு செய்து அந்த வீட்டைச் சுகாதார வசதியுடன் சீர்திருத்த முயலப்போகிறேன். அதற்கும் அவர்கள் செவி சாய்க்காவிட்டால் நேரே டெல்லிக்கு தலைமை காரியாலயத்திற்குச் சென்று அறிவித்து விட்டு சொந்தச் செலவிலாவது, பொது ஜன சேமிப்பிலிருந்தாவது அந்தவீட்டைச் சீர்ப்படுத்துவேன். இது உறுதி. "என்று வீராவேசத்துடன் மறுமொழி கூறினார்" டாக்டர் கருணா.

அவரது உதார குணத்தை மனதிற்குள் வியந்தபடியே ஒன்றும் கூறாமல் சென்றுவிட்டார் சர்ஜன். வீட்டில் இருப்பதே அபூர்வம். இருக்கும் சற்று நேரத்திலும் மனைவியையோ, மகள் நளினாவையோ புத்தகங்களைப் படிக்கச் சொல்லிக் கேட்டு ஆனந்திப்பார். எழுத்தாளர்களின் போக்கைக் கண்டித்தும், சிலாகித்தும் சொல்வதில் சற்றும் பின்வாங்கமாட்டார். எந்த விஷயத்திலும் சிலாகித்துக் கூறுவதை விட, கண்டனம் செய்வதில் அதிக விருப்பங் கொண்டவர். தனக்குப் பிடிக்காத விஷயமாய் விட்டால் அதை எழுதியவரை நேரில் திட்டுவதைப் போலவே நினைத்துக்கொண்டு ஆரம்பித்து விடுவார்.

"மடையன், கதை, கட்டுரை எழுதுகிறானாம். ஏதாவது உணர்ச்சியிருக்கிறதா? மனிதன் வெறும் கல்லோ, இரும்போ, அல்லது புழு, பூச்சியென்று எண்ணிவிட்டானா? விஷயத்தை சரியாய் தெரிஞ்சுண்டு எழுதணும். இல்லையானால் பேசாமல் இருந்துவிடலாமே. வீணாக மசியையும், காகிதத்தையும் வீணாக்குகிறது. இதைவிட அந்தக் காகிதங்களில் ஏதாவது தேசத் தலைவர்களின் படத்தை பிரசுரித்தாலும் பிரயோசனப்படும். வீணாகக் காகிதப் பஞ்சக் காலத்தில் எழுத்தாளர் எனப் பெயர் வைத்துக்கொள்ள ஆசைப்பட்டு உதவாக்கரை கட்டுரைகள், கதைகள் வெளியாக்குவதோடு நில்லாமல் சாவகாசமில்லாமல் தவிக்கும் என் போன்றவர்களின் நேரத்தையும் வீணாகச் செய்கிறார்கள். இந்த எழுத்தாளர்கள், தங்களைப் பெரிய கம்பன், காளிதாசன், பாரதி போன்ற கவிஞர்களாகவல்லவோ இந்த மகாமேதாவி

கள் தீர்த்துவிடுகிறார்கள். சட், போரும், இன்றையப் பொழுதை வீணாக்கியாச்சு," யென்று கூறுவார்.

இவ்விதமாகவேதான் ஒவ்வொரு விஷயத்திலும் அவரது அபிப்பிராயங்கள் நிறைந்து இருக்கும்.

சிற்சில சமயங்களில் சீர்திருத்த விஷயமாக வெளியூர் செல்லவும் நேரிடும். கூடப்போகிறவர்கள் பாடு திண்டாட்டந்தான்; வழியில் சந்திக்கும் ஒவ்வொருவரையும் கேள்வி கேட்டும், தன் அபிப்பிராயங்களை வெளியிட்டும் மணிக்கணக்கில் நின்று விடுவார். அவருக்குப் பசி தாகமேயிராது. பேசுவதிலும் அலுப்பேயிராது. ஒவ்வொரு விஷயங்களையும் பூரணமாகத் தனக்குப் புரிந்த பின்புதான் அதைவிட்டு வெளியேறுவார். சாப்பிடுகிற விஷயத்திலும் அவ்வளவுதான். பூரணமாக அனுபவித்து ருசித்துச் சாப்பிடுவார். ஆக்கப் பதார்த்தங்களைச் செய்தவரை புகழ்வார். அதன் குணாகுணங்களைப் பற்றி ஆரம்பித்து விட்டாரானால் ஓய்வேயிராது. சாதாரணமான மாம்பழமானாலும் சரி, அதைப் பற்றி பெருமைதான், அதைச் சப்பிட்டுக்கொண்டே, "நம் தேசம் எவ்வளவு பெருமை வாய்ந்தது! எவ்வளவு அருமையான பழவர்க்கங்களையும், காய்வகைகளையும் இயற்கை சிருஷ்டித்திருக்கிறது. முக்கனியில் இதுவுமொன்றல்லவா—," என்று புகழ்ந்தபடியேதான் சாப்பிடுவார்.

ஒரு சமயம் உபாத்தியாயினியாகவிருக்கும் 'பாப்பம்மாள் என்கிற ஸ்திரீ அவரைக் காண வந்தாள். அவளுக்கு, மூக்கு நோவோ, தொண்டை நோவோ, எந்தவித உபத்திரவமான வியாதியும் இல்லை. வேறு ஏதோ ஒரு விஷயத்திற்காக அவரிடம் வந்தாள். இவரை நேரில் கண்டதும் அவளுக்கு எதிர் பாராத ஆச்சரியமாகவிருந்தது. பெயரளவில்தான், அவளுக்கு அவரைத் தெரியும். முன்பின் பார்த்ததில்லை. ஆனால்தன் மனக் கண்ணாடியில் அடக்கமான சிறிய உருவத்தில் கண்களில் மூக்கு கண்ணாடி தரித்த 'கருணாகரரை" தான் பார்த்திருந்தாள் ஆகையால், நேரில் அவரைக் காணவும் ஆச்சரியப்பட்டது அதிசயமில்லை. ஆஜானுபாகுவாய், குறுகுறுப்பான சிவந்த முகமுடையவராய்க் காணப்பட்டார். அன்பு கனிந்து அவரது பார்வைகளில் விவரிக்க முடியாத ஓர் பிரகாசம் நிறைந்திருந்தது.

"யாரம்மா, நீ? நான் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும். சுருக்கமாகவும், தெளிவாகவும் சமாசாரத்தைச் சொல்லு," என்றார்.

"லக்ஷ்மியம்மாள் பேர்சுடன் வந்தேன், அவளை உங்களுக்குத் தெரியுமோ இல்லியோ..."

"இல்லை. எனக்கு நினைவில்லை. சரி, சமாசாரத்தைச் சொல்லு... சீக்கிரம்," என்று அவசரப் படுத்தினார்.

ஏதேதோ சொல்ல வேண்டுமென்று திட்டம் போட்டுவந்த பாப்பம்மாளுக்கு அவர் அவசரப் படுத்தியதில் மறந்தேவிட்டது.

"அவளுடைய காச நோயை நீங்கள்தான் குணப்படுத்தினீர்களாம். அவளிருந்த வீட்டைக் கூட......"

"எனக்கு ஒன்றுமே நினைவில்லை. எத்தனையோ லக்ஷ்மியம்மாள்கள், எத்தனையோ வீடுகள்

ரிப்பேர் ஆச்சு...யாருக்கு கிலே விருக்கிறது. நல்லது, என்ன சமாச்சாரம். அவளுக்கு ஏதாவது உடம்பு சரியில்லையா...என்ன?"

"அதெல்லாம் ஒன்றுமே யில்லை. அவள் சுகமாகத்தானிருக்கிறாள். அவள்தான் என்னை உங்களிடம் போகச் சொன்னாள். காலை இங்கு வரவில்லை. அந்த விஷயத்தைப் பத்திரிகையில் பிரசுரப்படுத்தக் கூட அனுப்பினேன். ஆனால் அவர்கள் அதை பிரசுரியாமல் திருப்பி அனுப்பி விட்டார்கள்......"

"அம்பலவி! விவரத்தைச் சரியாகச் சொல்ல மாட்டீர்களா. எனக்கு இன்று பூராவாக இங்கிருப்பது முடியாதே. இல்லை, தங்களால் எனக்குப் பதிலாக என்னைப் பார்க்கவரும் நோயாளிகளைக் கவனிக்க முடியுமா? ஆகையால் எனக்கு விவரமாக உங்கள் கஷ்டத்தை சீக்கிரமாக தயவு செய்து தெரிவியுங்கள்."

"எனக்கு ஒருவிதக் கஷ்டமுமில்லை, ஐயா. ஆரம்பம் இதுவே. தொழிலாளியின் மனைவி அவள். சரியான அன்ன ஆகாரமில்லாததால் அவள் நோயுற்றுப் படுத்த படுக்கையாய் விட்டான். இரண்டு சிறு குழந்தைகள் வயிறு வளர்க்க வேண்டுமே. ஒரு தனி வியாபாரியின்வீட்டில் வீடு பெருக்கவும், துணி துவைக்கவும் வேலைக்கமர்ந்தாள். எஜமானன் ஒரு கருமி. கூலியைக் கொடுப்பதே கஷ்டப்பட்டுக் கொண்டுதான் மூக்கால் அழுது கொண்டே கொடுப்பான். இந்த ரேஷன் காலத்திலும், கள்ள மார்க்கெட்டு நிறைந்திருக்கும் இப்பொழுது அவளால் நிர்வகிக்க முடியவில்லை. ஏழ்மையின் பயனாக அவளுக்குத் திருட்டுப் பட்டமும் வந்து கேஸ் விசாரணை நடந்து மூன்று வருஷ ஜெயில் வாசத் தண்டனையும் நேரிட்டு விட்டது. அவள் கணவன் படுத்த படுக்கையாக கவலைப்படுகிறான். ஐந்து வயதானதும், மூன்று வயதானதுமான இரு குழந்தைகளைக் கவனிப்பாரில்லை. நன்றாயிருந்தாலும், நாலு காசு கையிலிருந்தாலும் உற்றார், உறவினர், நான், நீ என்று போட்டியிட்டுக்கொண்டு உதவி செய்வர். இல்லாவிட்டால் பார்த்தாலும் பாராதது போல வேறு பக்கம் திருப்பிச் செல்லும் இயல்பல்லவா. அவள் உண்மையில் நிரபராதி…என்னிடம் நடந்தவற்றைக் கூறி அழுது புலம்பினாள்......"

"எனக்கு விவரமே புரியவில்லை. நான் கேட்பதற்கு பதில் சொல்லு, அவள் பெயர் என்ன?"

"காத்தாயி." "அவள் உன் கூடப்பிறந்தவளா?" "இல்லை. என் பக்கத்து வீட்டில் வசிப்பவள். பாவம். எஜமானனின் மகன் மகா போக்கிரி. இவளை ஒரு கை பார்க்கத் துணிந்தானும். ஆனால் அவள் அதற்கிடங் கொடாமல் தப்பி வந்தாளாம் ஒரு நாள் வீட்டில் எஜமானன், எஜமானி இல்லாத சமயத்தில் அவன் மாறு சாவி போட்டு பதுக்கி வைத்திருந்த துணிகளில் சிலவற்றை எடுத்துக் கொண்டு போய் விற்றுவிட்டு தன் கைசிலவுக்கு வைத்துக் கொண்டானும். காத்தாயியை நம்பிதான் அவர்கள் வெளியே சென்றிருந்தனர். அவர்கள் வந்த பொழுது காத்தாயி உள்ளது உள்ளபடியே கூறி விட்டாள். அவர்கள் மகன் தன் விஷயத்தில் காட்டிய கெட்ட எண்ணத்தையும் அறிவித்திருந்தாளாம். ஆனால் போதாத காலம் அவர்களுககு

மகளின் மீது கோபம் வரவில்லை. இவள்தான் ஏதோ திருசமன் செய்திருக்கிறாள் என்று நினைத்து சிறிதும் இரக்க மில்லாமல் போலீஸைக் கொண்டு பய முறுத்தி அடித்து விசாரணை செய்தனர். இதையெல்லாம் வெகு சந்தோஷமாகவே அவர்கள் மகன் வேடிக்கை பார்த்துக்கொண்டு "இன்னம் நன்றாகத் திருடியை உதையுங்கள்" என்றாரும். அவள் வயிறு பற்றி யெரிந்தது. ஏழை. பணம் எவ்வித அக்கிரமத்தையும் மறைத்து விடுகிறது. அவளை மீட்காவிட்டால் அவளது வாழ்க்கை பாழ்படுகிறதோடல்லாமல் ஒரு குடும்பமே நசித்துவிடுகிறது. அக் குடும்பத்தின் சாபம் உலக மக்களையே சாரும்......"

"சரி. உனக்கு அவள் உறவில்லை, நிச்சயமாக நீ அவள் நிரபராதி யென்பதை அறிவாயா?"

"ஆம். நிச்சயமாய்த் தெரியும். சாதாரணமாகவே கடன் வாங்கி சாப்பிடுவதை வெறுப்பாள். பட்டினியிருந்தாலும் இருப்பாள். ஒருவரிடமும் யாசித்து வயிறு வளர்த்தவளே யல்ல. ஏழ்மையிலும் கண்யமானவள். பப்ளிக் ப்ராசிக்யூடர் அவர்களுக்கு வேண்டியவனுடையால் கேஸை சரியாக ஜோடித்து பழிக்குப் பாத்திரமாக்கி விட்டனர் அந்த கள்ள மார்க்கெட் கருமி முதலாளி...."

"சரி. நான் கவனித்துக் கொள்கிறேன். சவகாசமாக வந்து பார்." என்று அவளை அனுப்பினர். மேலும், "அவர்களென்ன தேவதைகளா பயப்பட! நாம் காட்டில் வசிக்கவில்லையே. இந்த விஷயங்களுக்கெல்லாம் அதைரியப்படக் கூடாது. இந்த வயதில் நம் நாட்டில் போர் எழுந்தாலும் அதைக் காக்க உங்களைப் போன்ற வீரப் பெண்கள் தணிந்துவர வேண்டாமா? ராணி அகல்யாபாய், ஜான்ஸி ராணி போன்ற பெண்களை நன்ற நமது தாயின் ஏழை மக்களுக்கு சரி சமானமான அந்தஸ்தும நியாயமும் வழங்க அவளது உயரிய மக்கள் போராடுவோம் பயப்படாதே..." என்று தைரியம் சொல்லி அனுப்பினர்.

அவளுக்கு நியாயம் வழங்க இருமாதம் பிடித்தது. அதற்காகப் பட்ட அலைச்சல் சொல்லத் தாமல்ல. ஒரு வக்கீலிடம் சென்றார். அவர் "எங்களுக்கு இதெல்லாம் எதற்கு" என்று சொல்லி தட்டிக் கழித்து விட்டார். அந்த வக்கீல் வியாபாரிக்கு வேண்டியவன். ரேஷன் காலத்தில் கூட தங்கு தடையில்லாமல் துணிகளை பிளாக்குப் பதிலாகத் தந்ததால் அவனை விரோதித்துக் கொள்ள அவர். இஷ்டப்படவில்லை. ஆனால் அவர் விடாப்பிடியாக ஒவ்வொருவராய்ப் பார்த்து வந்தார். கடைசியில் அவருக்கேற்ற ஒருவர் அகப்படத்தான் செய்தார். உண்மைக்கு அழிவில்லை யென்பதை உலகம் அறிய வேண்டாமா? அவர் மனைவி கூட "ஏழை அவள் திருடியிருக்கலாம், எதற்கு எல்லாவற்றிற்கும் அக்ஷதை போட்டுக் கொள்ளுகிறீர்கள்." என்று சொல்லிப் பார்த்தாள். அவரா பின் வாங்குபவர். கேஸ் மறு விசாரணை நடந்தது. உண்மை வெளியாயிற்று. கள்ள மார்க்கெட்டுக்காகப் பதுக்கி வைத்திருந்த துணிமணிகள் வெளி வந்து வியாபாரியின் குட்டை வெளிப்படுத்தி விட்டது. அவருக்கும், அவருடைய மகனுக்கும் சரியான தண்டனைகள்

கிடைத்தது. கத்தாயி விடுவிக்கப்பட்டாள். அந்த ஏழைக் குடும்பத்தில் மறுபடியும் குதூகலம் நிறைந்து காணப்படலாயிற்று. கருணாகரனை . கடவுளே மனித ரூபத்தில் வந்து தர்மைக் காத்ததாக அவ்வேழைக் குடும்பம் அவரைப் போற்றி நன்றி செலுத்தியது.

"எல்லாம் சரியாகத்தான் முடிந்தது. சத்தியமே வெற்றி என்பதை திரிசனமாகக் காண்கிறோம். ஆனாலும் நீங்கள் சர்வ ஜாக்கிரதையாகத் தானிருக்க வேண்டும்," என்றாள் டாக்டரின் மனைவி வடிவாம்பாள்.

"வடிவு, நீயே யோசனை பண்ணு. நீ ஒரு ஸ்திரீயாகையால் நான் சொல்வதைப் புரிந்து கொள்ளுவாய். மனிதனைச் சிருஷ்டி செய்வது சாமான்ய காரியமா? நீயே உணர்ந்திருப்பாய். நளினாவைப் பெற ஒன்பது மாதம் சுமந்தாய். அவளைப் பெறும்பொழுது எவ்வளவு அவதிப் பட்டாய். பிறகு படிப்படியாக அவளை வளர்க்க எவ்வளவு கஷ்டங்களை இராப் பகலாய் தூக்க மில்லாமலும், வேளா வேளைகளில் சாப்பாடில்லாமலும் அனுபவித்தாய். கடைசியில் அவள் மங்கைப் பருவமடைந்த பிறகும் அவளுக்கேற்ற கணவன் வாய்த்து அவள் கஷ்டமில்லாமல் இருக்க வேண்டுமே யெனக் கஷ்டப்படுகிறோம். அதுபோலத் தான் சமூக அமைப்பும். ஒருவனை அழித்துவிடுவது சுலபம். நம் தேசத்தில் ஜன நெருக்கமாயிருக்கிறது யென்பதாலேயே அவர்களை ஒழிக்க முடியுமா? எவ்வளவு பெயர் துணி யில்லாமல் அலைகின்றனர். கள்ள மார்க்கெட்டில் ஒன்றிற்கு நாலாக விற்று லாபம் அடைவதோடு மட்டுமின்றி அநியாய வழக்குகளிலீடுபட்டு கிராமாந்திரங்களை இம்சித்த அவனுக்கு இன்னம் கூட பத்து வருடத் தண்டனை கொடுத்திருக்கலாம். திருடன் அவனா? அவளா? அவள் ஏழை, ஆதரவில்லை யென்பதற்காக அவளை களங்கப் படுத்த முயன்று, வாழ்வை முறியடிக்கவும் செய்த பாதகனைத் தூக்கிலிட்டால் கூட என் மனம் சாந்தப்படாது. இப்பொழுதாவது அவர்கள் என்றும் உண்மை தான் தழைத்தோங்குமென்பதையும், இறுதியில் அது தான் வெற்றிகாணு மென்பதை யுணர சந்தர்ப்ப மேற்பட்டதல்லவா. அதுதான் நான் கொண்ட லட்சியத்தின் சித்தி." என்று உணர்ச்சி ததும்பக் கூறினார் டாக்டர் கருணாகரர்.

"ஏழைகளுக்கோர் நியாயம், பணக்காரர்களுக்கோர் நியாயம் என்பதைத் தகர்த்து சரிசமமான முறையில் நியாயம் வழங்கி உலகின் மக்கள் இன்புறவதே நமது சமூக ஆக்க வேலையின் பிரதான அம்சமென்பதை மேலும் கூறி முடித்தார்.

*

பிறரைக் கண்டு 'ஐயோ பாவம்' என்று இரக்குபவன் வெறும் வாய் அனுதாபம் காட்டும் முன் தன்னால் ஏதாவது உபகாரம் செய்ய முடியுமா என்று யோசிக்க வேண்டும்.

'அரிஸ்டாடில்'



தமயந்தி

"வா அம்மா லக்ஷ்மியா? ஏது இவ்வளவு தூரம் இந்தக் கொட்டுகிற மழையிலே வந்தது."

"ஒன்றும் விசேஷமில்லை. அடுத்த வாரம் தீபாவளி வருகிறதே. என்ன செய்யலாம் என்று உன்னை யோசனை கேட்க வந்தேன்.

"போன வருஷம் தீபாவளியன்று அரைப்படி கடலை கொடுத்தார்கள். அதை அன்று சாயந்திரமே உடைத்து அரைத்து மைசூர்ப்பாகு செய்தேன் இந்த வருஷம் அப்படியில்லாமல் ஒரு படி பருப்பு அரைத்து மாவாக வைத்திருக்கிறேன்."

ஏதோ ஒரு தித்திப்பும், ஒரு காரமும் செய்து சமையலை நன்றாகச் செய்துவிடலாமென நினைக்கிறேன்."

"உனக்கு அப்படி செய்து விடலாம். தலை தீபாவளிக்காக பெண்ணும் மாப்பிள்ளையும் வருகிறார்களே! எனக்கு ஒரு யோசனை சொல்லு."

ரொம்பப் படாடோபமில்லாமல் அந்த ஒரு படி மாவில் எவ்வளவோ தினுசுகள் செய்துவிடலாம்.

ஓமப்பொடி, காரசேவை, மைசூர்ப்பாகு 'மிக்ஸர்.'

ஓமப்பொடி

"ஓமத்தை அரைத்துவிட்டு உப்பு ஜலம், பெருங்காயம், இவைகளை விட்டு கடலை மாவைப் பிசைந்து ஓமப்பொடித் தட்டில் பிழியணுமே அதானே சொல்லுகிறாய்."

"ஆமாம். ஓமத்தை அரைத்து விடுவதைக் காட்டிலும் ஓமத்தை கொஞ்சம் வறுத்துப் பொடி பண்ணி சேர்த்தால் பச்சை நாத்தமில்லாமல் 'கம்'மென்று வாசனையாயிருக்கும்." "ரொம்ப சரி. ஓமப் பொடிசெய்து விடுகிறேன். காரசேவை யென்றாயே அதைச் சொல்லு தமயந்தி."

காரசேவை

"காரசேவையா? கால்படி கடலை மாவோடு ஆழாக்கு அரிசி மாவு போட்டுக்கொள். ஒரு டீஸ்பூன் சீரகம் பொறுக்கிப் போடு. ஒரு தேக்கரண்டி வெண்ணெய், வேண்டிய உப்பு ஜலம், பெருங்காய ஜலம் விட்டு, மிளகாய்ப்பொடியும்சேர்த்து வெறும் தண்ணீர் விடாமல் தேங்காய்ப் பால் பிழிந்து சேர்த்து பிசைந்து ஓட்டைகள் உள்ள தட்டில் தேய்க்கவும். ஒரு அங்குல நீளத் துக்குக் கம்பிகள் விழுந்தால் போதும். 'கர கர' 'வென்று ரொம்ப நன்றாயிருக்கும்."

"எனக்கு மைசூர்ப்பாகு செய்யும் விதம் தெரியும. சர்க்கரைப்பாகுக் வைத்து கடலை மாவைத் தூவி வேண்டிய மட்டும் நெய் சேர்த்துக் கிளறி ஒரு தட்

டில் கொட்டி பில்லைகள் போட ணுமே, அவ்வளவுதானே?

"ஆமாம். ஆனால் தட்டில் கொட்டும்போது பாத்திரத்தில் ஒட்டாமல் பூத்து திரண்டுவரும். நிறமும் மாறும். 'செவே லென்ற நிறம் வந்ததும் நெய் தடவின தட்டில் கொட்டு. நன் றாக ஆறுவதற்கு முன்னரே பில்லைகள் போடு."

"மிக்சருக்கு என்னவெல்லாம் போடச் சொல்லுகிறே. பொரித்த அவல், காராபூந்தி, காராசேவை, தேன்குழல், முறுக்கு, ஊறவைத்து வறுத்த கடலைப் பருப்பு இவ்வளவு தானே."

"என் உருளைக் கிழங்கு வறு வல், சேனைக் கிழங்கு வறுவல், காரட் வறுவல், ஊறவைத்து பொரித்த பட்டாணி, சீடை, வேர்க்கடலை,முந்திரி முதலியவை" களையும் பொரித்துக் கலக்கலாம்.

"சமையல் என்ன செய்யச் சொல்கிறாய்?" "உருளைக்கிழங்கு தான் எல்லாக் காய் கறிகளையும் விட மலிவாய்க் கிடைக்கிறது. கடலைப் பருப்பு, பயத்தம் பருப்பு, இரண்டுமாக ஒரு ஆழாக்கு ஊற வைக்கவும். நன்றாகக் களைந்து, கல்லரித்து உப்பு, பெருங்காயம், நெல்லிக்காய் பருமன் புளி, தேங் காய் மூடி ஒன்று, பச்சை மிள காய் பத்து, கொத்தமல்லி விதை ஒரு தேக்கரண்டி, உருளைக் கிழங்கு ஆறு, இவைகளை ஒன்று கச் சேர்த்து கல்லுரலில் போட்டு நன்றாக அரைக்கவும். பாணலி யில் எண்ணெய் விட்டு கடுகு, கருவேப்பிலை தாளித்து அரைத்த விழுதைப் போட்டு கைவிடாமல் கிளறவும்.

"உருளைக்கிழங்கை வேக வைக்க வேண்டாமா?" வெந்த உருளைக்கிழங்கை பருப்போடு வைத்து அரைத்தால் ருசியா யிராது. பச்சை உருளைக் கிழங்கைத் தான் வைத்து அரைக் கணும். அவியல், உருளைக்கிழங்கு அவியல், பாவக்காய் பிட்லை டொமாடோ ரஸம் இவைகளைச் செய்து அப்பளாம் பொரித்து விடு.

டொமாடோ ரஸத்திற்கு கடைசியில்தானே பழங்களை துண்டு துண்டுகளாக நறுக்கிப் போடவேண்டும்.

நன்றாகப் புளித் தண்ணீர் கொதித்த பிறகு உப்புப் போட வும். மிளகு, மிளகாய் வற்றல், கொத்தமல்லி விதை, கடலைப் பருப்பு இவைகளை வறுத்து கொதித்த ஜலத்தில் பொடி பண்ணிச் சேர்க்கவும். டோமா டோவை பிழிந்து தோலில்லாமல் சாறு பிழியவும்.



பருமன்

மீனு சதாசிவம்

அன்று எங்கள் வீட்டுக்கு வந்திருந்த தோழிகளிடையே நடந்த விவாதம் மிகவும் முக்கியமானதும் ஸ்வாரஸ்யமுமானதாகும்.

ஸ்ரீமதி நாயுடு: ஸரோஜி ஏன் இரண்டு நாட்களாக வரவில்லை? தீபாவளிக்காக மும்முரமோ என்னவோ?

மீனு: அவளுடைய புருஷன் பரம சாது. எல்லோரையும் போல தீபாவளிக்காக வைரமோதிரம் கூட கேட்கவில்லை. ஏதோ 300 ரூபாய்க்கு ஜவுளி எடுக்கப் போவதாகச் சொன்னார்கள்.

ஸ்ரீமதி தாஸ்: இந்த விஷயத்தில் எல்லோரையும்விட கெட்டிக்காரி மீனுதான். நாமெல்லாம் 100, 150 கொடுத்துப் பட்டுப் புடவை வாங்கிக் கொண்டு வந்தோமே; அவைகளைக் கவனிப்பவர்களே யில்லை. முந்தாநாள் சபாவில் கச்சேரிக்கு மீனு கதர்ப் புடவை கட்டிக் கொண்டு வந்திருந்தார். எல்லோருடைய கண்களும் அவர் மேலேயே இருந்தது.

ஜானகி: மீனு சபை நிறைந்த மனுஷி. அதோடு கதர்ப் புடவையும் கட்டிக் கொண்டுவிட்டால் கேட்க வேண்டுமா? (சிரிப்பு)

மீனு: உங்களால் என்போல் ஆகமுடியாது. நான் வேண்டுமானால் உங்கள்போல் ஆகிவிடலாம். மாதத்திற்கு 20 ரூபாய்க்கு டானிக் வாங்கிச் சாப்பிட்டபோதிலும் நீங்கள் இருக்கும் இடத்தை விளக்கேற்றித்தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

டாக்டர் கௌரி: மன்னி சொல்வது ஆயிரத்திலோர் வார்த்தை. நான் டில்லியிலிருந்து புறப்படுவதற்கு முதல் நாள் திவான்பகதூர் ரங்கசாமி அய்யங்காரின் மனைவியும் மாட்டுப் பெண்ணும் சிகிச்சைக்காக வந்திருந்தார்கள். (சிரிக்கிறாள்) மாமியாருக்கு உடம்பு இளைக்க மருந்து வேண்டுமானால் மாட்டுப் பெண்ணுக்கு உடம்பு பருக்க மருந்து வேண்டுமாம். மாமியார் எடை 246 பவுண்டு. மாட்டுப் பெண்ணின் எடை 83 பவுண்டு; சரியாக மூன்றிலொரு பங்கு; இரண்டு பேரும் சாப்பிடுவது ஒரே ஆகாரம்தான். இன்னும் மாமியார் சில தினங்களில் இரவில் "பலகாரம்" தான்.

ஸ்ரீமதி தாஸ்: அவர்களுக்கு என்ன மருந்து கொடுத்தனுப்பினீர்கள்?

கௌரி: மருந்து கொடுக்கவில்லை. அன்று எனக்குச் சற்று ஒழிவிருந்தபடியால் அவர்களிடம் விசாரித்துப்பல உண்மைகளையறிந்து கொண்டபடியால் ஆகார விஷயத்தில் சில மாறுதல்களை மாத்திரம் சொல்லியனுப்பிவிட்டேன். என் அனுபவத்தில் உடல் பருமனுக்குக் காரணம் உடம்பிலில்லை, மனோதத்துவத்தில் தானிருக்கிறது என்று தோன்றுகிறது. பலர் என்ன நினைக்கிறார்கள், மனோ வேதனை

யால் இளைத்துப் போவதாக. ஆனால் உண்மையில் மனோ வேதனையுள்ளவர்களில் அநேகர் ஸ்தூலமாகத்தான் இருக்கிறார்கள். சில வண்ணங்களும், உணர்ச்சி வேகங்களும் தமக்குத் தெரியாமலேயே அதிகமாகச் சாப்பிட மனிதர்களை—முக்கியமாக பெண்களைத் தூண்டிவிடுகிறது. பருத்த மனிதர்களைக் கண்டு நகைக்கிறோம் அல்லவா! இளைத்திருப்பவர்களை விட ஸ்தூலமாயிருப்பவர்கள் தான் சீக்கிரம் இறந்து போய்விடுகிறார்கள்.

மீரு: என்ன அக்கா, என்னை அதிக சீக்கிரம் அனுப்பிவிட யோசனை செய்கிறாய் போல் இருக்கிறதே?

கௌரி: பொதுவாகச் சொல்லி வந்தேனே ஒழிய வேறில்லை. என்ன அசட்டாட்டம் பேசுகிறாயே மன்னி, உனக்கு மனப்பிராந்தியே ஒழிய வேறில்லை. உன் எடை என்ன? 110. நான் 150 பவுண்டு இருக்கிறேன். கவலையில்லாததால்—குழந்தைக் குட்டிகள் உபத்திரவம். அகமுடையான் உபத்திரம் இவையெல்லாம் இல்லாததால் 'கொழு கொழு' என்று பதினைந்து வயதுப் பெண் மாதிரி இருக்கிறாய்.

ரத்த நாளங்கள் கடினப்பட்டு போவதால் அதிக ரத்தக் கொதிப்பு முதலிய வியாதிகளுக்குக் காரணம், உடம்பில் அதிகப்படியாகச் சேர்ந்திருக்கும் கொழுப்பு தான். இருதயமும் மூத்திர கோளங்களும் பலவீனப்பட்டு போவதால் இளைக்க வேண்டுமென்று நானே எத்தனையோ வியாதியஸ்தர்களுக்குக் கூறியிருக்கிறேன். இன்ஷூரன்ஸ் கம்பெனிக்காரர்கள்கூட 'தொப்பை'ப் போட்டிருக்கிறவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு பயப்படுகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளேன்!

ஸ்தூல சரீரிகளை இருபாகங்களாகப் பிரிக்கலாம். எதைச் சாப்பிட்ட போதிலும் பருத்துக் கொண்டே போகிறவர் ஒரு ரகம். அமித ஊண் உண்டு பருக்கிறவர்கள் மற்றொரு ரகம். முதல் வகுப்பில் சேருகிறவர்கள் மிகவும் சொற்பம்தான். இவர்களுடைய குழலற்ற சதைக் கோளங்கள் சரியாய் வேலை செய்வதில்லை. அடுத்த காரணத்தினால் பருத்திருக்கிறவர்களில் சிலர், பத்திரிகைகளில் வெளியாகும் விளம்பரங்களைப் படித்து விட்டு அந்த மருந்துகளை வாங்கி சாப்பிட்டுவிட்டு வியாதிகளுக்குள்ளாகிறார்கள்.

ஸ்ரீமதி தாஸ்: அப்படியென்றால் டாக்டர்கள் ஏன் தங்களிடம் வரும் வியாதியஸ்தர்களை எச்சரிக்கக் கூடாது.

ஸ்ரீமதி நாயுடு: அப்படி எச்சரித்துக் கொண்டிருந்தால் டாக்டர்கள் வரும்படி என்ன ஆகும்? மருந்து கொடுக்காமல் புத்தி சொல்லும் டாக்டர்களுக்கு நம் தேசத்தில் யாராவது பணம் கொடுப்பார்களா?

கௌரி: அது மாத்திரமேயில்லை. எந்த ஸ்திரியும் தான் கண்டபடி உண்பதால் உடல் பருக்கிறதென்று சொன்னால் ஒப்புக்கொள்ளமாட்டாள். அதனால் தான் தெய்வமேயென்று எங்கேயோ கழுத்தில் காசு மாலைக்கடியில் ஒளிந்து கொண்டிருக்கும் தைராய்டு கிளாண்டின் தலையில் பழி விழுகிறது.

ஸ்தூலமாயிருப்பவர்களெல்லாம் வயிறறியாமல் தின்றுவிடுகிறார்களென்று நான் சொல்வதாக நினைக்கக் கூடாது. தான் ஏன் அடிக்கடி எதை

பாவது மென்று கொண்டே இருக்கிருள் என்று அவளுக்கே தெரியாது.

சிறு குழந்தைகளாக இருக்கும்போது பருமனு யிருந்த பல குழந்தைகள் வயது வந்த ஸ்திரீயாகும்போது எலும்பும் தோலுமாக ஆகி விடுகிருர்கள். டாக்டர் அகல்யாவை உங்களுக்குத் தெரியும் அல்லவா? இப்பொழுது ஜானகி மாமியை விட ஒல்லியாக இருக்கிருள். 15 வருஷங்களுக்கு முன் "தொண்ணை தொட்டு" என்று எப்படி இருந்தாள் தெரியுமா?...

உபயோகமற்ற ஸூச் சதையை ஒழிப்பது வெகு சுலபம். சாதாரணமாக குடும்பங்களில் உண்பதைத் தவிர வேறு ஒரு சுகத்தையும் அறியாதவர்கள் தான் பருமனுகிருர்கள். அவர்களுக்கு வாழ்க்கையில் உற்சாகத்தை ஏற்படுத்தினுல் 'அமித ஊண்' என்பதை நிறுத்திவிட்டு, உடம்பு மெலிதாகும் வண்ணம் சாப்பிட்டு வீண் சதையை ஒழிப்பார்கள்.

வேறு வேலையின்றி வீட்டில் புருஷர்கள் ஒரு நாள் தங்கினுல் அவர்களுக்கு எத்தனை வகை பக்ஷணங்கள் செய்து கொடுக்க வேண்டி யிருக்கிறது. மனே தத்துவத்தில், ஸ்திரீ புருஷர்களுக்குள் அதிக வேற்றுமையில்லை. ஆகையால் ஒல்லியாவதற்கு மருந்து சாப்பிடுவதற்குப் பதிலாக நம்முடைய தினசரி அலுவல்களைத் திருத்தியமைத்துக் கொண்டு ஆகார விஷயங்களிலும் ஓரளவு ஜாக்கிரதையாக இருந்தால் போதும்.



மனித ஜாதியின் உற்பத்தியின்போதே பிறந்தது இன்ப துன்பம் என்பதே. விதி விதி என்று வீண் பழி பேசுவோர் அறிய வேண்டிய முதல் உண்மையாகும்.

'சௌ ஜானி'

வெங்காரம்

"டக்டர்"

ஆங்கிலத்தில் வெங்காரத்திற்கு 'போராக்ஸ்' என்று பெயர். இதை டங்கணம் என்றும் பொரிகாரம் என்றும் சொல்வதுண்டு. கடைச் சரக்குடன் 16 பாகத்திற்கு ஒரு பாகம் சுண்ணாம்பு சேர்த்து ஒரு படி ஜலம் சேர்த்துக்கொதிக்கவைத்து பளிங்கு படியும் பக்குவத்தில் இறக்கி வடிகட்டி, படிகங்களாக எடுத்து உலர்த்தி வைத்துக் கொள்ளலாம். அல்லது சூரிய வெப்பத்தில் வைத்தாவது அனலில் வைத்தாவது, உப்புக் கட்டியவுடன் எடுத்து வைத்துக் கொள்ளலாம்.

ருசியில் இது துவர்ப்பாயும் தித்திப்பாயும் இருக்கும்.

அக்கிக்கு ஒரு சிட்டிகை வெங்காரப் பொடியை தேனில் இழைத்துத் தடவினால் குணமாகும்.

வாயில் ஏற்படும் இரணங்களுக்கு ஒரு ஸ்பூன் வெங்காரத்தை ஆறாக்குச் சுடு ஜலத்தில் கரைத்துக் கொப்பளிக்கலாம்.

முலைக் காம்பில் ஏற்படும் வெடிப்பிற்கும் இரணத்திற்கும் ஒரு ஸ்பூன் வெங்காரத்தை ஒரு அவுன்ஸ் வெந்நீரில் கரைத்து தூய வெண்மையான மெல்லிய வஸ்திரத்தை நனைத்துப் போட வேண்டும். குழந்தைகளுக்குப் கொடுக்கும் பால் போது ஸ்தனங்களை அலம்பி விடவேண்டும்

ஆசன வெடிப்புக்கு வெங்காரப் பொடியோடு முகத்திற்கு ஒற்றிக்கொள்ளும் பௌடரைக் கலந்து ஒற்றலாம்.

ஒரு ஸ்பூன் வெங்காரப் பொடியை ஒரு பலம் பன்றி நெய்யில் இழைத்து புண்ணாக நோகும் மூலக் கட்டிகளுக்குப் போட்டால் வலி தீரும்.

மாதவிடாய் சரியாக ஆகாததற்கு சுமார் 5 அல்லது 10 கெல்லிடை சுத்தி செய்த வெங்காரத்தைச் சாப்பிடலாம். மூத்திரம் போகும்போது எரிச்சலுக்கும் வெங்காரம் 5 கெல்லிடை உட்கொள்வதால் குணமுண்டாகும்.

கட்டிகளுக்கு, கொதிக்கும் ஜலத்தில் வெங்காரத்தைக் கரைத்து அதில் வெண்மையான துணியை நனைத்து சூடாகவே பிழிந்து வைத்துக் கட்டலாம். அல்லது ஒத்தடம் கொடுக்கலாம்.

வெங்காரப் பொடி ஒரு தோலா, கந்தகப் பொடி ஒரு தோலா, காசுக்கட்டித் தூள் ஒரு தோலா, நெய் 2 பலம் சேர்த்துக் குழைத்து இரணங்களின் மேல் போட, குணமுண்டாகும்.

படர் தாமரை, மேக அரிப்பு இவைகளுக்கு ஒரு ஸ்பூன் வெங்காரத்தைக் காடியில் கலந்து உபயோகிக்கலாம்.

எலிகளை ஒழிப்பதற்கு அரிசி மாவோடு வெங்காரப் பொடியைக் கலந்து சிறிது பெருங்காயத்தை யாவது காய்ச்சிய தேங்காயெண்ணெயை யாவது வாசனைக்குச் சேர்த்து எலிகள் வரும் இடத்தில் வைத்திருந்தால் அதைத் தின்று வாய் புண்ணாவதால் அந்த இடத்திற்கே வராமல் போய்விடும்.

கரப்புகளை ஒழிக்க வெங்காரப் பொடியைத் தூவி வைக்கலாம்.

பெண்களும் சட்ட திட்டங்களும்

நாகு

ஹிந்து சமூக வாழ்க்கையில் ஆணொன்றும் பெண்ணொன்றும் பிரித்துப் பேசவே இடமில்லாமல் நமது முன்னோர்கள் பெண்ணைப் புருஷனுடன் ஐக்கியம் செய்து விட்டார்கள். சங்ககிரியில் காட்சியளிக்கும் அர்த்தநாரீஸ்வரருடைய விக்கிரகம் இவ்வைக்கியத்தைச் செவ்வனே தெளிவு படுத்துகிறது. ஜீவாத்மா பரமாத்மாவில் அடங்கி கூடார்த்தமாயிருப்பது போல பெண் புருஷனில் அடங்கியும், பரமாத்மா பக்தர்களுடைய இருதய கமலத்தில் அடங்கியிருப்பது போல் புருஷன் ஸ்திரீயுடன் ஐக்யமாக இருப்பதையும் ஐதிகமாகக் கொண்டே திருமூர்த்திகளையும் அவர்களது சக்திகளையும் கற்பனை செய்திருக்கிறார்கள். விஷ்ணு லக்ஷ்மியை ஹிருதயத்திலும், பிரமன் சரஸ்வதியை நாவிலும், சிவன் பார்வதியை சரீரத்தின் ஒரு பகுதியிலும் வைத்துக்கொண்டதாக புராணங்கள் விவரிப்பதும் ஸ்திரீ புருஷ ஐக்கியத்தை ஸ்தாபிக்கவேதான் எனவும் கூறலாம்.

சாஸ்திரங்கள் ஸ்திரீ புருஷ சமத்துவத்தை ஐயந்திரிபறக்கூறியிருந்தபோதிலும், வாழ்க்கையில் புருஷனுடைய உழைப்பால் பெண் வாழ வேண்டிய சந்தர்ப்பம் கர்ப்ப சமயம், பிள்ளைப் பேறடைந்த சமயம், முதலிய சந்தர்ப்பங்களில் நேரிட்டதன் விளைவாக பெண் மக்கள் ஆடவர்களுக்கு அடங்கியிருக்கும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. இதோடு தனக்காகப் பல இன்னல்களுக்குள்ளாகும் புருஷர்களுக்கு நன்றியுடையவளாக ஆரம்பித்த பெண், அவன் பால் அன்பு பூண்டு அவனைத் தன் கடவுளே எனக் கொண்டு வழிபட்டு பக்தி பூண்டு ஒழுகும் மனப்பான்மையை நாளடைவிலடைந்துவிட்டாள். இதனால் தன் வேற்றுமையை அறவே மறந்துவிட்டாள். புருஷனால் தான் தனக்கு வாழ்வுண்டு என்னும் உணர்ச்சியும் ஏற்பட்டுவிட்டது.

புருஷன் மரணத்துடன் தனக்கும் அழிவு ஏற்பட்டதாகக் கருதுவதும் அவன் சடலத்தோடு உடன் கட்டை ஏற நேர்ந்ததும் ஒரு பாகம் சதிபதிகளுக்கு வாழ்க்கையில் இருந்த ஒற்றுமை காரணமாயிருந்தபோதிலும் மற்றொரு பாகம் சமூகம், புருஷனற்ற பெண்ணின் வாழ்க்கையை மிகவும் கொடியதாக்கி விட்டதால் என்பதை மறுக்க முடியாது. விதவைகள் உயிர் வாழ்வதைவிட உடன் கட்டை ஏறுவதை மேலெனநினைத்தார்கள் என்றால் அவர்களுக்கு சமூகம் விதித்திருந்த கொடிய கட்டுப்பாடுகளின் தன்மையை ஒருவாறு ஊகிக்கலாம். நாகரிகம் முதிர்ந்ததாக எண்ணப்படும் இந்த சகாப்தத்தில் ஹிந்து விதவைகளின் பரிதாப வாழ்க்கையை நேரில் காண்பவர்களுக்கு மூட நம்பிக்கை இன்னும் அதிகமாக மலிந்திருந்த சில நூற்றாண்டுகளுக்கு முன் அவர்களுடைய வாழ்வு எப்படியிருந்திருக்கக் கூடும் என்று ஊகிப்பது கடினமாயிராது.

மரணபாதை அதைவிட மேலெனக் கருதியதால்தான் பலர் உடன் கட்டை ஏறினர் என்பது மிகையாகாது. உடன் கட்டை ஏறும் வழக்கம் 1829-ம் ஆண்டில் லார்ட் வில்லியம் பெண்டிங் என்னும் கவர்னர் ஜெனரலால் தடுக்கப்பட்டது.

பத்ம புராணத்தில், 'தன் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொருவருக்கும் அடங்கியே வாழ வேண்டுமென்று ஸ்திரீ சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறாள். கன்னிப் பருவத்தில் தந்தைக்கும், மண வாழ்க்கையில் கணவனுக்கும் விதவையாய் உயிர் வாழ்வதால் மகனுக்கும் அடங்கி நடக்க வேண்டும்.' "அவளுடைய ஜீவியத்தில் எந்தப் பகுதியிலும் தனக்குத்தானே எஜமானி என்று அவள் கருத முடியாது" என்று வசிஷ்டர் கூறியிருக்கிறார். இதுவேதான் பெண்டிரைக் கட்டுப்படுத்தும் எல்லா சட்ட திட்டங்களுக்கும் மேற்கோளாக இருந்து வருகிறது

பெண் பிறந்தவுடன் தகப்பன் அவளுடைய கார்டியன் (பாதுகாப்பாளன்) ஆகிறான். தகப்பன் இறந்த பிறகு பிறக்க நேரிட்டால் அவள் தாயார் அவளுடைய இயற்கை கார்டியன் ஆகிறாள். பிறந்த பிறகு தகப்பன் இறந்த போதிலும் இதே விதிதான். பெற்றோர்கள் இருவரும் இறந்துவிட்டால் நியாயஸ்தலத்தார் தகப்பனுருடைய வர்க்கத்தில் நெருங்கின பந்து ஒருவரையோ அப்படி கிடைக்காவிட்டால் நெருங்கின மாத்ருவர்க்க ஆண் பந்து ஒருவரையோ கார்டியனாய் நியமிக்கிறார்கள். தேவதாசிப் பெண்களுக்கும் நெறி பிசகிய தாய்க்குப் பிறந்த பெண்களுக்கும் தாயார்தான் கார்டியன். மணமானவள் குழந்தைப் பருவத்திலிருந்த போதிலும் கணவன்தான் அவளுக்குக் கார்டியன். புருஷன் இறந்தொழிந்தால் கணவனின் நெருங்கிய பித்ருவர்க்க உறவினர்தான் கன்னிப் பெண்ணின் கார்டியனுவார்.

மகமதியச் சட்டப்படி பெண்களின் பாதுகாப்பு (ஹிஜானத்) பெண் புஷ்பவதியாகும் வரையில் (சட்டரீதியாக பிரௌடை வயது 16 ஆக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது) தாயாரைத்தான் சார்ந்தது. மணமானாலும் கூட தாயாரின் பாதுகாப்புப் பதவி பாதிக்கப்படாது.

பெண் ருதுவானதும், அவர்களுடைய பாதுகாப்பு கணவனைச் சேரும். முதன் முதல் ருதுவாகும் போது கணவன் வீட்டிலிருக்க வேண்டும் என்றொரு வழக்கம் கூட இருக்கிறது. தங்களுடைய பாதுகாப்புக் காலம் கழிந்த பிறகு கூட ருதுவான பெண்ணைத் தங்களுடன் வைத்திருக்கும் பெற்றோர் பெரிய தவறிழைத்தவர்களாகவே சமூகத்தால் கருதப்பட்டு வந்தனர். இந்த வழக்கத்திலும் நன்மையில்லாமலில்லை. ருதுவான பெண்களைக் கவனிப்பாரின்றி வீட்டில் வைத்திருக்கும் பெற்றோர் பயங்கரமானதொரு பொறுப்பை வகிக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. வயது வந்த பெண் இயற்கையின் தூண்டுதலை அடக்கச் சக்தியற்றவளாக இருந்தால் அவளுடைய ஆயுட்காலமுழுதும் வீணாகக் கூடிய தவறை இழைக்க நேரலாம். கன்னிகைகளின் கற்பைக் குலைக்கும் பொறுப்பற்ற இளைஞர்கள் பலருண்டு. இந்த அபாயத்தைத் தவிர்க்க கன்னிகழிவதற்கு முன் மணஞ்செய்யும் வழக்

...த்தை அவலம்பிக்க எண்ணினால் தகுந்த பக்குவமடையு முன்னரே ஒரு பெண் தாயாராகும் தவறான நிலைமை ஏற்பட ஏதுவாகிறது. மேலும் காதல் ஏற்படுவதற்கும் ஸ்திரீ புருஷர்கள் பரஸ்பரம் அறிந்து ஸ்வயம்வரம் செய்து கொள்வதற்கும் இடமில்லாமற் போகிறது. இதனால் கவிகளின் கற்பனா சக்தி உபயோகப்படுவதற்கு அவகாசமின்மையால் கலைவளர்ச்சியும் ஓரளவுக்குப் பாதிக்கப்படுகிறது.

பால்ய விவாகங்களின் கொடுமை அளவுக்கு மீறிவிட்டபடியால 1929-ல் சாரதா சட்டம் அமுலுக்கு வரவேண்டியதாயிற்று. இந்தச் சட்டப்படி பெண்ணுக்கு 14-வயதுக்கு முன்னும் பிள்ளைக்கு 18-வயதுக்கு முன்னும் கல்யாணம் செய்வது குற்றமாகிறது. இந்தச் சட்டத்தின் விளைவாக இப்பொழுது பெண்களின் கலியாண வயது சராசரி 17-ஆக உயர்ந்திருக்கிறது.

18 லிருந்து 30, 40 வயதான 'கன்னிகை' களுக்குக் கூட 'கன்னிகாதானம்' நடப்பது கலியுகப் புதுமைகளில் ஒன்று. ஆண் பெண் வித்தியாசம் அறியாத 12 வயதிற்குக் குறைந்த பெண்கள் தான் கன்னிகைகள். சாரதா சட்டத்தின் முதல் விளைவாக கன்னிகாதானம் மறைந்தது. அப்படி மறைந்த ஓர் லக்ஷ்யத்தின் சாயையாகத்தான் தற்காலத்தில் கலியாணங்கள் நடக்கின்றன. இரண்டாவதாக நலங்கு ஊஞ்சல், அம்மான் கோலம் முதலிய பழக்கங்களும் மறைகின்றன. பி. ஏ. படித்த பெண் நலங்கிடச் சம்மதிப்பாளா? அப்படி சம்மதித்தபோதிலும் அழகாய்த்தானிருக்குமா? 25-வயது மணமகளையும் 40-வயது மணமகளையும் தூக்க பீமசேனனும் கடோத்கஜனும்தான் அம்மான்களாய் வரவேண்டும். ஏற்கனவே மணச் சடங்குகள் சுருக்கப்பட்டு வருகின்றன. கூடிய சீக்கிரத்தில் அமெரிக்கா முதலிய தேசங்களைப் போல மணச்சடங்குகள் தங்களுடைய தெய்வீக மேடையிலிருந்து இறங்கி ரிஜிஸ்திரார் ஆபீஸ் பதிவு புஸ்தகத்துடன் அடங்கிவிடும். மணவாழ்க்கையும் ஒரு சமூக ஒப்பந்தமாக எண்ணப்படும் நாளும் வரக்கூடும்.



சகோதரிகளின் சந்தேகங்கள்

[நர்ஸ் லில்லி]

நர்ஸ் லில்லி மிகவும் அனுபவம் வாய்ந்த செவிலித்தாய். அவர் தாய்மார்களின் கேள்விகளுக்கு பதில் எழுதித் தர ஒப்புக்கொண்டிருக்கிறார். அநேக சந்தர்ப்பங்களில் நாம் பொறுமையை இழக்கும்படி நமது குழந்தைகள் நடப்பதாகத் தோன்றுகிறது. நர்ஸ் லில்லி அவர்கள் எழுதியுள்ள பதில்களைப் பார்த்தீர்களானால் குழந்தைகளின் சண்டித்தனத்துக்கும் சகிக்க முடியாத சில பிடிவாத குணங்களுக்கும் சில பிரத்தியேகமான காரணங்க ளிருப்பது தெரியவரும். அன்னைகளின் அசட்டு அன்பே அநேக சந்தர்ப்பங்களில் சேயின் பிடிவாதத்திற்குக் காரணமாய் விடுகிறது. எரிச்சலாயிருக்கும் சமயத்தில் குழந்தை சண்டித்தனம் செய்தால் அதற்குக் காரணம் தாம் தான் என்பதை மறந்து குழந்தைகளை "தொப் தொப்" என்று அடித்து விடுகிறார்கள். இவர்களெல்லாம் பாகவதம் படிக்க வேண்டும். கிருஷ்ணனின் பால்ய லீலைகளைப் பற்றி அறிந்தார்களேயானால் தமது குழந்தைகள் எவ்வளவு 'சாது'கள் என்று அறிந்து கொள்வார்கள். ஏன், கிருஷ்ணாவதாரமே குழந்தைகளைப் பெற்றோர்களின் கொடுங்கோலாட்சியிலிருந்து விடுவிக்க ஏற்பட்டதாகக்கூட சில புத்திசாலிக் குழந்தைகளைக் கேட்டால் சொல்வார்கள்.

நர்ஸ் லில்லிக்கு எல்லாத் தாய்மார்களும் எழுதலாம். பிரத்தியேகமாகப் பதில் விரும்புகிறவர்கள் தம் விலாச மிடப்பட்ட தபால் உறை அடக்கம் செய்ய வேண்டும். அல்லது ரிப்ளை கார்டு எழுத வேண்டும்.

விலாசம்.

நர்ஸ் லில்லி
"மங்கை"
சக்தி காரியாலயம்
இராயப்பேட்டை,
சென்னை.

சாப்பிடும்போது குதப்புதல்

கேள்வி: "என் மூத்த பெண் மீனுவுக்கென்று எங்கிருந்துதான் இந்த துர்வழக்கம் ஏற்பட்டதோ தெரியவில்லை. மத்தியானமாகட்டும் இராத்திரியாகட்டும், சாப்பிடும் போது ஆகாரத்தை இடது கடைவாயில் அடக்கிக் கொண்டு, சிறிது சிறிதாக "மொசக்கு மொசக்கு" என்று மென்று விழுங்குகிறாள். இது அவளோடு சாப்பிட உட்காருகிறவர்களுக்கெல்லாம் அருவருப்பாயிருக்கிறது. இந்த ஒரு வருஷமாய் நானும் நயத்தாலும் பயத்தாலும் எத்தனையோ சொல்லிப்பார்த்தாய் விட்டது. அவள் திருந்துவதாகக் காணவில்லை. அவள் தங்கையும் அண்ணனும் "ஊசித் தொண்டை தாழி வயிறு" என்று பரிகாசம் செய்கிறார்கள். அவள் தகப்பனுக்கு யாராவது சாப்பாட்டை உறிஞ்சிச் சாப்பிட்டாலே இலையை விட்டு எழுந்து போய் விடுவார். அவரோடு அவளை உட்கார வைத்த

காலெல்லாம், பண்டிகையாயிருந்தாலும் சரி பருவமாயிருந்தாலும் சரி அவர் அவளை அறையாத நாள் கிடையாது. ஆனால் அவள் என்னவோ தன் பழக்கத்தை விட வில்லை. அடித்தால் அழுகிறாள். என் கணவர் எல்லாம் என்னால்தான் என்று கத்துகிறார். இதனால் வீட்டில் அமைதி என்பதேயில்லாமல் போய் விட்டது.''

ரங்கதேவி, சென்னை.

பதில்: நீங்கள் இதற்கு முன்னாலேயே எழுதியிருக்க வேண்டும். சிறு பழக்கங்களை உடனுக்குடனே வேரோடு களைந்து விடவேண்டும். இல்லாவிட்டால் அது உடம்போடு உடம்பாய் ஒட்டிக் கொண்டுவிடும். நீங்கள் சொல்வது போல மீனு ஒருவருக்கு மாத்திரம்தான் இந்தப் பழக்கம் இருக்கவில்லை. இன்னும் எத்தனையோ குழந்தைகளுக்கு இந்தப் பழக்கம் இருக்கிறது. ஆனால் அவர்களின் பெற்றோர்களுக்கு அது அதிக எரிச்சலை உண்டாக்குவதில்லை.

முதல் முதலாக அவளை அழ வைப்பதை நிறுத்த வேண்டும். கூடுமானால் அவளோடு பேசிக் கொண்டே சாப்பிடக் கூடிய அவள் சிநேகிதர்களை வாரத்தில் ஒன்றிரண்டு நாள் சாப்பிடக் கூப்பிடுங்கள். இந்த ரேஷன் காலத்தில் அது முடியாத விஷயமாக இருக்கலாம். இல்லாவிட்டால் அவள் சாப்பாட்டைச் சிறு சிறு தட்டுகளிலும் கிண்ணங்களிலும் வைத்து அவள் தனியாக சாப்பிட விட்டு விடுங்கள். ஆனால் நீங்கள் சாப்பிடும் போது அவளை ஏதாவது எடுத்துப்பரிமாற அடிக்கடி ஏவுங்கள். அவள் பரிமாறும் போது நீங்கள் ஒன்றும் சொல்லக்கூடாது. ஆனால் நீங்கள் சாப்பிடும் முறையில் உங்களுக்குச் சந்தோஷமாக இருப்பதை மாத்திரம் வெளிக் காட்ட வேண்டும். "நான் சாப்பிடுகிறதைப் பார்," என்று சுட்டிக் காட்டவே கூடாது. சாப்பிடும் போதுகூட ஏதாவது விளையாட்டுகளுக்கு ஏற்பாடு செய்தால் தேவலை. ஏதாவது ரஸமான கதைகளைச் சொல்வது நலம். அதில் அவளும் பங்கெடுத்துக் கொள்வதாயிருந்தால் இன்னும் விசேஷம். அந்தக் கதைகளில் ஆகார விஷயங்களைக் கூடுமானால் நுழைக்கவும். ஆனால் அந்தக் கதைகள் தன்னைத் திருத்துவதற்காகச் சொல்லப்படுவதாக அவள் எண்ணவே கூடாது. இதை உங்கள் கணவருக்குப் படித்துக்காட்டி அவரையும் உங்கள் கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். பொறுமையை இழக்கவே கூடாது. அதனால் இன்னும் உபத்திரவம் அதிகமாகுமே தவிர குறையாது.

அதிகமாகத் தண்ணீர் வேண்டும்

கேள்வி: 'நான் என் குழந்தைக்குத் தாய்ப்பாலைத்தவிர வேறொன்றும் கொடுப்பதில்லை. அவனுக்கு ஐந்து மாதங்கள்தான் ஆகிறது. ஆனால் அவன் கீழே போடும் துணிகள் மஞ்சளாகக் கறையாகிறது.' காரணம் என்ன?

அம்ருதவல்லி, மதுரை.

பதில்: இதற்கு முக்கிய காரணம் குழந்தைக்குப் போதிய அளவு ஜலம் சேரவில்லை என்பதாகத்தானிருக்கும். அதனால் மூத்திரம் அதிகமாகத் தீய்ந்து விடுகிறது. பல் முளைக்கும் போதும் வெய்யில் காலத்திலும் இது சாதாரணமாக நேரும். அல்லது குழந்தைக்குத் தடிப்பானசட்டைகள் போட்டிருந்தால் வேர்வையாக அதிக நீர்

சென்று விடுவதால் மூத்திரம் அளவில் குறைந்து அதிக நிறமுள்ளதாகத் தோன்றும். அடிக்கடியோ அல்லது மணிக்கு ஒரு தரமாகவோ நன்றாகக் கொதித்தாறிய ஜலத்தைக் கொடுத்து வரவும். குழந்தை தூங்கும் போது இதற்காக எழுப்பக்கூடாது. காய்ருடும் போது மூத்திரம் மஞ்சள் நிறமாக மாறும் என்பதையும் மறந்துவிடக் கூடாது. ஆகையால் ஒரு வாளி குளிர்ந்த ஜலத்தில் துவாலைகளை அகற்றியவுடன் ஊறவைத்தால் கறையாவது தடுக்கப்படுவதுடன் துவைப்பதும் எளிதாகும்.

பற்களைக் கடித்தல்

கேள்வி: "என் குழந்தைக்கு ஒரு வயதாகி இரண்டு மாதமாகிறது. அவள் "நற நற" வென்று பற்களைக் கடிக்கிறாள். எனக்கு மயிர் கூச்செடுக்கிறது. பல்லீர்கள் தடித்துக்கொண்டிருக்கின்றன. அவள் அடிக்கடி துணியை வாயில் கடித்து இழுக்கிறாள். பல் உடைந்து வந்துவிடுமோ என்று கூடப் பயப்படுகிறேன். ஏதேதோ பொம்மைகளைக் கொடுத்தும் விளையாட்டுக் காட்டியும் அவள் கவனத்தை மாற்ற முயற்சிக்கிறேன். ஆனால் சிறிது நேரத்தில் முன் போலவே ஆரம்பித்து விடுகிறாள்."

சரஸ்வதி, திண்டுக்கல்

பதில்: சில குழந்தைகளுக்குப் பல் முளைப்பது பெரும்பாடாக இருக்கிறது. குழந்தைக்கு அஜீர்ணமாயிருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். எதற்கும் ஒரு சிட்டிகை அஷ்ட சூர்ணத்தை, கொதித்தாறின நீரில் கரைத்துப் போட்டுவது நலம். நிறைய கொதித்தாறிய ஜலத்தைக் குடிக்கக் கொடுக்கவும். ஆகார விஷயத்தில் ஜாக்கிரதையாயிருப்பதோடு காலையிலும் மாலையிலும் சிறிது மில்க் ஆப் மக்னீஷியா கொடுக்கலாம். டொமாட்டோ ரசம் அல்லது ஆரஞ்சுப் பழ ரசம் கொடுப்பது நலம். கடினமான ரப்பர் அல்லது தந்த வளையத்தைக் கடிக்கக் கொடுக்கலாம்.

சண்டித்தனம்

கேள்வி: என்னுடைய ஒன்றரை வயதுப் பிள்ளையைக் குறித்து எனக்கு ஓயாத கவலையாயிருக்கிறது. அப்பப்பா; துர்வாச மகா முனியின் அவதாரம் போல் இருக்கிறது. அது என்ன கோபம்! என் வாழ்க்கையே ஓரோர் சமயத்தில் அவன் படுத்தும் பாட்டில் துன்பமாகத் தோன்றுகிறது. அவன் இஷ்டப்படி விட்டுவிட வேண்டும். இல்லாவிட்டால் அவன் படுத்துகிற அமர்க்களத்தைச் சொல்லவே முடியாது. என்ன இப்படி பதினெட்டு மாதக் குழந்தையைக் குறித்து எழுதுகிறாளே என்று நினைப்பீர்கள். அவன் தலையில் அடித்துக் கொள்வதையும் மயிரைப் பிய்த்துக்கொண்டு "வாள், வாள்" என்று கத்துவதையும் அதைக் கேட்டுவிட்டு அவர் என்னை அறைய கையை ஓங்கிக்கொண்டு வருவதையும் சினிமாவில் போட்டால் கூட்டம் நிறைய வரும். அப்படி என் வாழ்க்கையை அம்பலமாக்கிக்கொண்டு வருகிறான். இந்த சனி எண்டா பிறந்தது என்றுகூட ஒவ்வோர் சமயத்தில் தோன்றுகிறது. அவன் அகங்காரத்துக் கெல்லாம் நான் விட்டுக் கொடுக்கிறதில்லை. ஆனால் அவன் பொட்டுத் தலையிலும் முகத்திலும் அறைந்து கொள்வதில் எங்கேயாவது பட்டு

விடப் போகிறதே என்று கவலையாக இருக்கிறது. அவன் ஆவேசத்திலிருக்கும் பொழுது யாராவது நெருங்கினால் அவர்களைப் பிராண்டிக் கடித்து இரணகளமாக்கி விடுவான். அந்த ஹிட்லர்தான் இப்படி வந்து என் வயிற்றில் பிறந்து விட்டானோ என்றுகூடப் பயமாயிருக்கிறது. ஸ்ரீமதி வஸந்தகுமாரி, நாவல் பித்தியா, இலங்கை.

பதில்: “உங்கள் கடிதத்திலிருந்து இதுதான் உங்கள் தலைச்சன், என்பதும் உங்கள் குடும்பத்தில் உங்களுக் கப்புறம் குழந்தைகளிருக்கவில்லை என்றும் நினைக்கிறேன். நான் தப்பறியவில்லை. சாதாரணமாக இரண்டு மூன்றாவது வயதில் குழந்தைகள் சிறிது சண்டித்தனம் செய்யத்தான் செய்யும். ஆனால் உங்கள் குழந்தை விஷயத்தில் அவன் சண்டித்தனத்திற்குகூட ஏதோ காரணமும் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இரண்டாவது வயதிலிருந்துதான் குழந்தையின் ஐம்புலன்களும் வேலை செய்ய ஆரம்பிக்கின்றன. அவற்றின் அலுவல்கள் சரியாக நடக்க விடாமல் நீங்கள் ஏதோ குந்தகம் செய்து அவனுக்கு எரிச்சலை மூட்டுகிறீர்கள் என நினைக்கிறேன்.

அவனுடைய ஸ்தானத்தில் உங்களை வைத்துக் கொண்டு அவன் புலன்களூடே உங்கள் நடத்தையைச் சிறிது கூர்ந்து கவனித்துப் பாருங்கள். உங்களுக்கே கோளாறு என்னவென்று தெரிந்து விடலாம். அவனுடைய புலன்கள் சரிவர வேலை செய்ய ஒத்தாசை செய்யுங்கள். அதற்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். அவன் துர் அகங்காரத்தால் தலைமயிரைப் பிய்த்துக் கொண்டழுகிறான் என்று நினைக்காதீர்கள். அவனுக்கு இன்னும் அந்தப் பருவம் வரவில்லை. தனக்கு அசந்துஷ்டியை உண்டாக்கும் விஷயத்தை உங்களுக்குத் தெரிவிக்கவே அப்படிச் செய்கிறான் என்று அறிந்து கொள்ளுங்கள். அவன் இதரர்களைக் கடித்து ஹிம்சிப்பதற்குக் காரணம் உலகமே அவனுக்கு எதிராக இருப்பதாகத் தோன்றுவதுதான் என்பதை நீங்கள் உணர வேண்டும். உங்கள் அன்பினாலும் ஆதரவினாலும் பொறுமையினாலும் உலகம் இன்பம் நிறைந்த தென்பதை அவன் உணர வைக்க வேண்டும். அவனைத் திட்டுவதாலும் அடிப்பதாலும் இன்னும் உபத்திரவம் அதிகரிக்குமே ஒழிய குறையாது.

கண்களைக் கவரும்படி பகட்டான நிறத்தில் சில மர உருளைகளை அவனுக்கு எட்டும்படி வையுங்கள். அவற்றைத் தள்ளிக் கொண்டே தவழ்ந்து செல்வதில் அவன் புலன்களுக்குப் பூரண அலுவல் கிடைத்துவிடும். இரண்டு பழுக்கா கிலுகிலுப்பைகளை வேறு வேறு நிறங்களில் வாங்கி வைத்துக் கொண்டு ஒன்று மாற்றி ஒன்றாக அவனுக்கு விளையாடக் கொடுக்க வேண்டும். அவன் அவற்றைத் தரையில் அடிக்கும்போது உங்கள் பொறுமையை இழக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

*

சோவியத் யூனியனில் பெண்கள்

புதுமைப் பெண்

"தேசத்தின் அரசியல் வாழ்க்கையிலும், சமுதாயத்தின் பொது வாழ்க்கையிலும் பெண்கள் தங்களுக்குரிய, ஸ்திரமான ஸ்தானத்தைப் பெறாத வரையில் ஸோஷலிஸத்தைப் பற்றிப் பேச முடியாது என்பது மாத்திரமல்ல, பரிபூரண ஜனநாயகத்தைக் குறித்தே பேச முடியாது" என்கிறார் லெனின். இந்த உபதேசம் தான் சோவியத் யூனியனுக்கு வழி காட்டுகிறது.

சோவியத் யூனியனிலுள்ள "சுப்ரீம் சோவியத்தில்" 189 மாதரசிகள் அங்கம் வகிக்கின்றனர். உலகிலுள்ள ஏனைய பார்லிமெண்டுகளில் இடம் பெற்றிருக்கும் பெண்களின் எண்ணிக்கையை விட இது பன்மடங்கு அதிகம். "சுப்ரீம் சோவியத்தில்" இடம் பெற்றிருக்கும் பெண்களில் பலர் புரட்சியில் மகத்தான சேவை செய்து பெருமை அடைந்தவர்கள். வேறு பலர் பொது வாழ்க்கையில் புதிதாக ஈடுபட்டவர்கள்.

சர்க்கார் ஸ்தாபனங்களில் கணக்கற்ற பெண்கள் இடம் பெற்றிருக்கின்றனர். பொருளாதார இலாகாவில் மாதரசிகள் ஆதிக்கம் செலுத்துகின்றனர்; சமூக ஸ்தாபனங்களை மாதர்கள் நிர்வகிக்கின்றனர். பெண்கள் இல்லாத ஸ்தாபனங்களே சோவியத் யூனியனில் இல்லை எனலாம். மாதரைத் திரையிட்டு மூடும் வழக்கம் சோவியத் நாட்டில் இல்லை.

போல்ஷிவிக்கர்கள் அதிகாரத்திற்கு வந்ததும், பெண்களின் கழுத்தை நெரித்து வந்த சட்டங்களையெல்லாம் ரத்து செய்தார்கள். பெண்களின் அந்தஸ்தை மாற்றி அமைக்கும் பல புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன. சட்டங்களும், சம்பிரதாயங்களும் ஆணுக்கும், பெண்ணுக்கும் பொது. சமூக வளர்ச்சியிலே ஆண்களுக்கு இருக்கும் பங்கு பெண்களுக்கும் இருக்கிறது. இந்நியதியை சோஷலிஸ்டு சர்க்காரால்தான் அநுஷ்டிக்க முடியும்.

பெண்ணுரிமை தழைத்தால் தான் சமூகம் தழைக்க முடியும். பெண்கள் தளர்ந்து, விழுந்து கிடந்தால் சமூகம் எழுந்து, நிமிர்ந்து நிற்க முடியாது. இந்த உண்மை புது உலகச் சிற்பிகளுக்குத் தெரியும்.

மக்கள் பெற்ற மகத்தான வெற்றிக்கு உதாரணமாக நிற்கும் ஸ்டாலின் சட்டம் பெண்களின் ஸ்தானத்தை உயர்த்தியிருக்கிறது. ஸ்டாலின் சட்டத்தின் 122-வது ஷரத்து கீழ் வருமாறு கூறுகிறது:

"பொருளாதாரம், கலை, அரசியல் வாழ்க்கை, பொது வாழ்க்கை ஆகியவைகளில் ஆண்களுக்கு இருக்கும் சகல உரிமை

களும் சோவியத் பெண்களுக்கும் இருக்கின்றன.

"ஆண்களைப் போன்று பெண்களுக்கும் வேலை செய்யவும், உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெறவும், ஓய்வு பெறவும் கல்வி கற்கவும், இன்ஷ்யூரன்ஸ் உதவி பெறவும் உரிமையிருக்கிறது என்னும் உண்மையை அடிப்படையாகக் கொண்டு பெண்களுக்கு இந்த உரிமைகள் வழங்கப்படுகின்றன. தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோர் நன்மை சர்க்காரால் பாதுகாக்கப்படும்; கர்ப்பவதிகளுக்கு முழுச் சம்பளத்துடன் விடுமுறை கொடுக்கப்படும்; பிரசவ விடுதிகள், சிசு போஷணை சாலைகள் ஆகியவைகளைப் பெண்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்."

சட்டத்திற்கு முன் ஆண்களும் பெண்களும் சமம் என்று கூறுவதுடன் சோவியத் யூனியன் திருப்தி அடைந்துவிடவில்லை. இந்த நியதியை அமுலுக்குக் கொண்டு வர வேண்டுவன செய்யப்பட்டிருக்கின்றன. உழைக்கவும், ஊதியம் பெறவும் எல்லோருக்கும் உரிமை இருக்கிறது என்னும் நியதியை அமுலுக்குக் கொண்டு வந்ததன் மூலம் சுயேச்சையாய் வாழ்க்கை நடத்தப் பெண்களுக்கு வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே அங்கே பெண்ணடிமை தேய்ந்து மறைந்தது.

உள் நாட்டுக் கலகத்திலே சோவியத் யூனியன் வெற்றி பெற்ற பிறகு—உள் நாட்டுக் கலகத்தாலும், மகா யுத்தத்தாலும் சீர்குலைக்கப்பட்ட தேசத்தின் பொருளாதார அமைப்பை ஸ்திரப்படுத்தின பிறகு—பெண் தொழிலாளிகளின் எண்ணிக்கை வருடந்தோறும் அதிகரிக்கிறது. 1930-ஆம் வருடத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அடியோடு மறைந்தது. அதன் பிறகு பெண் தொழிலாளர்களின் தேவை ரொம்ப அதிகரித்தது. அக்டோபர் புரட்சிக்கு முன் வீட்டுப் பூச்சிகளாக வாழ்ந்துவந்த பெண்கள், தொழிற்சாலைகளில் வேலை செய்யவும், சுயேச்சையான வாழ்க்கை நடத்தவும் ஆரம்பித்தனர். தொழிலை வெறும் வாழ்க்கைச் சாதனமாக மாத்திரம் சோவியத் தொழிலாளர்கள் மதிக்கவில்லை; வாழ்க்கையின் சாரம் நிறைந்த பகுதியாக அவர்கள் தொழிலை மதிக்கிறார்கள்.

கடுமையான வேலைகளைத் தவிர ஏனைய எல்லா வேலைகளையும் பெண்கள் செய்கின்றனர். 1937-ஆம் வருடத்தில் பொது ஸ்தாபனங்களிலும், தொழிற்சாலைகளிலும் சுமார் 95 லட்சம் பெண்கள் வேலை செய்தனர்.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமமான சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்பதை சோவியத் தலைவர்கள் ஆரம்பத்திலேயே வலியுறுத்தினர். ஜார் காலத்தில் ருஷ்யாவில் கல்வி கற்ற பெண்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு அந்த நிலை மாறிற்று. அறியாமையைத் துடைப்பதிலே சோவியத் யூனியன் அதிக கவனம் செலுத்துகிறது. பெண் கல்விக்காகத் தொழிலாளர் சர்க்கார் வருடந்தோறும் ஏராளமான பணம் செலவு செய்கிறது. கலாசாலைகளில் கல்வி கற்கும் பெண்களின் தொகை தொடர்ச்சியாக அதிகரிக்கிறது. 1937-ஆம் வருடத்தில் தொழிற் கல்வி கற்ற மாணவர்களில் 41 சத விகிதம் பெண்கள். அக்டோபர் புரட்சிக்கு முன்

பெண்களுக்கு அடைபட்டுக் கிடந்த பலதொழில்கள் அக்டோபர் புரட்சிக்குப் பிறகு பெண்களை வரவேற்றன. 1937-ஆம் வருடத்தில் ஒரு லக்ஷம் பெண்கள் இஞ்ஜினியர்களாகவும், கருவிக் கலை நிபுணர்களாகவும் சேவை செய்தனர். அதே வருடத்தில் சுமார் 50,000 பெண் டாக்டர்களிருந்தனர். சோவியத் யூனியனிலே பெண்கள் இஞ்ஜினியர்களாகவும், விவசாய நிபுணர்களாகவும், கப்பல் தளபதிகளாகவும், "டிராக்டர்" ஓட்டிகளாகவும் வேலை செய்வது அசாதாரணமல்ல. 57,000 பெண்கள் அங்கே "டிராக்டர்" ஓட்டுகின்றனர். சமூக நிர்மாண வேலையிலே பெண்கள் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர்.

ஒவ்வொரு துறையிலும் பெண்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்துகின்றனர். புதிய வேலைகளைக் கூட அவர்கள் பிறர் வியக்கத் தக்க முறையில் செய்கின்றனர். பெண் "ஸ்டாக்கனோவிஸ்டுகளுக்கும்" அங்கே பஞ்சமில்லை. அதிகப்படியான உற்பத்தியுடன் அலக்ஸிஸ்டாக்கனோவின் பெயர் பிணைபட்டுக் கிடக்கிறதென்றாலும், மாதர்குலமும் இத்தகையபல வீராங்கனைகளைச் சிருஷ்டித்திருக்கிறது. மரியாடெம்சென்கோ, டோஸியா, பாஷா அங்கெலினு முதலியோர் பெண் குலத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டு. சோஷலிஸ்டு நிர்மாண வேலையிலே மேற் கூறியவர்களின் பங்கு பெரிது. உற்பத்தியை அபரிமிதமாகப் பெருக்கியதன் மூலம் அவர்கள் மனித சமூகத்தின் சரித்திரத்திலே இடம் பெற்றுவிட்டார்கள்.

தொழிலிலும், படிப்பிலும், சமூக வேலையிலும் பெண்கள் பரிபூரணமாக ஈடுபடவேண்டுமானால் தாய்மார்களின் கடமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அன்னை குழந்தைக்குச் செய்ய வேண்டிய வேலைகள் பல. அவைகளைச்செய்ய அன்னைக்கு வசதி செய்துகொடுக்கப்படவேண்டும். இது செய்யப்படவில்லையானால் சிரத்தையுடனும், திறமையுடனும் பெண்களால் வேலை செய்ய முடியாது. இந்த உண்மை சோஷலிஸ்டுகளுக்குத் தெரியும். எனவே சோவியத் யூனியன் மணமானவர்கள் விஷயத்தில் விசேஷக் கவனம் செலுத்துகிறது. சமூக அபிவிருத்தியிலே பெண்களின் பங்கு மகத்தானது. வருங்காலப் பிரஜைகள் திடசாலிகளாகவும், புத்திசாலிகளாகவும் இருக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் சோவியத் யூனியன் செய்கிறது. தாய்மார்களையும், குழந்தைகளையும் அது "கண்ணைக் காக்கும் இமை போல்" பாதுகாக்கிறது. கர்ப்பவதிகளுக்கு முழுச் சம்பளத்துடன் நான்கு மாதம் விடுமுறை அளிக்கப்படுகிறது. சர்க்கார் சமூக இன்ஷூரன்ஸ் நிதியிலிருந்து "பிரசவ சகாய நிதிக்கு" ஏராளமான பணம் கொடுக்கப்படுகிறது. தேசம் முழுதும் "குழந்தைகள் பாதுகாப்பு நிலையங்கள்" ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. குழந்தைகளுக்கென ஏராளமான விளையாட்டு மைதானங்களும், விடுதிகளும், ஆரம்பப் பாடசாலைகளும், தேக ஆரோக்கிய விடுதிகளும், அமைக்கப்பட்டிருக்கின்றன.

1914-ம் வருடத்தில் ருஷ்யாவில் (ஜார் காலத்தில்) சிசு சம்ரக்ஷணை நிலையத்தில் 550 மெத்தைகளிருந்தன; ஆனால் 1937-ஆம் வருடத்

தில் 6, 27, 817 மெத்தைகளிருந்தன; குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் விடுதிகள் ஜார் காலத்தில் ஒன்று கூட இருக்கவில்லை; ஆனால் அக்டோபர் புரட்சிக்குப் பிறகு அங்கே 1,500 பால் கொடுக்கும் விடுதிகளிருக்கின்றன.

சிசு சம்ரக்ஷணை விடுதிகள் ஸோவியத் யூனியனில் ஏற்றிப் போற்றப்படுகின்றன. 1937-ஆம் வருடத்தில் சிசு சம்ரக்ஷணை விடுதிகளை கட்டுவதற்காகவும், பிரசவ விடுதிகள் நிர்மாணிப்பதற்காகவும், பள்ளிக்கூடங்களுக்காகவும் கோடிக்கணக்கான ரூபிள் செலவு செய்யப்பட்டது. குழந்தைகளைச் சிசு சம்ரக்ஷணை சாலைக்குத் தாய் மார்கள் அனுப்பித்தான் தீர வேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. எனினும் குழந்தைகள் சர்வ ஜாக்கிரதையுடன் சிசு சம்ரக்ஷணை சாலையில் வளர்க்கப் படுவார்கள் என்பது தாய்மார்களுக்குத் தெரியுமாதலால், அவர்கள் மகிழ்ச்சியுடன் குழந்தைகளை அங்கே அனுப்புகின்றனர்.

பல குழந்தைகளுள்ள தாய்மார்களுக்கு விசேஷ அலவன்ஸ் கொடுக்கிறது, சர்க்கார். ஒரு பெண்ணுக்கு ஆறு குழந்தைகளென்று வைத்துக் கொள்ளுவோம். அதிகப்படியாக அந்த அம்மையாருக்குப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் முதல் ஐந்து வருடத்திற்கு வருடமொன்றுக்கு 2,000 ரூபிள் கொடுக்கப் படுகிறது. பத்துக் குழந்தைகளின் அன்னைக்கு, அதிகப் படியாகப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் 5,000 ரூபிள் கொடுக்கப்படுகிறது. இதைத் தவிர முதல் நான்கு வருடங்களுக்கு வருடந்தோறும் 3,000 ரூபிள் கொடுக்கப்படுகிறது.

1937-ஆம் வருடம் முதல் ஒன்பது மாதங்களில் சோவியத் யூனியனில் பிறந்த குழந்தைகள் 33,00,000 எனவே சோவியத் யூனியன் குழந்தைகளுக்காக கோடிக் கணக்கான ரூபிள் செலவு செய்ய நேர்ந்தது.

தாய்மார்களுக்கு சோவியத் சர்க்கார் அதிக உதவி புரிகிறதென்றாலும், பெற்றோர்கள் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்துதான் தீரவேண்டும். இந்தப் பொறுப்பை அவர்கள் தட்டிக் கழிக்க முடியாது. குழந்தைகளைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பவும், குழந்தைகளைப் பாது காக்கவும் பெற்றோர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த வேலையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமபங்குண்டு.

அன்னை தனது குழந்தைகளைத் துறந்தால்—விவாகரத்தின் மூலம் மண உடன்படிக்கையிலிருந்து விடுபடும் மனைவி குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை ஏற்க மறுத்தால்—குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பேற்கும் தந்தைக்கு ஜீவனாம்சம் கொடுக்கும்படி அன்னை கேட்கப் படலாம், அவள் சுயேச்சையாகச் சம்பாதிப்பவளாயிருந்தால்.

விவாகரத்து சம்பந்தப்பட்ட வரையில் ஆணுக்கும்; பெண்ணுக்கும் சம உரிமையுண்டு. விவாகரத்து தம்பதிகளின் விருப்பத்தைப் பொறுத்தது. ஏனைய நாடுகளைப் போன்று சோவியத் யூனியன் பெண்களை இழித்துப் பழிக்கவில்லை. பெண்மை அங்கே போற்றிப் புகழப்படுகிறது. முதலாளித்துவ நாடுகளில் நாம் எதைப் பார்க்கிறோம்?

பல சமூகச் சட்டங்களாலும், இற்றுப் போன விதிகளாலும் பெண்கள் அங்கே கலங்கி நிற்பதையும், பல் வேறு காரணங்களால் மாதாகிகள் விபசாரிகளாக மாற்றப் படுவதையும் நாம் காண்கிறோம். இந்த சமூகத் தீமைகளெல்லாம் சோவியத் யூனியனில் தலை காட்டவே முடியாது.

பெண்களை வீட்டுப் பூச்சிகளாகவும், "பிள்ளை பெறும் யந்திரங்களாகவும்" மதிக்கிறது பழமை. பெண்ணுரிமை பல நாடுகளில் மிதித்துத் தேய்க்கப் படுகிறது. பொது வாழ்க்கையில் பல முதலாளித்துவ நாடுகளில் பெண்களுக்கு இடமில்லை. ஆண்களை விடத் தாழ்ந்தவர்கள் பெண்கள் என்பது பழமையின் முடிவு. இதற்கு முற்றும் முரண்பட்ட காட்சியை நாம் சோவியத் யூனியனில் பார்க்கிறோம். சோவியத் யூனியனிலே பொது வாழ்க்கையில் பெண்களின் ஸ்தானம் மிகப் பெரிது. எத்தகைய வாழ்க்கையை மேற்கொள்ளவும், எந்தத் துறையில் ஈடுபடவும் பெண்களுக்கு உரிமை யிருக்கிறது. தனது வாழ்க்கையை நிர்ணயிக்கும் உரிமை சோவியத் பெண்ணுக்கு இருக்கிறது. அங்கே பெண்கள் எவரையும் எதிர் பார்த்துக்கொண்டு ஏங்கி நிற்க வேண்டியதில்லை. கலை, விஞ்ஞானம், சித்திரம், நிர்வாகம், உற்பத்தி ஆகியவைகளில் தேர்ச்சிபெற ஸோஷலிஸம் பெண்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கிறது. இன்று சோவியத் யூனியனிலே நாம் நூற்றுக்கணக்கான பெண் விஞ்ஞானிகளையும், நிர்மாணகர்களையும், நிர்வாகிகளையும், விமானிகளையும், "பாரச்சூட்" மூலம் குதிப்பவர்களையும் காண்கிறோம்.

பழைய கட்டுகளிலிருந்து பெண்களை விடுவிப்பது அவ்வளவு எளிதான வேலையல்ல. சம்பிரதாயம் பெண்கள் விடுதலைக்குக் குறுக்கே நின்றது; பழைய பழக்க வழக்கங்கள் பெண்கள் விடுதலையைப் பழித்தன. இந்த முட்டுக்கட்டைகளை யெல்லாம் ஸோஷலிஸம் அடித்துத் தகர்க்க வேண்டியிருந்தது; சோவியத் யூனியன் இவைகளை அடித்துத் தகர்த்தது.

'பெட்டைக் கோழி பட்சியல்ல; அதே போன்று பெண் மனிதத் தன்மையுடையவ ளல்ல' என்பது பழைய காலத்துப் பழமொழி. பழைய கால ருஷ்யா பெண்களை எவ்வாறு மதித்தது என்பதற்கு இந்தப் பழமொழி சிறந்த உதாரணம். ஜார் காலத்தில் கிராமவாசிகள் பெண்களை "விலங்குகளாக" மதித்தனர். கூட்டுப் பண்ணை முறை பெண்களின் நிலையிலே தலைகீழ் மாற்றத்தை உண்டு பண்ணிற்று.

"கூட்டுப் பண்ணை முறை பெண்களை விடுவித்து, அவர்களைச் சுயேச்சையானவர்களாக்கிற்று. இன்று அவள் புதல்வி என்ற முறையில் தந்தைக்காகவோ, மனைவி என்ற முறையில் கணவனுக்காகவோ வேலை செய்யவில்லை; ஆனால் இன்று அவள் தனக்காக வேலை செய்கிறாள். இதுதான் விவசாயப் பெண்களை விடுவித்தது; இதுதான் கூட்டுப் பண்ணை முறையின் சாரம்; இதுதான் பெண் தொழிலாளி ஆண் தொழிலாளிக்குச் சமம் என்ற நிலையை உண்டு பண்ணிற்று" என்கிறார் ஸ்டாலின்.

தன் காலிலேயே நிற்கும் சக்தியை கிராமத்துப் பெண்களுக்குக் கூட்டுப் பண்ணை முறை அளித்திருக்கிறது. வேலை செய்வதால் கிடைக்கும் ஊதியம் பெண்களுக்குச் சொந்தம். அதில் பெற்றோர்களுக்கோ, பிறருக்கோ உரிமை இல்லை.

நகரங்களில் வேலை செய்யும் பெண்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் கிராமங்களில் வேலை செய்யும் பெண்களுக்கும் அளிக்கப்படுகின்றன. சமூக சட்டங்கள், சிசு சம்ரக்ஷணை விடுதிகள் தேகாரோக்கிய நிலையங்கள் முதலியன கிராமத்துப் பெண்களுக்குப் பேருதவி புரிகின்றன. பெண்கள் கூட்டுப் பண்ணைகளில் வேலை செய்யும்பொழுது அவர்களுடைய குழந்தைகள் அவர்களுக்கு அருகிலேயே இருக்க வேண்டுவன செய்யப்பட்டிருக்கின்றன. பிரசவ கால விடுமுறை, ஆஸ்பத்திரி வசதி முதலியன விவசாயப் பெண்களுக்கும் அளிக்கப்படுகின்றன.

படிப்பதற்கிருக்கும் வசதியும், வாழ்க்கையிலே சுதந்திரமும், தன்னம்பிக்கையும், சட்டங்களின் பக்க பலமும் பெண்களின் ஆசையையும், வளர்ச்சி அடைய வேண்டுமென்னும் அவர்களுடைய எண்ணத்தையும் தூண்டுகின்றன. பெண்களைத் தூண்டும் சக்தி மேற் கூறியவை. சோவியத் யூனியனில் பெண்கள் உயர்ந்த ஸ்தானங்களில் வீற்றிருப்பதற் குரிய காரணங்களில் இது முக்கியமானது. கூட்டுப் பண்ணை நிர்வாகஸ்தர்களில் 18 சத விகிதம் பேர் பெண்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

சோவியத் ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஆசியப் பகுதியில் வசிக்கும் ஜாதிகள் அடைந்திருக்கும் அபிவிருத்தி வியக்கத்தக்கது. ஜார் காலத்தில் அங்கே பெண்ணுரிமை மிதித்துத் தேய்க்கப்பட்டிருந்தது. மத்திய ருஷ்யப் பெண்களுக்கிருந்த ஒரு சில உரிமைகள் கூட கிழக்கில் வசித்த பெண்களுக்கு மறுக்கப்பட்டன. உழைத்து உண்ண அன்று அவர்களுக்கு உரிமை வழங்கப்படவில்லை. வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கிடந்த அந்தப் பெண்கள் பூ வேலை, ஜமக்காளம் முதலியன செய்வார்கள். அந்தப் பொருட்களை வர்த்தகர்கள் மிகக் குறைந்த விலைக்கு வாங்கினர். பேரம் பேசவும், பொருட்களை அதிக விலைக்கு விற்கவும் பெண்களுக்கு வசதியிருக்கவில்லை. சம்பிரதாயம் இதற்குக் குறுக்கே நின்றது. அன்று அங்கே பெண்கள் திரையிட்டு மூடப்பட்டிருந்தனர். கணவன் அனுமதியின்றி அவர்கள் வெளியில செல்ல முடியாது. அப்படிக் கணவன் அனுமதி பெற்று அவர்கள் வெளியில் சென்றால், முகமூடி அணிந்து கொண்டு வெளியில் நடமாட வேண்டும்.

இந்த நிலையில்—பெண்கள் பழமை என்னும் இருளிலே தவழ்ந்துகொண்டிருக்கையில்—சோவியத் வாழ்க்கை முறையை மேற்கொள்ளும்படி அவர்களைத் தூண்டுவது அவ்வளவு சுலபமான வேலை யல்ல. அங்கே அறியாமைத் திரை கிழித்தெறியப்பட வேண்டியிருந்தது; பழைய சம்பிரதாயங்களுக்கு விடை கொடுக்கவேண்டியிருந்தது; புதிய முறையிலே அவர்களைத் தயார் படுத்த வேண்டியிருந்தது. இவ்வளவையும் சோவியத் யூனியன் செய்தது. கிழக்கில் ஆண், பெண் சமத்துவம்

சட்டரீதியாக ஸ்தாபிக்கப்பட்டது. பெண்களைக் கடத்திச் செல்வதைத் தடுக்கவும், பலதார மணத்திற்கு விடை கொடுக்கவும் வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கிழக்கில் வாழும் பெண்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த அரும் பெரும் முயற்சி செய்யப்பட்டது. தேசம் தொழில்மயமாக்கப்பட்ட பிறகு கூட்டுப் பண்ணைகள் எங்கும் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு—புதிய வாழ்க்கையிலே பெண்கள் தீவிர பங்கெடுத்துக் கொள்ள ஆரம்பித்தனர். கிழக்கில் வாழும் பெண்கள் முகத்திரையைக் கிழித்தெறிந்து விட்டு கூட்டுப் பண்ணைகளிலும், புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட தொழிற்சாலைகளிலும் வேலை செய்ய ஆரம்பித்தனர். கிழக்கே வாழும் பெண்கள் இடம் பெறாத பொது வாழ்க்கை இன்று இல்லை எனலாம். ஆண்களைப் போன்று இன்று பெண்களும் அங்கே எல்லா வேலைகளையும் செய்கின்றனர். உஸ்பெக் பெண்களும், டர்க்சோமான் பெண்களும் வெகு தூரம் முன்னேறி யிருக்கின்றனர். இன்று அங்கே ஏராளமான பெண் விமானிகளும், விஞ்ஞானிகளும், நடிகர்களும், நிர்வாகஸ்தர்களும் இருக்கின்றனர். தேசியக் குடியரசு சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் மூன்றில் ஒரு பகுதி பெண்கள்.

சோவியத் யூனியனில் பெண்களின் நிலையிலே தலைகீழ் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதுடன், பெண்கள் சம்பந்தமான பொது ஜன அபிப்பிராயத்திலும் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இன்று ஏதேனும் ஒரு குறிப்பிட்ட வேலை செய்யும் சக்தி பெண்களுக்கில்லை என்று யாரும் சொல்லத் துணிய மாட்டார்கள். ஏனெனில் எல்லா வேலைகளிலும் ஆண்களுக்குப் பெண்கள் இளைத்தவர்களல்ல என்பதைப் பெண்கள் நிரூபித்துவிட்டனர். எனவே சோவியத் யூனியனில் பெண்கள் பெருமை வளர்ந்தோங்கி யிருக்கிறது. சிறுமிகள் இன்று மணம் செய்து கொடுப்பதற்காக வளர்க்கப்படவில்லை; ஆனால் ஒரு குறிப்பிட்ட தொழிலுக்குத் தகுதியுடையவர்களாகத் தயார் படுத்தப் படுகிறார்கள். இன்று சோவியத் வாலிபர்கள் வரதட்சணைக்காகப் பெண்களைக் கலியாணம் செய்து கொள்ளவில்லை. வரதட்சணை வாங்குவது கேவலமான செயலாக அங்கே மதிக்கப்படுகிறது. இன்று சோவியத் வாலிபர்கள் தங்கள் மனதுக்குகந்த பெண்களை மணம் செய்து கொள்ளுகின்றனர். அதே போன்று கலியாணத்தை வாழ்க்கைச் சாதனமாக சோவியத் பெண்கள் மதிக்கவில்லை.

சமூகத்தின் ஜீவநாடி பெண்கள். பெண்ணினம் தழைத்தால் சமூகம் தழைக்கும்; பெண்ணினம் உயர்ந்தால், வாழ்க்கையிலே இன்பம் கொஞ்சும்; பெண்ணுரிமை ஓங்கினால் புதுமை தோன்றும். இவ்வளவையும் நாம் சோவியத் யூனியனிலே பார்க்கிறோம்.

[தொடரும்]

*

போராட்டம்

ஸ்ரீமதி. கமலாதாஸ்

மனிதனுடன் மனிதன் போராடிக் கொண்டு வாழ்க்கை நடத்தும் இந்த அதம உலகத்தில் யாரைத்தான் நம்ப முடிகிறது? மித்திரர்களையும், குழந்தைகளையும், பந்துக்களையும் மனைவியையுங் கூட நம்பி உயிர் வாழ முடியாத ஓர் வாழ்க்கை நிலையில் காலம் ஓடிக்கொண்டிருக்கிறது. அந் நிலையில் மனிதன் மனிதனாகவே இல்லாமல் போய்விட்டதோ என்று சந்தேகிக்கும் சந்தர்ப்பத்தில், யுவதியான சியாமளாவினால்—அதுவும் தன்னந் தனியாக உட்கார்ந்து போராடித் தன் எதிர்கால வாழ்க்கையை ஸ்திரப் படுத்திக் கொள்ள வேண்டியிருந்தால்—தனியாக அமர்ந்து இயற்கையின் பின்னணியில் விசித்துப் புலம்பாமல் என்ன செய்யமுடியும்?

விசித்து விசித்து அழுதாள். ஜீவராசிகளிலே உயர்ந்த படைப்பென்பதே இல்லாமல் போய் விட்டதோ என்ற எண்ணம் அவள் மனதில் மின்சாரம் போல் வெகு விரைவில் பரவியது. உடனேயே தானும் அந்த மட்டரகப் பிராணியின் இரைக்கு ஒரு பலியாகி விட்டோம் என நினைத்தாள். அந்த நினைவு வந்ததோ இல்லையோ, அவள் பின்னும் ஆத்திரத்துடன் கண்களினின்று நீரைக் கக்கினாள்.

நீரைக் கக்கிய அவள் கண்களுக்கு எப்படி எல்லாமும் மொத்தையாகத் தோன்றியதோ அப்படித்தான் அவளுக்கு உலகமும் மொத்தையாக—கலங்கலாகத் தோன்றியது.

அந்தக் கலங்கலான உலக மேடையில் அவள் தன்னையும் ஒரு சிருங்கார வேஷமிட்டு நடிக்கப் போகும் யுவதியாகப் பார்த்தாள். தன்னுடைய குலுக்கையும், மினுக்கையும் கண்டதும் அவளுக்கே லஜ்ஜையாய் இருந்தது. ஆடவர்களின் வழிகளனைத்தும் பல கோணங்களிலிருந்து தன்னையே பார்வை இலக்காகக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், அவள் ஏனோ தன் முகத்தை பின்புறமாக திருப்பிக் கொண்டாள்.

“சீ, ! இதுவும் ஒரு ஜன்மமா?” என்ற வார்த்தைகள் வறண்ட நெஞ்சின் வழியே வெளி வரப் பார்த்தன. ஆனால் வார்த்தைகளை உமிழ் நீராக மாற்றி, அடித் தொண்டையால் காறி ஆத்திரத்துடன் கீழே உமிழத்தான் வேண்டியதாயிற்று. சற்று நேரத்தில் அவள் தன்னைத்தானே தேற்றிக்கொள்ளப் பார்த்தாள். உணவும், நித்திரையும் வேப்பங்காய் போல் கசந்தன. ஆகவே நிலை குன்றிப் போய் ஒரே இடத்தில் உட்கார்ந்தாள். பழைய சப்பவங்களை உருட்டிப் பார்த்தாலாவது மனத் தேர்ச்சி பெற முடியுமா? கண்டிப்பாக முடியாது. அப்படியென்றால் எதிர் காலத்தைத்தான் யோசித்துப் பார்ப்போமா என்று அவள் மடம் ஓடிற்று. தீர்க்க தரிசிகளும் தத்துவ ஞானிகளும் தோன்றிய மனித குலம் இன்று ஒன்றையொன்று கொன்று பிழைக்கும்

வழியில் ஈடுபட்டிருக்கையில் அடங்கியால் எதிர் காலத்தைப் பற்றி என்னதான் யோசித்து தெரிந்துகொண்டுவிட முடியும்?

அவளும் சிந்தனை சிறகடித்து கற்பனை லோக சஞ்சாரத்திற்கு கிளம்பின. யாரோ வரும காலடிச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு திரும்பினாள். நிற்கும் உருவத்தைக் கண்டதும் ஒரு கணம் திகைத்துவிட்டாள்.

2

ஸியாமளாவின் சிந்தனை ஸினிமாக் காட்சி போல் சட சட வென்று மாறியது. எழுந்திருக்க முடியாமலே, "எவ்வளவு நேரமாக நிற்கிறீர்கள்?" என்றாள்.

"அப்போ ரொம்ப நாழிகை யாகவே நீ இப்படித்தான் இருக்கிறாயா?"

ஸியாமளா பல்லைக் கடித்துக் கொண்டாள்.

"நிற்பானேன்" என்றாள் பிறகு.

"நீ அழுவானேன்."

அங்கிருந்தோ அவளுக்கு உத்வேகம் வந்ததுபோல், "வருகிறவர் இப்படி நிற்கும்படி ஆகிவிட்டதே என்றுதான் அழுதிருப்பேன்" என்றாள் சிரிப்பை வருவித்துக்கொண்டு.

அவன் லேசாகச் சிரித்தான்.

"ஸியாமளா" என்றான் பிறகு.

கலங்கிய கண்களுடன் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"உள்ளதைச் சொல். நீ ஏன் இப்பொழுது அழுதுகொண்டிருந்தாய்?"

"இதோ, பாருங்கள்! நான் பொய் சொல்லப் போவதில்லை. என் மனம் படும் வேதனையை நான் உங்களிடம் தெரிவிக்க இஷ்டப்படவில்லை. என் மன வேதனை என்னுடனேயே இருக்கட்டும். அதில் உங்களுக்கும் பங்கு வேண்டியதில்லை. யௌவன ஆசையை, அதன் வேட்கை வேதனைகளை நான் எப்படியோ சமாளித்துவிட்டேன். இனி எனக்கு அவ்வளவு கஷ்டமாயிராது. இன்னமும் நான் தனியாகவே இருந்துவிடுகிறேன். என்னை விட்டு விடுங்கள்—" என்றாள், அவள் குரல் உணர்ச்சி மிகுதியால் தடுமாறியது.

"இதன் அர்த்தம் என்ன, ஸியாமளா?"

கண நேரம் அவள் பேசாமலே அவன் முகத்தையே கூர்ந்து நோக்கினாள். வாளிப்பான உடல் சற்று நேரம் தன் நிலைப்பின்றி நடுங்கியது.

"என்னால் பிறருக்குக் கஷ்டம் நேரக் கூடாது என்பதுதான்" என்றாள் திடத்துடன்.

அவன் வெகு சிரமப்பட்டு "கஷ்டமென்ன இதில்?" என்றான்.

"கஷ்டமில்லையா? திரஸ்கரித்த ஒரு மனைவியுடன் மறுபடியும் கூடிவாழ்வதென்றால்? அதுவும் இரண்டாம் மனைவியும் கூட இருக்கும் போது சம்சாரத்தை ஓட்டிக்கொண்டு போவது அவ்வளவு லேசா என்ன?"

"நான் சொல்வதைக் கேள், ஸியாமளா!" நீ வீணாகப் பயம் கொள்ளுகிறாய். சென்றதை இருவரும் மறந்து விட்டால் நடக்க வேண்டியது சுலபமாக நிறைவேறிவிடும். நான் நிர்ப்பந்தப் படுத்தவில்லை. என் கடமையைச் செய்கிறேன். நீ யோசித்து உன் முடிவைப் பிறகு சொல்."

இப்படிச் சொல்லிவிட்டு எழுந்து வெளியே நடந்தான்.

சியாமளா அவன் போவதைப் பார்த்தாள். அவன் வெளிக் கதவைத் தாண்டியதும் ஏனோ அப்படி வாய்விட்டுக் கட கட வென்று சிரித்தாள்.

படம் எடுக்குமுன் ஒத்திகைகளில் அவள் இப்படிச் சிரிக்க நன்ருக அப்பியசித்திருந்தாள். ஆனல் அடுத்த கணமே அவள் முகம் சுண்டியது. செத்தவன் மீண்டும் வீட்டுக்கு வருவது போலத்தான் அவர்களுடைய யோசனை யிருந்தது. சுதந்திரமாய்க் கழித்த அவளுடைய வாழ்க்கையில் அடிமைத் தளையை போட்டுப் பூட்டுவது எவ்வளவு சிரமமான காரியம்? மீண்டும் அவள் சிந்தனை செய்தாள். இக் கரைக்கு அக்கரை பச்சை என்பதை அவள் அனுபவித்ததில் கண்டு விட்டாள். தன்னை இறுகப் பிணைக்கும் குடும்ப வாழ்வை அவள் உதறிய போது அக்கரை-அதாவது தற்போது நடத்தும் வாழ்க்கை-பச்சையாக குளுமையாக இருந்தது. வெகு சீக்கிரத்திலேயே அவள் இங்கே பசுமையின் உள்ளே கிடக்கும் பயங்கரத் தோற்றத்தைக் கண்டுவிட்டாள். அந்தப் பயங்கரம் அவளுக்கு ஏராளமான ஐசுவரியத்தைக் கொடுத்தது உண்மைதான். ஆனல் ஏன்? அவளைப் பலி கொள்வதற்காகத்தான். இதைத் தெரிந்து கொண்டபோதுதான் அவள் தான் ஏற்கனவே நின்றிருந்த கரையை திமிர்ந்து பார்த்தாள். பசுந்தளிர் அவளை 'வா, வா' என்று அழைப்பதைப் பார்க்கும் போது அவள் மனம் குளுகுளுத்தது. இந்தக் கரையிலுள்ள பயங்கரத்தைவிட அந்தக் கரையிலிருந்த உப்புச்சப்பற்ற பசுமை எவ்வளவோ மேல் என்று தோன்றியது. ஆனல் அங்கேயும் ஏமாற்றமும், சுயநலமும் தாண்டவ மாடுகின்றன. என்பதை மறுபடியும் கண்டபோது அவளால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

மனித ஜன்மம் மிருக ஸ்பாவத்தைக் கொண்டு விலங்காக மாறி விட்டிருந்தால் ஒவ்வொருவரும் அதற்குப் பலியாக வேண்டுமென்று என்ன கட்டாயம்? அவர்களும் பலி கொள்ளக் கூடும் அல்லவா? ஆகவே எதிர்கால வாழ்வை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ருல் அவள் போராடித்தானே ஆக வேண்டும். ஆனல் அதற்காகத் தனியே உட்கார்ந்து விசித்து விசித்து அழுவது கூடாது. சிரிக்கத்தான் வேண்டும்—சிரித்துக் கொண்டே போராடித்தான் ஆக வேண்டும். எனவே அவள் சிரித்தாள். வயிறு வலிக்கும் வரையில் வாய் விட்டுச் சிரித்தாள்.

3

"ஏன் அப்படிச் சிரிக்கிருய் சியாமளா?" அவளுடைய பலஹீனம் அங்கே வெளிப்பட்டது. அவள் சிரிப்பை மறைக்க முயன்ருள்.

"என்னவோ நினைவு வந்தது, சிரிக்கிறேன்" என்ருள் மழுப்பினற் போல்.

ஆனல் அவளுக்கே தன் சிரிப்பிற்குக் காரணம் தெரியவில்லை.

பெரிய குற்றம் செய்து விட்டது போலக் கூட இருந்தது, அப்படிச் சிரித்தது.

ஆனல் அவன் கிண்டிக் கிண்டிக் கேட்கவில்லை.

"சரி" என்ருன் ஒரே வார்த்தையாக.

அவளது சர்வாங்கமும் ஏனே ஒடுக்கிப் போயின. பிறகு,

"உட்காருங்கள்" என்றாள், சமாளித்துக்கொண்டே.

"இருக்கட்டும், சியாமளா. யோசித்து முடிவுக்கு வந்திருப்பாய் என்று நினைக்கிறேன். இல்லையா?"

அவளால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. தன்னை வேண்டாம் என்று தள்ளி வைத்துவிட்டாக உடனே மறுமணம் செய்துகொண்ட கணவன் முன்னிலையில் அவள் இப்பொழுது தலை குனிந்தாள்.

முகம் இறங்க, "என்னை மறுபடியும் சம்சாரத்தில் மாட்டிக் கொண்டு உழலச் சொல்கிறீர்களா?" என்று தைரியம் இழந்து கேட்டாள். ஆணின் வீரியத்துக்குப் பெண்மை மண்டியிடுவது போல் இருந்தது அக் காட்சி.

"ஆமாம், சியாமளா; ஆமாம்: என் மனைவி நீ. உன் கஷ்ட நஷ்டத்தில் மான அவமானத்தில் எனக்கும் பங்கு உண்டு. நீ மனவேதனைப் படுவதைப் பார்க்க எனக்குச் சகிக்கவில்லை."

கண நேரம் புருஷனுடைய இந்த வார்த்தைகளில் அவள் பரவசம் கொண்டாள். மெய்ம் மறந்து போய், "என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" என்றாள் கடைசியாக.

"ஒரு வார்த்தைதான், சம்மதம் என்று."

அவள் சற்று நிதானித்தாள். "வீணாக நீங்கள் என் நிமித்தம் கஷ்டத்திற்கு உள்ளாகிறீர்கள்" என்றாள் மறுபடி.

"கஷ்டமென்ன இதில், சியாமளா?"

"நிராகரிக்கப்பட்ட, நிரண்ட ஐசுவரியமுடைய பெண் நான். இரண்டாம் மனைவியை வைத்துக் கொண்டு நீங்கள் கண்டிப்பாக கஷ்டம் தான் அடைவீர்கள். இதைச் சற்று யோசிக்கவில்லையா நீங்கள்?"

"சியாமளா! நான் யாவற்றையும் யோசித்தாகி விட்டது. என் வரைக்கும் ஒரு கஷ்டமும் ஏற்படாது. அவள் தான்—அவளுக்கு ஒத்துப்போவது முடியாமலிருந்தால் வெளியில் போகட்டும்..." என்றான் அழுத்தமாக.

சியாமளாவிற்கு "பகீர்" என்றது. கணவன்—மனைவி—தள்ளி வைத்தல்—எல்லாம் அவளை வாழ்க்கையில் மறுமுறையாகத் திடுக்கிட வைத்தன. அவள் கண்கள் சிவந்தன. விறுடன் எழுந்தாள், தன்னை அடக்கிக் கொண்டு.

"ஒரு வார்த்தை உள்ளதைச் சொல்வீர்களா?"

"கேள் தாராளமாய்."

"நீங்கள் என்னை விரும்புவது என்மேல் விருப்பம் கொண்டா, என் பொருள் மேல் விருப்பம் கொண்டா?"

அவன் இந்த எதிர்பாராத வார்த்தையைக் கேட்டுத் திகைத்துப் போனான்.

அவள் மறுபடியும் கேட்டாள்: "ஏன் அப்போது மட்டும் என்னைத் தள்ளி வைத்துவிட்டு மறு விவாகம் செய்து கொண்டீர்?"

அவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். "நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. எனக்காகவோ என் சொத்துக்காகவோ நீங்கள் மறுபடியும் இன்னொரு பெண்ணைக் கெடுக்க வேண்டாம். இருந்தாருங்கள்; என் செல்வம் யாவையும் அவளுக்கே கொடுத்து விடுகிறேன். நீங்கள் வெளியே செல்லுங்கள்.

என் வீட்டில் அடியெடுத்து வைக்கவேண்டாம். போய் வாருங்கள். நமஸ்காரம்" என்று சொல்லிவிட்டு அவள் உள்ளே போய்விட்டாள்.

" வெகு நேரம் கழித்து அவன் திரும்பினான். அவள் பெருமூச்சுவிட்டாள்.

" ஆஹா—இன்றுதான் இந்தத் தொல்லையான போராட்டம் முடிந்தது. எனக்கு இந்தக் கரையும் வேண்டாம், அந்தக் கரையும் வேண்டாம். ஊழியம் செய்து சாண் வயிற்றை வளர்க்கக்கூட முடியாமலா போய்விடும்? என்று சொல்லிக் கொண்டாள். போராட்டம் என்ற வார்த்தை புகைப் படலம் போல் அவள் உள்ளத்திலே சுழன்றுகொண்டிருந்தது.



அதிசயம் ஆனால் உண்மை!

ஒரு பாட்டி, அவள் மகள், பாட்டிக்குப் பேத்தி மூவரும் ஒரே சமயத்தில் 'மணமகளாக' மாறினார்கள் என்றால் உங்களுக்கு அதிசயமாகத் தானிருக்கும். இச் செய்தி அதிசயங்கள் நிறைந்த அமெரிக்காவிலிருந்து தான் வருகிறது.

பதினாறு வயதான பெவர்லி ஜீன் ரேஸ் பேத்தி. இருபத்தேழு வயதான மெல்வின் ஹாப்ட்மேன் என்பவரை மணந்துகொண்டாள். அவளைப்பெற்ற தாயான ரத்மக்ளின் முப்பத்தைந்து வயதானவள். ஜார்ஜ் பெட்மாண்டு என்னும் 32 வயதான டெலிபோன் ஆப்ரேட்டரை மணந்து கொண்டாள். பாட்டியோ சார்லஸ் ஸ்மித் என்னும் சிமானை மணம் புரிந்து கொண்டாளாம்.

மூவரும் கல்யாணமானவுடன் 'ஹனிமூனு'க்காக ஜோடி ஜோடியாக போர்ட்லாந்து சென்றார்களாம். பாட்டியின் வயதென்ன? அவளை மணந்தவர் வயதென்ன? என்று கேட்கிறீர்களா? நவ நாகரிகம். வயதைப்பற்றியெல்லாம் கவலைப்படுமா அம்மணி!

உங்கள் அழகு

[கண்ணாடி.]

இப்பொழுது எல்லா நவ யுவதிகளும் கால்களுக்கு மேனாட்டு முறையில் செய்யப்பட்ட உயர்ந்த குதிகால் அணிகளைப் போட்டுக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். அதனால் முகத்தில் எவ்வளவு கோணல் ஏற்பட்டு விடுகிற தென்பதை அவர்கள் யோசிப்பதே யில்லை.

பாதங்கள் தேகத்தின் முழுப் பளுவையும் தாங்குகின்றன. அவைகளில் உபத்திரவம் இருந்தால் முகத்தில் கடுகடுப்பும் எரிச்சலும் பொறுமை யின்மையும் தாண்டவமாடும். அழகாக நடக்கவோ நிற்கவோ முடியாது. கால்களுக்குச் சரியான செருப்புகளை அணிவதாலும் அவற்றிற்குப் போதுமான ஓய்வளிப்பதாலும் அபரிமிதமாக அவற்றை அலைக்கழிக்காமலும் இருப்பதோடு அவற்றைக் குளிர்ந்த ஜலத்தில் வெளியிலிருந்து வந்தவுடன் சுத்தமாக அலம்ப வேண்டும்.

காலுக் குதவாத செருப்பைக் கழற்றி யெறிய வேண்டும். எத்தனை செலவான போதிலும் எத்தனை நாழி காத்திருக்கவேண்டியிருந்தாலும் பல கடைகளில் தேட வேண்டியிருந்தாலும் காலுக்கு உபத்திரவ மளிக்காத செருப்புகளைத் தேடிப் பிடிக்க வேண்டும். அவற்றின் மேலழகிலும் 'மவுசி'லும் மோகம்கொண்டால் முகப்பொலிவுக்கு மோசம் வந்துவிடும்.

சிறு பாதங்கள் அழகாக இருக்கலாம். ஆனால் இறுகிய செருப்புகளால் பெரிய பாதங்களைச் சிறியவை யாக்க முடியாது. பெருவிரலுக்கும் காலணியின் தோலுக்கு மிடையில் கால் அங்குல இடை வெளியாவது இருக்க வேண்டும்.

உயர்ந்த குதி கால்கள் நிமிர்ந்த ஒய்யார நடைக்கு ஒத்தாசையாக இருக்கும். ஆனால் குதிகால்களின் உயரம் அணிபவர்களுக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.

அடிக்கடி பாதங்களுக்கு ஓய்வளிக்க வேண்டும். இருதய பலத்தினால் இரத்தம் காலிலிருந்து மேல் நோக்கிப் பாய வேண்டும். அதிக நேரம் கால்களின் மேல் நின்றிருப்பதால் கால்களிலேயே இரத்தம் தேங்கி விடுகிறது. காலையிலும் மாலையிலும் மல்லாந்து படுத்துப் பாதங்களை உயரத் தூக்கி இரண்டு மூன்று நிமிஷங்கள் அப்படியே நிறுத்திப் பிறகு கீழே இறக்க வேண்டும். இவ்வாறு மூன்றி லிருந்து ஆறு தடவை செய்ய வேண்டும்.

குறிப்பு: உங்கள் தோற்றத்தை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டு மென்றிருந்தால் உங்கள் பிரத்தியேகத் தேவையைக் குறித்து, "கண்ணாடி"க்கு எழுதுங்கள். "கண்ணாடி" மங்கை, சக்தி காரியாலயம் இராயப்பேட்டை சென்னை, என்று விலாசம் எழுதவும்.

[illegible]

எஸ். விசாலாட்சி

சகோதரிகளுக்கு யோசனை கூறுவதற்காகப் பல அனுபவம் முதிர்ந்த பெரியோர்களை மங்கை சேர்த்திருக்கிருள். குடும்ப நிர்வாகத்திலோ, கிரக தர்மத்திலோ உங்களுக்கு ஏற்படும் தொல்லையை எனக்கு எழுதுங்கள். நான் அதற்குத் தகுந்த பதிலைச் சேகரம் செய்து எழுதுகிறேன். கேள்வி எதாயிருந்தாலும் பரவாயில்லை. ஆனால் பதிலெழுதும் உரிமையை மாத்திரம் நான் பிரத்தியேகமாக வைத்துக் கொண்டிருக்கிறேன். தனியாகப் பதில் வேண்டுகிறவர்கள் தமது விலாசமிடப்பட்ட தபால் உறையை அடக்கம் செய்ய வேண்டும். பெயரை வெளியிட விரும்பாதவர்கள் புனைபெயரைப் போடலாம். ஆனால் அவர்களுடைய உண்மையான பெயரையும் விலாசத்தையும் கொடுக்க வேண்டும். "அடுப்பில் ஏன் இற்று வடிகிறது" என்பதிலிருந்து குடும்பச் சச்சரவுகளைத் தீர்க்கும் வழி வரையில் எந்த விஷயத்தைக் குறித்தும் கேள்விகள் கேட்கலாம். சகோதரிகளுக்காக இரண்டு சிறந்த டாக்டர்களின் உதவியும் காத்துக் கொண்டிருக்கிறது.

எஸ். விசாலாட்சி, ஆசிரியை
மங்கை. சக்தி காரியாலயம்
இராயப்பேட்டை, சென்னை.
என்று விலாசமிட்டு எழுதவும்.

உங்கள் கடிதங்களை ஒரு பெண்ணாகிய என்னைத் தவிர்த்து வேறொருவரும் பார்க்கமாட்டார்கள்.

சிகரெட் செலவு

கேள்வி: "என் கணவரின் சிகரெட் செலவு மாத்திரம் தினம் இரண்டு ரூபாய் ஆகிறது. அவர் சம்பளம் நூற்றைம்பது ரூபாய் தான். அவருக்கு மன வருத்தமுண்டாக்காமல் எப்படி இந்தச் செலவைக் குறைக்கலாம்."

"கமலா" சென்னை

பதில்: சாதாரணமாக வேறு அலுவலில்லாமலிருந்தால் புருஷர்கள் புகை குடிக்க ஆரம்பிக்கிறார்கள். உத்தியோகசாலை விடுமுறையன்று சாதாரணமாக இரண்டத்தனை சிகரெட்டுகள் புகைந்துவிடும். அடுத்தபடியாக சிகரெட்டுகள் எப்பொழுதும் கைவசமிருப்பது. நீங்கள் அவருக்கு வேறு ஏதாவது உற்சாகத்தை, அவர் உங்களிடமிருக்கும் பொழுது அளித்து வந்தால் அவர் சிகரெட்டை நினைக்க நேரமிராது. அதோடு அவர் புகை குடிக்க லஜ்ஜைப் படக்கூடிய இடங்களுக்கு அவரை அடிக்கடி அழைத்துச் செல்வதாலும் அப் பழக்கம் மாறவும் குறையவும் ஏதுவுண்டாகும். பஜனைகள், கோயில்கள் முதலிய இடங்களில் புகை குடிக்க முடியாது. அத்தகைய இடங்களுக்கு அவரை அழைத்துச்செல்ல முதன் முதலில் அவர் மனதைப் பக்குவப் படுத்த வேண்டும். இரண்

டாவதாக அவர் சிகரெட் பெட்டியைத் தவறுதலாக எங்காவது வைத்து மறக்கச் சாதுரியமாக நடக்க வேண்டும். கைக் கெட்டிய இடத்தில் சாதனம் இல்லாவிட்டால் மனிதனுக்கு இயற்கையாக உள்ள சோம்பலில் சற்று நேரம் கழித்துப் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டு விடுவார்.

ஆனால் மேற்கூறிய முறைகளால் பழக்கத்தைக் குறைக்கத்தான் முடியும். அறவே ஒழிக்க முடியாது. அறவே ஒழிப்பதற்கு மனோபலம் வேண்டும்.

அதைத்தான் புகையிலைப் பழக்கம் முதலிலேயே அழித்துவிடுகிறதே. மனோ வலிமை ஏற்பட சர்வாங்காசனம் மிக மிக உயர்ந்த சாதனம். ஆசனப் பிரதர்சனம் அல்லது யோகாசனங்களைக் குறித்து நடக்கும் பிரசங்கத்திற்கு அவரை அழைத்துச் செல்வது உசிதம். அல்லது அடிக்கடி யோகாசனங்களைக் குறித்த அழகிய படங்களடங்கிய புத்தகத்தை அவருக்கு சாவகாசமிருக்கும்பொழுது அவர் கண்ணில் தென்படும்படி வைத்தால் அவரே அதை யதேச்சையாகப் படித்து நலம் பெறலாம். அவரிடம் நேரடியாகப் புகைக் குடியை ஒழிக்கும்படி பிரசாரமோ யுத்தமோ ஆரம்பித்தீர்களானால் அப் பழக்கம் அவரை இன்னும் விடாப் பிடியாகப் பிடித்துக் கொள்ளும். புத்திசாலிகளான பெண்களால் சாதிக்க முடியாதது ஒன்றுமேயில்லை. அவருக்கு உங்கள் மீது எரிச்சல் ஏற்படா வண்ணம் சிறிது சிறிதாக பழக்கத்தை ஒழிக்க முயற்சிக்கவும்.

சோப்புப் பஞ்சம்.

கேள்வி: "எங்களூரில் நிடரென்று துணி தலைக்கும் சோப்பு, கடைகளிலிருந்து மறைந்துவிட்டது. என் குழந்தைகளோ ஒரு நாளைக்கு இரண்டு மூன்று செட் உடுப்புகளை அழுக்காக்கி விடுகிறார்கள். துணிகளே கிடைக்காத இந்தக்காலத்தில் பல செட்டுகள் தைத்து வண்ணானுக்குப் போட்டு வரவும் முடியவில்லை. இதற்கு என்ன செய்யலாம்?

'சியாமளா' திருச்சிராப்பள்ளி.

பதில்: சோப்புக்குப் பதில் வாஷிங் சோடா உபயோகிக்கலாம். சற்று வெது வெதுப்பான ஜலத்தில் வாஷிங் சோடாவைக் கரைத்து அதில் துணிகளை நனைத்துப் பிழிந்து அரை மணி நேரம் ஊற வைத்துத் துவைத்து அலசி உலர்த்தலாம். வழ வழப்புப் போக நன்றாக அலச வேண்டும். இல்லாவிட்டால் குழந்தையின் மிருதுவான சருமம் புண்ணாகி விடும்.

துணிகளை முதல் நாளிரவே ஜலத்தில் ஊறவைத்து விட்டால் மறு நாள் காலை அழுக்கில் முக்கால் பாகம் அகன்றிருக்கும். இன்னும் கால் பாகத்தை மாத்திரம் அகற்ற சோப்பையாவது சோடாவையாவது உபயோகிக்கலாம். சூரிய வெளிச்சத்தில் உலர்த்தினால்தான் துணிகள் வெளுக்கும்.

குடும்பச் செலவுகள்

கேள்வி: "எனக்கு பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறது. மாத மானதும் அவர் (என் கணவர்) சம்பளத்தை வாங்கிக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து விடுகிறார். அது இருபதாம் தேதிக்குள் ஆய்விடுகிறது. அதற்குப்பிறகு வீட்டில் சதா காலங்கள் சண்டை போட்டுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. எல்லாப் பணத்தையும்

என்ன செய்தாய் என்று கூச்சல் போடுகிறார். நான் என்ன செய்யட்டும். பங்கீட்டுப் பொருள்கள் வாரா வாரம் தான் கொடுக்கிறான். மாதத்திற்குத் தேவையானதை ஒன்றாக வாங்கவும் முடியவில்லை, விறகும் அரிசியும் மாத்திரம் வாரத்திற்கு 22 ரூபாய் ஆகிறது. குழந்தைகளின் பள்ளிக்கூடச் சம்பளம் 50 ரூபாய். இரண்டு வாரத்தில் அவர் கொண்டு வரும் நூற்றைம்பது ரூபாயும் செலவாகி விடுகிறது. பிறகு கடன் வாங்கியதை முதல் தேதியானதும் கொடுத்து விட வேண்டியிருக்கிறது,"

செல்லம், மாம்பலம்.

பதில்: உங்கள் தொல்லை எல்லோருக்கும் பொதுவானது. உங்கள் கணவர் உங்கள் கஷ்டத்தை உணர ஒரே வழிதான் உண்டு. பணத்தை அவரே வைத்துக் கொண்டு செலவு செய்யட்டும். அடுத்த மாதத்திலிருந்து உங்களைக் குறை கூறமாட்டார். அந்த நிபந்தனையை விதிக்குமுன் நீங்கள் ஒரு மாதம் கணக்குகளைச் சரியாக எழுதி அவரிடம் காட்டிடுங்கள். அதற்கும் அவர் மசியாவிட்டால் அடுத்த படியாக சம்பளத்தை உங்களிடம் கொடுக்கும் போது சுமுகமாகவே "இந்த மாதம் நீங்களே செலவு செய்து பாருங்களேன். எனக்குத்தான் தெரியவில்லையே" என்று அடக்கமாகவே சொல்லிப் பாருங்கள்.



பிறருக்கு மனம் நோகும்படி நடப்பதைவிட வெட்கம் தரும்படி நடவாதிருப்பதே முதலில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும்.

"வேர்ட்ஸ் வொர்த்"

கானமணி

"காமு"

குழந்தைகளே! நீங்கள் இது வரை எத்தனையோ விதமான கதைகளைக் கேட்டிருக்கலாம். ஆனால் 'சங்கீதத்தை மணந்த ராஜகுமாரன் கதை'யைக் கேட்டிருக்கிறீர்களா? இல்லை அல்லவா? இப்பொழுது நான் அந்தக் கதையைச் சொல்லுகிறேன். கவனமாகக் கேளுங்கள்.

பல வருஷங்களுக்கு முன்னால் கானமணி என்று ஒரு அழகான ராஜகுமாரன் இருந்தான். அவனுடைய தந்தையான பெரியராஜா அவனுக்கு மிக அழகான ராஜகுமாரி ஒருவளைக் கல்யாணம் செய்து வைக்க விரும்பினார். ஆனால் அவர் எதிர்பார்த்தபடி அந்த ராஜகுமாரனுக் கேற்ற அழகி அகப்படவேயில்லை.

தனக்குக் கல்யாணம் செய்து வைக்கத் தந்தை அவசரப்படுவது கானமணிக்குத் தெரியாதா? தெரியும். தெரிந்தும்கூட அவன் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வதில் அதிக சிரத்தை காட்டவில்லை. அவன் சங்கிதத்தில் தேர்ச்சி பெற்றவன். அந்தக்காலத்தில் அவனுக்கு ஈடாகப் பாடக் கூடியவர்கள் யாரும் இல்லை. என்றாலும் இன்னும் சிறந்த சங்கீத மேதையாக இருக்க விரும்பினான் அவன். தன்னைவிடச் சிறப்பாகப் பாடும் பெண் ஒருவளை மணப்பதுதான் அவனுக்கு விருப்பமாயிருந்தது.

ஒரு நாள் அவன் காட்டுக்கு வேட்டையாடப் போயிருந்தான். அங்கு வேட்டையில் கவனஞ் செலுத்தாது நெடுநேரம் பாடிக் கொண்டிருந்தான். இருட்டிப் போன பிறகும் அவன் தன்னந் தனியாகப் பாடிக்கொண்டிருந்தான். குளிர்ந்த நிலவு எங்கும் பரவியிருந்தது.

நிலவொளியிலே அவன் இனிமையாகப் பாடின போது திடீரென்று வெகு தூரத்திலிருந்து வேறு யாரோ பாடுவது போன்ற சப்தம் கேட்டது. கொஞ்ச நேரத்தில் அந்த சப்தம் அருகில் கேட்டது. ராஜகுமாரன் ஆச்சரியத்துடன் அந்தச் சப்தம் வரும் திக்கை உற்று நோக்கினான்.

அப்படிப் பாடிக் கொண்டு வந்தது ஒரு குயில். அடடா!

இந்தப்பாட்டின் இனிமையை எப்படி வர்ணிப்பது? நேரம் ஆகஆக அக் குயிலின் பாட்டு வெகு அழகாக இருந்தது. ராஜ குமாரனுக்குத் தன்னைவிட அக் குயில் அழகாகப் பாடுவதாகத் தோன்றிற்று. ஏன் இந்தக் குயிலையே நான் கலியாணம் செய்துகொள்ளக் கூடாது? என்று கூட எண்ணினன். சற்று நேரத்தில் இந்த எண்ணம் ஆசையாகமாறி அவனை உறுதி கொள்ளவும் செய்து விட்டது. எதிரேயிருந்த ஒரு பிரும்மாண்டமான மரத்தின் கிளையில் உட்கார்ந்து கொண்டு அந்தக் குயில் பாடியது. என் வாழ் நாளிலேயே இப்படிப் பட்ட பாட்டு கேட்டதில்லை. இக் குயிலை விட சிறப்பாக, இனிமையாக யாரும் பாட முடியாது. ஆகவே இந்தக் குயிலை பிடித்துப்போய் விடவேண்டியதுதான். அப்பாவின் அனுமதி பெற்று இதை மணப்பது என்று நிச்சயித்துக் கொண்டான்!

ஏதோ ஒரு சைகை செய்து தன் ஆட்களை அழைத்தான். வேடர்கள் வலையை வீசி அந்தக் குயிலைப் பிடித்துவிட்டார்கள். ராஜகுமாரன் அந்தக்குயிலுடன் ஊர் திரும்பினன்.

பெரிய ராஜாவிடம் தன் தீர்மானத்தைச் சொன்னன். அவர் இதைக் கேட்டதும் ஏளனமாகச் சிரித்து விட்டு "சரி, நம் மகனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது." என்று நினைத்து வைத்தியரை அழைக்க ஆள் அனுப்பினர்.

ராஜகுமாரனே 'அழகான ஒரு பொற் கூண்டு செய்து அந்தக் குயிலை அதில் வைத்தான். அது முதல் அந்தக் குயில் பாடாமல் முகத்தை ஏக்கமாக வைத்துக் கொண்டிருந்தது. அன்று இரவு தோட்டத்தில் நிலவு காய்ந்த போது கானமணி பாடினன். பதிலுக்கு அக் குயில் பாடுமென்று நினைத்தான். ஆனல் அது பாடவில்லை. ஒரு வேளை கூண்டில் இருப்பதால் பாடவில்லையோ என்று நினைத்து வெகு ஜாக்கிரதையுடன் வெளியில் எடுத்தான். சட்டென்று அவன் பிடியிலிருந்து விடுபட்டு எதிரேயிருந்த ஒரு மரத்துக்குப் போய் அமர்ந்தது. ராஜகுமாரன் 'ஐயோ! நம்மை விட்டு இந்தக் குயில் ஒடிவிடும் போலிருக்கிறதே!' என்று கவலையும் திகைப்பும் அடைந்து ஏக்கத்துடன் அதைப் பார்த்தான்.


அந்தக் குயிலோ சிறகைப் படபட என்று அடித்துக் கொண்டு கூண்டிலிருந்து விடுபட்ட ஆனந்தத்துடன் பாட ஆரம்பித்தது.

ராஜகுமாரனுக்கு அப்போதுதான் உண்மை தெரிந்தது. குயிலைக் கூண்டிலடைத்ததனல்தான் அது பாடவில்லை. பொற்கூண்

டாளும் கூண்டு அதற்குச் சிறைதானே?

ராஜகுமாரனும் பாடினான். குயிலும் பாடிற்று. பெரிய ராஜா தோட்டத்தில் யாரோ இருவர் பாடுகிறார்களே, யாரென்று பார்க்கலாம் என்று எண்ணி மறைவாக நின்று பார்த்தார்.

குயிலும், ராஜகுமாரனும் ஜோடியாகப் பாடிக் கொண்டிருந்தது கண்டு ஆச்சரியமடைந்தார். குயிலிடம், ராஜகுமாரன் மயங்கி விட்ட காரணம் அப்போதுதான் தெரிந்தது அவருக்கு. அப்புறம் என்ன? ராஜகுமாரன் இஷ்டப்படியே குயிலை அவனுக்கு மணம் செய்வித்தார். மற்றவர்கள் ராஜகுமாரனைப் பரிகாசம் செய்யும் போதெல்லாம். அவன் பின் வருமாறு சொல்வான்: 'சங்கீதம் துக்கம் நிரம்பிய நம் வாழ்வை இனிமையாக நடத்தச் செய்ய வல்லது. நான் சங்கீதப் பித்தன். என்னைவிட இக் குயில் நன்றாகப் பாடுகிறது. ஆகவே நான் 'குயிலை' மணந்தது சங்கீதத்தையே மணந்து கொண்டதாகும். ஒரு பெண்ணை மனைவியாகக் கொண்டு கவலையும் கஷ்டமும் அடைவதைவிட ஒரு குயிலை ஏற்றுக் கொண்டு தானும் சுகப்பட்டு பிறரும் சுகமுறும்படி செய்தது ஒரு உன்னத செய்கைதானே?



சீனாவிலிருந்து இதர நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் சரக்குகளில் 'சில்க்' தான் முக்கியமாகும். ஒரு பவுண்டு சில்க் நூல்கண்டில் 900 மைல் நீளமுள்ள நூல் அடங்கி விடுகிறதாம்!

குழந்தைகள் விளையாட்டு

"குஞ்சலம்"

போனவாரம் ஒரு நாள் நான் மின்சார ரயிலில் போய்க் கொண்டிருந்தேன். என் பை நிரம்ப கோலாட்டக் கழிகளும், கால்களுக்குக் கட்டிக் கொள்ள 'கஜ்ஜை' சதங்கைகளும் இருந்ததைப் பார்த்து என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு மாது என்னைப் பார்த்து "உங்களுக்கு எத்தனை குழந்தைகள்" என்று கேட்டார். "எனக்கு ஆறு பெண்கள்" என்றேன். என்னை மலர விழித்துப் பார்த்து "அடேயப்பா! ஐந்து பெண்கள் என்றால் அரசனும் ஆண்டி என்பார்களே' என்றார். "நான் ஒரு ராணி இல்லையே," என்று கூறிவிட்டு வெடுக்கென்று திரும்பி உட்கார்ந்து விட்டேன். பெண்களாய் பிறந்தாலென்ன? பிள்ளைகளாய்ப் பிறந்தாலென்ன? பெற்றோர்களுக்கு எல்லாம் ஒன்று தானே! கொடிக்குக் காய் கனக்குமா?

தோட்டத்தில் ஒரு மாஞ்செடி வைக்கிறோம். பத்து வருஷங்களுக்கு அம்மரம் பூத்துக் காய்த்துப் பழுக்கும் வரை அதை எவ்வளவு ஜாக்கிரதையாகப் பராமரித்து வருகிறோம். அதைப் போலத்தான் வருங்காலப் பயிர்களாகிய சிறுவர்களை நல்ல சத்துள்ள உணவு கொடுத்து நேர் வழியில் அவர்களை வளர்த்தால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்வார்கள்.

நவ நாகரீகம் மிகுந்த இந் நாட்களில் நமது பண்டைக்காலபழக்க வழக்கங்கள் மறைந்து வருவது போல் நம் குலமகளிர் ஆடிப்பாடி மகிழ்ந்து வந்த விளையாட்டுகளும் மறைந்து வருகின்றன. நம் நாட்டுக் கலைகளுக்கே முக்கிய ஆபரணம் போன்றவை கும்மியும் கோலாட்டமும். கும்மிப் பாட்டுக்களில் பல தத்துவங்களும், அழகிய வர்ணனைகளும், இனிய சங்கீதமும் பதிந்து கிடக்கின்றன. கலை வளர்ச்சியில் ஊக்கங் கொண்ட 'மங்கை'யின் ஆசிரியை கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து வரும் இவ்விளையாட்டுகளை மீண்டும் உயிர்ப்பிக்க யத்தனிப்பதைக் கண்டு நாம் சந்தோஷப் படுவது மாத்திரம் போதாது. பள்ளிக் கூடங்களிலும் குழந்தைகளை விளையாட வைக்க வேண்டுமென வற்புறுத்த வேண்டும்.

இந்த விளையாட்டுகள் சிறுமிகளுக்கு உற்சாகமளிக்கும். சரீரப்பயிற்சியாகவும் இருக்கும். சங்கீத ஞானமும் ஏற்படுகிறது.

சோளக் கொல்லைப் பொம்மைகள்

நம் பாட்டிமார் காலத்தில் ஸ்திரிகளுக் கென்று இவ்வளவு ஆஸ்பத்திரிகளும் இருக்கவில்லை. வியாதிகளும் இருக்கவில்லை. நவ நாகரீகத்தின் முதல் பயனாகவும் ஸ்திரிகளின் ஆங்கிலப் படிப்பின் முதல் விளைவாகவும் நாம் அடைந்திருப்பதென்ன வென்றால் உயிர் உணர்வற்ற செயற்கையழகில் அபரிமிதமான ஆர்வம் கொண்டுள்ள பெண் ஜன்மங்களேயாம். அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெற்ற நாம் சுகஜீவிகளான சந்தானங்களைப் பெறவேண்டும்.

ஆரோக்கிய திடகாத்திர மில்லாத பெண்களுக்கு எப்படி சரீரத்திலும் புத்தியிலும் பல முள்ள சந்ததிகள் உண்டாகும்? இப்பொழுது ஆங்கிலப் படிப்பு படித்து மேனாட்டு தேகாப்பியாச விளையாட்டுகளில் (டென்னிஸ், பாட்மின்ட்டன் முதலியவை) பழகிவரும் சிறுமிகளைப் பாருங்கள். சோளக்காட்டுப் பொம்மைகளைப்போல் உற்சாகம் குன்றி சதா ஓய்வு தென்படும் வதனங்களோடு ஒளியற்று இருப்பதைப் பார்க்கலாம். பதினாறு வயதுக்குள்ளேயே கண் பார்வை மங்கி கண்ணாடி அணிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. பதினெட்டு வயது யௌவனத்தில் முகத்தின் சுருக்கங்களைப் போக்க பூச்சுகள் (க்ரீம்கள்) வேண்டியிருக்கிறது.

சங்கீதத்திலுள்ள பேரின்பம் வேறெதில் காணமுடியும்? நம் முன்னோர்கள் வரப்போகும் தாய்மார்களுக்கு அவசியமான தேகாப்பியாசத்தை சங்கீதத்தினின்றும் பிரிக்க முடியாமல் கும்மி கோலாட்டமென்று ஏற்படுத்தினார்கள். பாட்டு மனதிற்கு உற்சாகத்தையும், அவயங்களின் அசைப்பு அவற்றிற்கு பலத்தையும், அழகையும் கொடுக்கும்படி ஏற்பட்டிருக்கின்றன. குனிந்து ஒரு தட்டு நிமிர்ந்து ஒரு தட்டு, ஒய்யாரமாய் பாவாடையின் கொசவான்கள் சப்தத்தோடு திரும்பி ஒரு தட்டு, கைவளையல்களும், கால் கஜ்ஜைகளும் சேர்ந்து தாளம் போட, இதற்கிசைந்தாற் போல் சங்கீதம். இதை இப்படியே மனதில் சித்தரித்துப் பாருங்கள்.

காலை, மாலை, மழை, வசந்தம் என்ற விளையாட்டுகளும் உண்டு.

குளிர்ந்த சாயங்கால நேரத்தில் பெண் குழந்தைகள் கும்மி கோலாட்டம், காலு மூலைத் தாச்சி, ஓடி விளையாட்டு முதலியனவும், காலை நேரங்களில் தண்ணீர் விளையாட்டுகளும், மழை நாட்களில் தட்டாமாலை, சோழி, சொக்கட்டான், கழுக்கோடி, கட்டம் முதலிய விளையாட்டுகளும் விளையாடலாம். இப்பொழுது ஒரு விளையாட்டைப் பற்றி மாத்திரம் சொல்லுகிறேன். நீங்கள் விளையாடிப் பாருங்கள்.

பல நிறத்துப் பாவாடைகள் கட்டிக்கொண்ட ஆறு சிறுமிகள் போதும். ஆறு பெண்களும் கால்களை நீட்டிக்கொண்டு சுற்றி உட்கார்ந்துகொள்ள வேண்டும். ஆறு பெண்களும் ஆறுவித புஷ்பங்களின் பெயர்களை வைத்துக் கொள்ள வேண்டும். வீட்டுக்குப் பெரியவளான ஒருத்தி நின்று கொண்டு, ரோஜாப் பூ, தும்பப் பூ; மல்லிகைப்பூ, தாழம்பூ என்று கூப்பிட்டு "தும்பப் பூவே, தும்பப் பூவே மெள்ள வந்து கிள்ளிப் போ," என்று பாட வேண்டும். 'தும்பப் பூ' என்ற பெண் மெள்ள எழுந்திருந்து சுற்றி ஓடி வந்து முல்லைப் பூவையோ, அல்லது ரோஜாப் பூவையோ வந்து கிள்ள வேண்டும். கிள்ளப்பட்ட பூ சரியானவளைச் சொல்லிவிட்டால் மறுபடியும் தும்பப் பூவை கிள்ளவைக்க வேண்டும். பெயர்களைத்தான் மாற்றிவிட வேண்டும். பட்டாம் பூச்சிகள் பறப்பதைப்போல் குழந்தைகள் துள்ளிவிளையாடுவதைப் பார்க்கப் பதினாயிரம் கண்கள்தான் வேண்டும்.

அடுத்த இதழில் "அஷ்ட சகி" விளையாட்டு எழுதுகிறேன். எப்படி ஒரு சகி கிருஷ்ணனுக மாறலாம் என்பதுதான் அந்த விளையாட்டின் நோக்கம்.

தொடர் நாவல்

காணிநிலம்

ய. லக்ஷ்மி நாராயணன்

அன்று அப்புப்படையாச்சிக்கு என்னவோ பிரமாத கவலை போலும்! இல்லாவிட்டால் விடிவெள்ளி உதயமான போது வயல கரைக்கு வந்தவன் இன்னமும் வீடு திரும்பாமல் இருப்பானா? எப்பொழுது பார்த்தாலும் கலகலப்பாகச் சிரிக்கச் சிரிக்கப் பேசும் அவன், இதர குடியானவர்களுடன் முகங் கொடுத்துப் பேசாமல் தான் இருப்பானா? திடீரென்று அவனுக்கு என்ன வந்து விட்டது!

ஆங்காங்கே திட்டு திட்டாயிருந்த களத்து மேடுகளில் இதர குடியானவர்கள் அமர்ந்து கஞ்சி குடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் கஞ்சி கொண்டு வந்த பெண்மணிகள் நிழலில் ஒதுங்கி நின்று சற்று நேரத்துக்கொருதரம் கலகலவென்று சிரித்துக் கொண்டே ஏதோ சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். அப்புப் படையாச்சி இந்தக் கூட்டத்தில் சேராமல் ஒதுங்கி விட்டான்.

சேறும் சகதியும் படிந்த கைகால்களைக்கூடக் கழுவாமல், கட்டிய முண்டாசையும் அவிழ்க்காமல், தனியாக உட்கார்ந்திருந்தான். உழு கலப்பை ஒரு கருவேல மரத்தில் சாத்தப்பட்டிருந்தது. மாடுகள் வரப்போரமாக மேய்ந்துகொண்டிருந்தன. மேய்ச்சல் போட்டியில் ஈடுபட்ட அவையிரண்டும் கொஞ்ச நேரத்துக் கொருதரம் முட்டிக் கொண்டதைக்கூட கவனிக்காதவன் போல உட்கார்ந்திருந்தான் அவன். நல்ல வேளை. காமிராவின் 'கிளிக்' சப்தம் கேட்டுச் சட்டென்று திரும்பிப் பார்த்து விட்டான்.

'வாங்க, நீங்க கூடவா இந்த வெயில்ல அலையணுங்க?' என்று கேட்டபடியே எழுந்தான். பின்பு மாடுகளைப் பிடித்துக் கட்டி விட்டு 'இந்த மாடுக முட்டிக்கிட்டதைக் கூடவ போட்டோப் பிடிக்கணுங்க?' என்று கொஞ்சம் பலவந்தமாகப் புன்னகையை வரவழைத்துக் கொண்டே கேட்டுவிட்டு ஆற்றங் கரைச் சாலையை உற்றுப் பார்த்தான்.

பிறகு எதையோ நினைத்துப் பெருமூச்சு விட்டவனாய் பழையபடி உட்கார்ந்து விட்டான்.

'தொழிலுகூட இல்லையே. நீங்களும் வெய்யல்லையே நிக்கிறீங்களே?' என்று மெதுவாக என்னைப் பார்த்து மீண்டும் கேட்ட பிறகுதான் நான் அவனுக்குப் பதில் சொல்லத் துணிந்தேன். என்றாலும் நான்கூட அங்கிருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் மனே தனியாகத்தான் இருக்க விரும்புகிறான் என்பதை உணர்ந்துக் கொண்டு 'சரி, உனக்கு இன்னிக்கு என்ன ஒரே கவலை மயமா யிருக்கே?' என்று கேட்டு விட்டுக் காமிராவை கழுத்தில் மாட்டிக் கொண்டு புறப்பட யத்தனித்தேன்.

'ப்சு! என்னங்க போங்க' பின்னே நம்மூர்லெ குடியானவன் கவலை இல்லாமயா இருக்க முடியும்? ராவிக்கு வூட்டுக்கு வரேங்க, வந்து விசயமெல்லாம் சொல்றேங்க. இப்போ மைனரு வரார்னு சொன்னாங்க. அதுக்குத்தான் வூட்டுக்குகூடப் போகாமதுக்கிட்டிருக்கேன்.' என்று சொல்லிவிட்டுத் திரும்பவும் 'லயன்' கரைச்சாலையை எட்டிப் பார்த்தான். நானும் அவன் பார்த்த திக்கை நோக்கினேன்.

'அவரு மருமவனுக்காக புதசா மோட்டாரு வாங்கியிருக்கார்லே. அதனாலே மூணு நாளைக்கொரு தரம் ஊருந்தாருக்கு வரவேண்டியது தானே?' என்று கேட்டுக் கொண்டே மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டான். அவனுடன் மேற்கொண்டு பேச்சுக் கொடுக்க எனக்கு மனமில்லை.



'சரி அப்பு, ராத்திரிப் பேசிக்கலாம்' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டேன். குடியானவர்கள் சாலையோரமாக நின்றபடி என்னவோ மெதுவாகப் பேசிக் கொண்டார்கள். ஒரு சின்னப் பயல் மட்டும் 'மைனர் வூட்டுக்காரு வழி நெறையப் புழுதியைப் கிளப்பிக் கிட்டு வரும் பாரேன்!' என்று மற்றொரு பயலிடம் சொல்லிவிட்டுச் சிரித்தான். இப்படி அவன் சொன்னதும் பெரியவர்களுக்குக் கூட சிரிப்பு வந்தது. நேரமோ அதிதுரிதமாக ஓடிக்கொண்டிருந்தது. சூரியாஸ்தமனமானம் வரை மைனரும் வரவில்லை. அவருடைய காரும் வரவில்லை!

அந்தி மயங்கும் நேரம். பனிப் படலங்கள் புகை மாதிரி பரவி எங்கும் போர்வையிட ஆரம்பித்தது. மீண்டும் நான் வயல் கரைக்குச் சென்ற போது எதிரே வரப்பில், புல் கட்டைத்தலையில் சுமந்து கொண்டு பொன்னி வந்து கொண்டிருந்தாள்.



'எங்க, இந்தப் பனிலே அலையறீங்க?' என்று கேட்டு விட்டுப் பதிலுக்காகச் சற்று நின்ற அவள் பார்வையும் சாலைப் பக்கம் சென்றது.

'என்ன பொன்னி? நீயுமா மைனர் வாரான்னு பார்க்கறே?' என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

'ஆமாங்க. அப்பாருக்கு காலேலருந்து இதே கவலே. ஊட்டுக்குக் கூட வாராம உளுதுகிட்டிருக்காரு' என்று அவள் சொல்லி முடிப்பதற்குள் தொலை தூரத்திலே எங்கோ மோட்டார் காரின் ஹாரான் சப்தம் கேட்டது. கூப்பிடு தூரத்திலே இருந்த வயலில் அப்பு உழுது கொண்டிருந்தான்.

அந்தப் பனி மூட்டத்தில் அவனும் சரி, அவன் மாடுகளும் சரி, உருவே மாறி, என்னவோ போலப் பெருத்து காட்சியளித்தனர். பொன்னியின் கவனம் பூராவும் சாலை மீதே யிருந்தது.

'என் பொன்னி! நீயும் இப்படி நின்னா அப்புறம் உங்கப் பாருக்குச் சோறுக்கறது யாரு?' என்று நான் கேட்டபிறகுதான் அவளுடைய கவனம் தன் காரியத்தில் சென்றது.

'என்னமோ நேத்து ராவுலேருந்து அப்பாரு மனசு ரொம்பக் கஷ்டப்படுதுங்க, அதான் எனக்கும் ஒரே கஷ்டமா யிருக்குது!' என்று பொதுவாக கூறிவிட்டுப் புறப்பட்டவள், நான் காமிராவைக் கழுட்டுவதைப் பார்த்து, 'ரொம்பச் சரி, இப்பத்தான் நீங்கபோட்டோ பிடிக்கறீங்க!' என்று சிரித்துக்கொண்டே சொன்னாள். ஆனால் அதற்குள் புத்தம் புதிய மோட்டார் கார் ஒன்று சாலையோரத்தில் வந்து நின்றது. எங்கெங்கோ மூலைக்கொருவராக உழுது கொண்டிருந்த குடியானவர்கள் விழுந்தடித்துக்கொண்டு சாலையை நோக்கி ஓடினர். கிராமத்துப் பெரிய கிழவனான சுக்கிரமணியன் (அவன் இப்படித்தான் கையெழுத்துப் போடுவான்!) தன் பேரனிடம் 'டேய் தம்பி, இந்தா என் மேல் துணியை இடுப்பிலே கட்டிக்க. அவுரு எதிரிலே போய் அம்மணமா நிக்காதே' என்று மேல் துண்டை எடுத்தான்.

'என் தாத்தா? உனக்கு மேத் துணி வாணுமா?' என்று அதை வாங்கி இடுப்பில் சுற்றிக் கொண்டே கேட்டான் பேரன் சின்னமுத்து.

'எனக்கா? எதுக்கடா! மைனர் எஜமான் எதுக்க மேத் துணியோட நிக்க அம்மாந் தைரியம் எனக்கோ இல்லே, வேறே யாருக்குத்தாண்டா வரும்?' என்று சிரித்துக் கொண்டே கேட்டபடி நடையை வேகமாக்கினான்.

'அப்பன்னா மைனர் எஜமான் எதுக்க உம்மாதிரி பெரியவங்கள்ளாம் உடம்பைத் திறந்துகிட்டுத் தான் நிக்கணுமாக்கும்' என்று கேலியாகக் கேட்டுவிட்டு ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான்.

* * *

இரவு மணி எட்டு அடித்தது. அதே சமயத்தில் அப்புப் படையாச்சியும் வந்து சேர்ந்தான். ஹரிகேன் லைட் வெளிச்சத்தில் அவன் முகம் அவ்வளவு தெளிவாகத் தெரியாவிட்டாலும் மாலையில் இருந்த கவலைக்களை நீங்கவில்லை. தவிரவும் வழக்கமாக அவன் வரும் சமயமும் தாமதித்து விட்டது. தினம் என்னுடன் ஒரு நாழிகையாவது பேசிக் கொண்டிருந்து விட்டுத்தான் வீட்டுக்குப் போவான். ஆனால், இன்று அவனுக்குக் குஷியாகப் பேசக்கூட முடியவில்லை.

'என்ன அப்பு? காலையிலிருந்து எதையோ கொள்ளை கொடுத்தவன் மாதிரி ஏங்கி யிருக்கிறயே?' என்று நானே முதலில் பேச்சுக் கொடுத்தேன்.

'பின்னே என்னுங்க ஐயா? மைனரு மாதிரி நாம்பளும் மனுஷங்க தானே? போன வருசம் வெள்ளாமை ஊரையே மோசம் பண்ணிடிச்சில்ல. இந்தக் குட்டிக்குக் கல்யாணம் பண்ண அவுரு கிட்டே நாநூறு ரூபாய் வாங்கிட்டேனுல்ல. அதை இந்த தையிலேயாவது கொடுத்து

டைறுமில்லே. போன வெள்ளிக்கிழமை வந்தபோது கேட்டாரு. இன்னைக்கும் கேட்டாரு அதுக்குத்தான்—.'

'அதை எப்படியிருந்தாலும் நீ கொடுத்துத்தானே ஆகணும் அப்பு?'

'இல்லேன்னு யாரு சொன்னுங்க ஐயா? நம்ம கஷ்டத்தையும் பாக்கணுமில்லே. அவுரு அட! பரம்பரை பரம்பரையா உழைக்கிறவன்னு ஒரு மனசாவது காட்டணுமில்லே?'

'உண்மைதான். இப்ப என்னதான் முடிவு சொன்னரு?'

'சொல்றதென்னுங்க? மருமவன் சீமையிலேயிருந்து இன்னும் நாலு நாளைலே வாராராம்! அவுருக்குச் சிலவளிக்கப் பணம் வேணுமாம்.'

'சீமைக்கா? யாரப்பாது? இந்த மைனர் குடும்பத்துலே சீமைக்குப் போற அளவுக்குப் படிச்சவங்க இருக்காங்களா?'

'இதென்னுங்க நீங்க பேசறது? அப்படீன்னு உங்களுக்கு விசயமே தெரியாதுங்களா? மைனர் வீட்டுப் பெரிய மருமவன் என்னுது.......பாரி.......என்னுங்கது, என்னமோ பாரிச்சுன்னு வருங்களே!'

'ஓஹோ பாரீஸ்டரா?'

'ஆ! ஆமாங்க. சீமையிலே படிச்சாரு. இளைய மருமவன் வடக்கே டில்லிலேயோ எங்கேயோ பெரிய வேலேலே இருக்காராம்!'

'ஓஹோ! மைனருக்குப் பிள்ளை இல்லியா?'

'ஏன் இல்லீங்க. மூணுபேரு இருக்கறுங்க? பெரிய பையன் பட்டணத்திலே இருக்காருங்க என்னவோ அந்தப் பையன்தான் ஒரு மாதிரியா இருக்கருன்னு இவ்வெல்லாம் பேசிக்கறுங்க.'

'ஒரு மாதிரின்னு என்னப்பா அது?'

'த்சு! என்னமோ சொல்லிக்கிறுங்க. எவளோ ஒரு படிச்ச பொம்புளையாம், செயிலுக்குப் போனவளாம் அவளைத்தான் கட்டிப்பேன்னு ஒத்தைக் காலாலே நிக்கறாராம்! என்னமோ மத்தவங்க பேசிக்கறது தாங்க, நமக்கு எங்க அதெல்லாம்?'

'அது சரிதான் அப்பு? நான் ஏன் இதெல்லாம் கேட்டேன்னு பணம் காசுள்ள மைனர் ஏன் உன்னை நெருக்கணும்னு தெரிந்து கொள்ளத்தான்!'

'இதுலே என்ன அதிசயங்க? மைனர் விஷயம் அலாதிங்க. நூறு வேலி குடுத்தனக்காரருன்னுலே கருமிததனம் வந்திடுமாக்கும். ஆனு அவுரு மகளுக ரெண்டு பேரும் செய்யற செலவுக்கு இந்த நூறு வேலி நாலு வருசத்துக்குக் கூட வராதுங்க!'

'அவர் பெண்களா?'

'ஆமாங்க மூத்த பொண்ணு மீனும்பா சீமைக்காரரு பெண் சாதில்ல. நூத்துக் கணக்கா புடவையும், சாமானும் இன்னும் என்னென்னமோ நகையும் வாங்கிற மணியம்தான். சின்னது மட்டும் என்ன? நம்ப பொன்னி வயசுதாங்க அது. என்ன இருந்தாலும் பெரிய மனுசன் வீட்டுப் பொண்ணுன்னு ஒரு தனிச் செளுமைதானுங்க.'

'அந்தப் பொண்ணு வடக்கே புருஷன் கிட்டே இருக்காக்கும்?'

'இல்லீங்களே. இங்கத்தாங்க இருக்குது அது! அவ புருஷன் இருக்காரே அவுரு என்னமோ வேலை சம்மந்தமா ஊருரா

சத்தி வாராராய்! அதுக்காவ அது போவல்லே. நம்ம பொன்னிக்கு கல்யாணம் ஆறதுக்கு பத்து நாளைக்கு முந்திதான் அதுக்கும் ஆச்சுங்க! அது எப்படியாவது போகட்டுங்க. நாளைக் கழிஞ்சா ஒரு நூறு ரூபாயாவது கொண்டாந்து கொடுத்திடுன்னு மைனர் கண்டிப்பாய்ச் சொல்லிப்புட்டாருங்க' என்று சொல்லிய வண்ணம் என்னை உற்றுப் பார்த்துவிட்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்தான். என்னிடம் கடந்த சில தினங்களாக அவனுடைய அந்தரங்கங்களைச் சொன்னபோது நானும் சுவாரஸ்யத்துடன் கேட்பேன்.

நான் உளுந்தூர் வந்தது முதல் அதாவது கடந்த மூன்று மாத காலத்திற்குள்ளாக நாங்கள் இருவரும் மிகவும் நெருங்கிப் பழகிய நண்பர்களாகி விட்டோம்.

உள்ளூர்ச் செய்திகளை நான் வெகு சுவாரஸ்யத்துடன் கேட்பதனாலோ என்னவோ எல்லாவற்றையும் அதாவது ஒவ்வொரு நாளும் நடப்பன யாவையும் மாலையில் வந்து என்னிடம் சொல்லுவான். 'உலகம் பலவிதம்' என்று பலர் சொல்லும் பழமொழி அவனுக்கும் தெரியும். ஆனால் 'இந்த உலகத்தை'ப் பற்றிய அவன் அபிப்பிராயம்மட்டும் அலாதியானதுதான்!

'என்ன உலகம் வேண்டிக் கிடக்குதுங்க?' என்று அவன் சலிப்புடன் கேட்டுக்கொண்டே தான் சம்பாஷணையை ஆரம்பிப்பான். ஆனால் கொஞ்ச நேரத்தில் சலிப்பெல்லாம் மறைந்துவிடும். சிரிக்கச் சிரிக்க ஏதாவது அதிசயமானவற்றைப் பற்றிப் (கீழத் தெரு கந்தன் நுனி மரத்தில் நின்று அடி மரத்தை வெட்டினதைப் பார்த்ததாக எவரோ இவனிடம் சொன்னால் அது இவனுக்கு அதிசயம் தானே!) பேசிக் கொண்டே நம்மையும் சிரிக்க வைப்பான். கள்ளங் கபடமற்ற ஆத்மா. சூது வாது ஒன்றுமே தெரியாது. யார் எதைச் சொன்னாலும் நம்பி விடும் சுபாவம் உள்ளவன். ஊரிலே இவனுக்குப் பகைவன் என்று சொல்லக்கூடியவர் யாருமில்லை. அப்படியிருந்தாலும் பகைவனுடன் நட்புக் கொண்டாடும் குணம் படைத்த வெகுளி! ஆனால் இவனுக்குக் கோபம் வந்தால் தாங்கவே மாட்டான் என்பதைச் சில தினங்களுக்கு முன்னால் தெரிந்து கொண்டேன். அதே மாதிரி கவலை வந்தாலும் தாங்க மாட்டான் என்பதை இன்று தெரிந்து கொண்டேன்!

'கிராமவாசிகளின் உடம்பு திடகாத்திரமாயிருப்பதைப் போல் உள்ளமும் திடமாயிருக்கும் என்று சொல்லுவார்கள். ஆனால் அப்புவிடத்தில் இரண்டும் தேவையான அளவுக்குக் கூட இல்லாமலிருந்ததுதான் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம்.

'அப்படீன்னா, நீ அடுத்த வாரத்துக்குள்ளே ரூபாய் நூறு சம்பாதிச்சாகணுமாக்கும்!' என்று கொஞ்சம் சிரித்துக் கொண்டே நான் கேட்டதும் அவனும் கொஞ்சம் சிரித்துக் கொண்டே 'ஆமாங்க, இந்த வாரச் சம்பளத்தை அடுத்த வாரம் கொடுக்கற ஆபீஸ்லே தானே நான் வேலை பாக்கறேன்?' என்று சலிப்புத் தட்டிய குரலில் பதில் சொன்னான்.

'உன் மகள் என்ன சொல்றா?' என்று நான் மீண்டும் விஷயத்துக்கு வந்தேன். அவனும் சிறிதளவு தெளிவுற்றவன் போல

ஒரு புகையிலைக் காம்பை வாயில் போட்டுக் கொண்டே, 'அது என்னு சொல்லுங்க? தம் புருசனை வரச் சொல்லிக் கடிதாசி எழுதச் சொல்றதுங்க. அவன் வராமட்டும் ரூபா வந்து தொப்புன்னு குதிச்சிடுமாங்கறேன்?'

'ஒரு வேளை அவன் சம்பாதிச்சு வச்சிருந்தான்னு?'

'ஆமாம் சம்பாதிச்சு மூட்டை கட்டி வச்சிருக்கான். கல்யாணமாயி மூணு வருசமாச்சாம். பொண்சாதியை அழைச்சிக்கிட்டு போய் ஒரு குடுத்தனம் வக்க வழியில்லையாம், சம்பாரிச்சுப்புட்டானும் சம்பாரிச்சு' என்று எளனமும், ஓரளவு ஆத்திரமும் கலந்த குரலில் பதில் சொல்லிவிட்டு, மீண்டும் அலுப்புடன் 'இதெல்லாம் கவைக்குதவாதுங்க! எல்லாம் தெரிஞ்ச விசயந்தானே?' என்று மருமகனைப் பற்றிய ஆராய்ச்சிக்கு முற்றுப்புள்ளியும் வைத்துவிட்டான். நான் அவனுக்கு வேறே என்ன சொல்ல முடியும்?

கோட்டை வேட்டைதான்! ஆனால் மூன்று வருஷ காலமாக காலூறு ரூபாய் கொடுத்துவிட்டு வட்டியுடன் ஐந்நூறு வரை ஏற்றியிருக்கும் மைனருக்கும் கூட இந்த ரூபாய்த் தேவைக் குறைவாகவோ இருக்கிறது?

'என்னமோ எதுவோ? எப்படியிருந்தாலும் ரூபாயைக் கொண்டு கட்டாட்டி மைனர் கேசிலே விட்டுடமாட்டாரு!' என்று தன் முடிவான தீர்மானத்தையும் சொன்னான். மைனரின் உள்ளத்தை மற்றவர்களை விட நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தான் அவன்.

'சின்ன மைனரு இந்தப் பக்கம் வந்தாலும் கொஞ்சம் விஷயத்தைச் சொல்லிப் பாக்கலாம்னு அவரையும் காணும். நம்ம அதிர்ஷ்டத்துக்கு யாரைச் சொல்லணும்' என்று தன்னைத் தானே நொந்து கொண்டான். எனக்கு மீண்டும் அந்த மைனர் குடும்பத்தைப் பற்றிய விஷயங்களைக் கேட்க ஆவலுண்டாகிவிட்டது.



கிராமவாசிகளுக்கு நூறு ரூபாயைக் காண்பது என்பது ஒரு அதிசயமான விஷயம். அவர்களுடைய பொருளாதார நிலையின் அளவுப்படி பார்த்தால், நூறு ரூபாய் என்பது மனக்

'சின்ன மைனருன்னு, இளைய மகனு அப்பு?' என்று நாசுக்கான முறையில் கேட்டேன். அவனுடைய நொந்த மன நிலையில் என் 'விசாரிப்பு' ஆத்திரத்தை மூட்டிவிடக்கூடாதே என்ற நினைவு.

'இதென்னுங்க இது? அன்னைக்கு ஒரு நாளு நான் உங்களுக்கு விசயத்தைச் சொல்லலியா, மைனரு இப்படித்தான் கொஞ்சம் கண்டிப்பாக் கேட்பாரு. பக்கத்திலே சின்னவரு இருந்தாரு. என் மொகத்தைப் பாத்துக் கிட்டே சும்மா இருந்தவரு இருந்தாப்பிலே யிருந்து 'அவன் திடீர்னு எங்கப்பா போவான் ரூபாய்க்கு? கொஞ்சம் பொறுத்துக் கிட்டா நமக்குத்தான் என்ன மோசம் வந்திடும்?' என்று தைரியமாக் கேட்டதும் மைனரு 'உம்' சரிதாம்பா சரிதான்'னு சொல்லிப் புட்டுப் புறப்பட்டாரு. அவுரு மட்டும் அன்னைக்குத் பக்கத்திலே இல்லாட்டிப் போனா எம்பாடு கொஞ்சம் மோசமாய்த்தான் போயிருக்குங்க' என்று தன் எஜமானிடம் நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொண்டான்.

'எப்பா அப்பு, அப்படீன்னு அந்தப் பையனைப் போய், நீ இப்போ பாத்தா என்ன?'

'அதெப்படி முடியுங்க? அவுரு இருக்கது செதம்பரம்; நான் இருக்கதோ உளுந்தூரு. முப்பது கல்லு நடக்கணுமே?'

'அப்படின்னா நான் நாளைக்குச் சிதம்பரம் போவேன். உன் விஷயமா வேணும்னு பேசுறேன். அதுவும் நீ பேசலாம்னுதான்' என்று சொல்லி விட்டு அவன் முகத்தை ஆர்வத்துடன் பார்த்தேன். சட்டென்று அவன் முகத்தில் சந்தோஷக் களை பரவியதைக் கண்டதும் எனக்கும் கொஞ்சம் சந்தோஷமுண்டாயிற்று.

'இன்னம் நாலு நாள்லே அவுரு இங்கே லீவுக்கு வாராம். நேரெப் போய்ப் பாக்கணுங்க. நீங்க செதம்பரத்துலே அந்தப் பையனைப் பாத்தாக்கூட உங்களுக்கும் ரொம்ப பிரயோசனம் உண்டுங்க.'

'அந்தப் பையன் பேரு என்னன்னு சொன்னே?'

'இங்கே சின்னத்துரென்னு கூப்பிடுவாங்க—அங்கே காலேஜுலே என்னன்னு பேருங்களோ தெரியாதுங்களே' என்று தன் அறியாமையைத் தெரிவித்துக் கொண்டு வருந்தினான். எனக்கு மைனர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருடன் சிநேகம் உண்டு என்பதை இவனிடம் காட்டிக் கொள்ளாமல் சின்ன மைனராயிருந்தால் இன்னும் விசேஷமில்லையா? என்ற நினைவு கொண்டவனாய் 'சரி அப்பு, அதைப் பற்றிக் கவலையில்லை. கோடங்குடி மைனர் வீட்டுப் பையன் என்றால் அங்கே யாராவது சொல்லுவார்கள். காலை மாலை நான் அங்கே ஒரு வேலையாகப் போகிறேன். அதிருக்கட்டும். நான் அன்று சொன்னேனே 'பெரியவங்க' பள்ளிக்கூட விஷயமாய் மறந்து விட்டாயா?' என்று என் விஷயத்தையும் அவனுக்கு ஞாபக மூட்டினேன்.

'எங்கேங்க அவனுகளைப் பாக்கமுடியுது; எனக்கு வேறே இந்தக் கஷ்டம். வர சனிக்கிழமை யண்ணிக்கு திரோபதையம்மன் கோயில்ல ஊரான் கூட்டம் போடறானுங்க. அப்ப சுக்கிரமணியண்ணன் கிட்டே சொல்றேங்க. அவுரு 'ஊம்'னு போதுங்க. அப்புறம் தபதபன்னு வந்திடுவானுங்க பயகள்ளாம். அவுருக்கு இந்த ஊர்லே அவ்வளவு மதிப்புண்டுங்க. மைனர் கூட அவுரு கிட்டே பிரிய முள்ளவருங்க'

என்று தன் முயற்சியைப் பற்றியும் விளக்கினான்.

'சரி அப்பு! பனி தாங்க முடியவில்லே. நாளைக்கு உன்னைப் பார்க்கிறேன். இல்லா விட்டால் இரண்டு மூன்று தினங்களில் வந்து பாரு,' என்று சொன்னதும் அப்பு எழுந்து துண்டை உதறிக் கொண்டே 'சரீங்க. என்னமோ நமக்குள்ளே ஒரு சினேகத்துக்கு மேலே ஒறவு உண்டாயிடிச்சு. ஊரானுவ கூட, என்ன இந்த அப்பு அண்ணன் அந்தக் கதர் சட்டைக் காரன் கூடவே சுத்திக்கிட்டிருக்காருன்னு பேசிக்கிறுங்க. ஆனு பொன்னி மட்டும் 'அவுரு தங்கமான மனிசன்னு நான் சொல்றேன். யாராவது இல்லேங்கட்டும் பாக்கலாம்' என்று அன்னைக்கு சண்டைக்கே வந்திடிச்சிங்க' என்று கல கல வென்று சிரித்துக் கொண்டே அவன் சொன்னதும் எனக்கும் சிரிப்பு உண்டாகி விட்டது. அவன் போன பிறகுங்கூட எனக்குண்டான சிரிப்புக் குறையாமலிருந்தது.

அத்தியாயம் இரண்டு.

கொள்ளிடம் ஸ்டேஷனுக்கும் சிதம்பரத்துக்கும் மத்தியில் ஒரே ஒரு ஸ்டேஷன்தான் இருக்கிறது. ஆனால் கொள்ளிடக் கரைச் சாலையில் சுமார் இருபது மைல் பிரயாணம் செய்தால்தான் கொள்ளிடம் ஸ்டேஷனுக்கு வர முடியும். சாலையின் இரு பக்கங்களிலும் மரங்கள் நெருங்கி வளர்ந்து பரவியிருக்கும் அழகை அனுபவித்துக் கொண்டே கட்டை வண்டியில் கையிலே கட்டுச்சாத மூட்டையுடன் பிரயாணம் செய்ய வேண்டும். மழை பெய்து விட்டாலோ லயங்கரைச் சாலைக் 'களி' யாகிவிடும். வண்டியேறி வருபவர்கள் இறங்கி வண்டியைத் தள்ள வேண்டும்! அப்பொழுதுதான் பிரயாண இன்பம் பேரின்பமாக இருக்கும்! இவ்வளவும் உளூந்தூர் கொள்ளிடக்கரை யோரமாய் இருப்பதனுல் தானே? என்று நினைத்தவுடன் எவ்வளவு வளமாயிருக்கும் தெரியுமா இந்த உளூந்தூர் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

ஆனுல் ஒரு சவுகரியம் இல்லாமல் இல்லே. கொள்ளிடத்தைக் குறுக்கே தாண்டினுல் அக்கரையில் ஜில்லா போர்டு ரஸ்தாவை அடையலாம். எப்பவாவது ஒரு பஸ்ஸையும் பிடித்து விடலாம். ஆனுல் உளூந்தூரார் நோக்கப்படி 'இது நம் அதிர்ஷ்டத்தைப் பொறுத்த விஷயம் தான்!

இருந்தாலும் அன்று எனக்குக் கொஞ்சம் அதிர்ஷ்டம் இருந்தது போலும்! ராஜன் வாய்க்கால் கரையைச் சேர்ந்ததும் எப்படியோ ஒரு பஸ்ஸையும் பிடித்து விட்டேன்! சமீப காலத்தில் அதாவது உளூந்தூருக்கு நான் வந்தது முதல் எனக்குக் கொஞ்சங் கொஞ்சம் அதிர்ஷ்டம் அடித்தது என்று கூட (அப்புப் படையாச்சி பாஷையில் கூற வேண்டுமானுல்) சொல்லலாம்!

சிதம்பரம் ஸ்டேஷனுக் கெதிரில் இருந்த ஹோட்டலுக்குச் சிற்றுண்டி சாப்பிடச் சென்றேன். அங்கே வாசலில் இரண்டு மூன்று கார்களும் போலீஸ்காரர்கள் சிலரும், வேறு சில பிரமுகர்களும் நின்று கொண்டிருந்ததைக் கண்டதும் சிதம்பரத்துக்கு யாரோ ஒரு பிரமுகர் வரப்போகிறுர் என்று தெரிந்து கொண்டேன. ஹோட்டலின் பக்கத்தில் பலகாரம் சாப்பிட்டுக்

கொண்டிருந்த ஒருவரிடம் விஜயம் செய்யும் பிரமுகரைப்பற்றிய விஷயங்களைக் கேட்டுச் சில விவரங்களைத் தெரிந்து கொண்டேன்.

அதாவது இந்த ஜில்லாவிலேயே பிரபல பிராசுகாரரான கோடங்குடி மைனர் அவர்களின் மருமகன் சென்னையிலிருந்து வருகிறார். அவரை வரவேற்க ஜில்லா கலெக்டர்கூட வந்திருக்கிறார். அத்துடன் அவர் சகலரான மத்திய சர்க்கார் ரகசியப் போலீஸ் இலாகாவைச் சேர்ந்த ஒருவரும் வருகிறார். இன்று காலையிலிருந்தே இங்கே மைனர் குடும்பத்தார் வந்து 'காம்ப்' போட்டிருக்கிறார்கள். அதற்குத்தான் இவ்வளவு தடபுடல் படுகிறது' என்று விவரம் தெரிவித்தார் உடனிருந்தவர்.

' இந்தச் சந்தர்ப்பத்திலே அந்தப் பையனைச் சந்திக்க முடியுமா என்று எண்ணியபடி ஹோட்டலைவிட்டு வெளியேறினேன். நான் ஹோட்டலில் இருந்து இறங்கிய சமயமும் ரயில் வந்து நிற்கும் சமயமும் ஒன்றாயிருந்தன. நான் எந்தப் பையனைச் சந்திக்க ஸ்டேஷனுக்கு வந்திருந்தேனோ அதே பையன் எனக்கு எதிரிலே நின்றுகொண்டிருந்தான் என்றால் வியப்பான விஷயம்தானே! ஆனால் இதைவிட வியப்பான விஷயம் என்னவென்றால் நான் சென்னையிலிருந்து வரும் ஒரு நண்பனைச் சந்திக்கத்தான் அங்கு வந்தேன். ஆனால் அந்த நண்பன் இந்த மைனரின் மூத்த பிள்ளைதானா என்று நான் சொன்னால் உங்களுக்கு இன்னும் பன்மடங்கு வியப்பு உண்டாக இடமுண்டாகிறதல்லவா? அன்று நான் எதிர்பார்த்தது அவனை மட்டும் அல்ல அவன் மணந்துகொள்ள விரும்பும் சகுந்தலாவையும் எதிர்பார்த்தேன்.

ஆனால் மைனர் மகன் என்னுடன் கூடப் படித்தவன் என்றோ அவனுடைய அந்தரங்கங்கள் யாவும் எனக்குத் தெரியும் என்றோ நான் இங்கே யாரிடமும் கூறினதில்லை. அப்புப் படையாச்சி எனக்கு ரொம்பவும் வேண்டியவனாகவும் இருந்தும் நான் சொல்லாமல் இருந்ததற்குக் காரணம் ஏற்கனவே எனக்கும் மைனர் மகனுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படிதான்! நான் இன்று இங்கே வந்து இருப்பதற்குக் காரணமே அவன்தானே?

சென்னையிலிருந்து முந்தாநாளே தந்தியடித்திருந்தான். தானும், சகுந்தலாவும் ஊருக்கு வரப்போவதாகவும், தங்களை ஸ்டேஷனிலேயே வந்து சந்திக்க வேண்டுமென்றும் தந்தி வந்தது. ஆகவே அவர்களிருவரையும் சந்திக்க மற்றவர்களைப் போலவே இல்லை, இன்னும் அதிக ஆர்வத்துடனேயே ரயில் அண்டை ஓடினேன்.

புதிய புத்தகங்கள்

புதுமைப் பெண்: மாதப் பத்திரிகை. ஆசிரியை: 'குகப்ரியை' விலை அணா எட்டு.

சமீபத்தில் வெளி வந்துள்ள பத்திரிகைகளிலே 'புதுமைப் பெண்' குறிப்பிடத்தக்கதாகும். 'குகப்ரியை' இந்தப் பத்திரிகையின் ஆசிரியையாக இருக்கிறார். முதல் இதழிலேயே வெற்றிப் படி பேறும் வகையில் வெளி வந்துள்ளது. டாக்டர் முத்து லக்ஷ்மி போன்ற பிரபல பெண் மணிகள் கட்டுரை, கதைகள் எழுதி யுள்ளனர். அழகான அட்டைப் படத்துடன் நல்ல முறையில் வெளியாகி யிருக்கும் இப் பத்திரிகையின் விலை அணா எட்டு. அதிகமில்லை. பொதுவாக அனைவரும், குறிப்பாகப் பெண்கள் யாவரும் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களைத் தாங்கி யுள்ள இப் பத்திரிகையை வரவேற்கிறோம்.

வெண்மதி: ஆசிரியை டாக்டர் டி. எஸ். ராஜலக்ஷ்மி விலை அணா 6.

இதுவும் பெண்களின் முன்னேற்றங் கருதி வெளி வரும் மாதப் பத்திரிகையென அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் செம்மையான முறையில் விஷயங்களைத் தாங்கி வருமானால் இதன் எதிர்காலம் வெற்றிகரமா யிருக்க முடியும். இதில் சிறுவர் பகுதி, சினிமாப் பகுதி, ஹாஸ்யப் பகுதி முதலிய எல்லாப் பகுதிகளையும், இணைத்து சகலரும் படிக்க வேண்டுமென்று முயற்சித்திருப்பது பாராட்டத் தக்கதுதான்,

யுவதி: ஆசிரியர் 'ஆர்வி' வெளியிட்டோர், 'தமிழ்ச்சுடர்' நிலையம், சென்னை. விலை ரூபாய் ஐந்தரை.

சில காலத்துக்கு முன் 'சிறு கதை'கள் தமிழ் நாட்டினரிடையே ஏராளமாகப் படையெடுத்தன. பிறகு 'நாவல்கள்' இந்தச் சிறு கதைகளை ரஸிகர்களை எப்படியோ கொஞ்சம் அதிகமாகவே வசீகரித்து விட்டன. நம் தமிழ் நாட்டிலே நல்ல நாவல்கள் வருவதேது? என்று ஏங்கியவர்களின் மனம் கொஞ்சம் நிம்மதி யடையலாயிற்று. ஒரு சில நல்ல நாவல்கள் வெளி வந்தன. சிறந்த நாவலாசிரியர்களும் நம்மிடையே தோன்றினார்கள்.

'யுவதி' சமீப காலத்தில் வெளியான நல்ல நாவல்களில் ஒன்று. ஏறக்குறைய 600 பக்கங்கள் வரை நீண்டுள்ள இந்த நாவலில் கதைப் போக்கும் வசன நடையும் பாராட்டத் தக்கது. என்றாலும் இன்னும் சிறந்த நாவலை எழுதுவதற்கான திறமையும் கற்பனை ஆழமும் உள்ளவர் இந்நூலாசிரியர் என்பதைக் காட்டும் பலகணியாக 'யுவதி' விளங்குகிறது என்று சொல்வது தான் சரியான முறையில் மதிப்பிடுவதாகும்.

துன்பக்கேணி: (ஜெர்மன் நாவல்) எழுதியவர் எரிக் மரியா ரிமார்க: மொழி பெயர்ப்பு: எஸ். எஸ். மாரிசாமி. வெளியிட்டோர்: தமிழ்ச்சுடர் நிலையம் சென்னை. விலை ரூபாய் ஆறு.

ஜெர்மானிய நாவலாசிரியர்களின் எழுத்து வன்மையை விமர்சன நோக்குடன் மதிப்பிடும் அளவுக்கு அப் பாஷை நாவல்கள் தமிழிலே வரவில்லை. எரிக் மரியா ரிமார்க் யுத்த கால நாவல்கள் எழுதிப் பிரசித்தி பெற்றவர்களில் ஒருவர். கொஞ்ச காலத்துக்கு முன் இவர் கதையொன்று சினிமாப் படமாகக் கூடத் தயாரிக்கப்பெற்று வெளி வந்தது.

'துன்பக்கேணி' இவருடைய நல்ல நாவல்களில் ஒன்று. யுத்தக் கொடுமைகளில் சிக்கிய ஐரோப்பாவின் பாமர மக்கள் படும் துன்பங்களை படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். சோகத்தின் சாயை படிந்த முகத்துடன் நமக்குக் காட்சியளிக்கும் பாத்திரங்களை சித்தரித்திருப்பதை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இத்தகைய நாவல்களை தமிழ் மக்கள் எத்தகைய ருசியுடன் படிக்கிறார்கள் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். மொழி பெயர்ப்பாளர் மிக்க சிரத்தையும் சிரமமும் எடுத்துக்கொண்டிருக்கிறார். ஆயினும் மொழி பெயர்ப்பைப் படிக்கும்போது மூல நூலைப் படிக்கும்போது ஏற்படும் உணர்ச்சி வேகம் ஏற்படுமானால் மொழிபெயர்ப்பு வெற்றி பெற்றதற்கு எடுத்துக் காட்டாகும்.

மேற்கண்ட இரண்டு புத்தகங்களையும் நல்ல முறையில் அழகான வகையில் உருவாக்கியுள்ள தமிழ்ச்சுடர் நிலையத்தாரையும் பாராட்டுகிறோம்.

'பல்குனன்'



இன்பத்தைத் தேடித் தேடி என்ன நீ கண்டாய் அன்பா! துன்பச் சோர்வும் நலிவும், தொகையிலா வலியும் தானே? அள்ள அள்ளக் குறையா அறிவை நீ தேடியதுண்டோ அறிவினால் இன்பமுண்டு அழிவில்லை நிறைவுமுண்டு அறிவினால் ஆண்மையுண்டு, அழகு, பெருமையுமுண்டு அறியாமற் போனதேன் நீ அறிந்தும் மறந்தனையோ?

"ரூபசிக"